
# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜூலை 2017



சத்திய சாயி சர்வதேச நிறுவனம் - ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சஞ்சிகை



விருந்தினர்களை அழைத்து வரல்



முதல்நாள் நிகழ்வில் கலந்து கொண்டோர்



பொன்விழா மலர் வெளியீடு



பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்வுகள் - கிழக்குப்பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 24
இதழ்: 58

ஜனவரி
ஜூலை
2017

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 60.00
வருடச் சந்தா ரூபா 240.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

## உள்ளே......

| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| யாழ்ப்பாண நிலையத்திற்கு வயது 50 | 04 |
| கடவுளைக் காணுதல் | 05 |
| பாதிரியாரின் பிரசங்கம் | 08 |
| உயிர்களிடத்தில் அன்பு வேணும் | 09 |
| ஆபத்தில் காத்த அந்தர்யாமி | 13 |
| ஆபத்தில் காத்த அந்தர்யாமி | 14 |
| சுவாமி எனக்கு வழங்கிய கட்டளை | 16 |
| அன்பு | 18 |
| அன்பே மனித இயல்பு | 22 |
| இயற்கையில் அன்பு | 24 |
| சமுகத்தில் அன்பு | 25 |
| அன்பு ஓர் மகா சக்தி | 27 |
| அன்பு ஓர் மகா சக்தி | 29 |
| அம்மாவின் அன்பு | 30 |
| மகா மிருத்துன்ஞய யாகம் | 33 |
| சர்வமத விழா | 34 |
| குருவருளில் மாணிக்கவாசகர் | 41 |
| சாதகர்களுக்கு ஓர் அறிவுரை | 47 |
| நிறுவனச் செய்திகள் | 48 |

TRUTH RIGHT CONDUCT PEACE LOVE NON VIOLENCE

**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# நான் யார் ?

நாம் எப்போதும் மற்றவர்களை யார் நீங்கள் என்று கேட்போம். அவர்களும் தங்கள் பெயர் விலாசங்களைச் சொல்வார்கள். நாம் யார்? என்று கேட்பது மிகவும் அருமை. அப்படிக் கேட்டாலும் எனது பெயர், அந்தஸ்து வம்சாவளி முதலியனவே மனதில் எழும். ஆன்மீகம் நான் உண்மையில் யார் என்று புரிவதேயாகும்.

ஒருமுறை பகவான் தனது மாணவர் களுடன் உரையாடும் பொழுது, தான் கேட்கும் கேள்விக்கு சரியான பதில் தரும் மாணவனுக்குப் பரிசு கொடுப்பேன் எனச் சொன்னார். மாணவர்கள் உத்சாகத்துடன் கேள்விகளுக்காக் காத்திருந்தார்கள். சுவாமி கேட்ட கேள்வி: நான் யார்? என்பதேயாகும். பதில்கள் வந்தன..
சுவாமி நீங்கள் கடவுள் - பிழை
சுவாமி நீங்கள் அவதார் - பிழை
சுவாமி நீங்கள் மனித உருவில் கடவுள் - பிழை

மாணவர்கள் சரியான பதிலை பகவானிடமிருந்து எதிர்பார்த்தார்கள். சுவாமி "நான் நான் தான் என்றும் மாணவர்கள் நீங்கள் நீங்களே தான் என்று பதிலளித்திருக்க வேண்டு மென்று சொன்னார்.

பெயர் உருவமில்லாத பிரபஞ்சப் பேருணர்வு தான் எமது உண்மையான நிலை. இதை "தான்" என்றும் அல்லது நான் என்றும் வழக்கமாகச் சொல்வது தேகாபி மானத்திலிருந்து எழும் எண்ணமாகும்.

"தான் என்பதை உணர்வதற்கு நான் என்னுடையது என்ற அகங்காரம் ஆத்மாவில் அடங்க வேண்டும். நான் அல்லது தான் என்பது தான் கடவுளின் முதற்பெயரென்று பகவான் கூறியுள்ளார். இதை நாம் தியானத்தின் போது தான் உணரலாம்.





இந்த அத்வைதத் தத்துவத்தை எம்மால் முடிந்தளவு விளங்க எத்தனிப்போம். ஜனகச் சக்கரவர்த்தி நித்திரையில் தான் ஒரு கைதியாக இருப்பதாகக் கனவு கண்டார். விழித்ததும் தனது குருவிடம் நான் விழிப்பு நிலையில் சக்கரவர்த்தி யாகவும் கனவு நிலையில் கைதியாகவும் இருந்தேன். இதில் எது உண்மை என்று கேட்டார்.

குரு நீங்கள் கண்ட இரு நிலைகளும் உண்மையல்ல. உண்மையில் நீங்கள் ஆத்மாவே என்று விளக்கம் கொடுத்தார். நாம் எமது உடலிலுள்ள அங்கத்தை எடுப்போம். கைககளை எடுத்தால் இது என்ன? என்றால் கைகள் என்று சொல்வோம். இது யாருடையது? என்றால் என்னுடையது எனச் சொல்வோம். இந்த உரிமை கோருவது யார்? யாரோ உள்ளே இருந்து உரிமை கோருகிறார். அது தான் அகம், தான், நான் அல்லது ஆத்மா என்பதாகும்.

இரவில் நித்திரையில் காணும் கனவு உண்மை போலத் தோன்றும். கனவு கலைந்ததும் உண்மையற்றதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்கிறோம். ஆன்மீகத்தில் விழிப்பு நிலையில் நாம் செயற்படுவதெல்லாம் பகற்கனவென்று சொல்லப்படுகிறது. ஞான நிலையடைந்ததும் இதுவும் கனவே என்பது தெரிந்து விடும். விழிப்பு நிலையும் நிலையானதல்ல என்றால் நாம் ஏன் பலவிதத்தில் செயற்பட வேண்டும். ஏதோ படைப்பிலே எமக்கு ஒவ்வொருவருக்கும் கதா பாத்திரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. நாம் திறமையாக அறநெறிப்பாதையில் செயற்பட்டு எமது நடிப்பை முடிக்க வேண்டும். நடிப்பிற்காக எமக்கு பல வேடங்கள் தரப்பட்டுள்ளன. எம்மிலும் பார்க்க மற்றவருடைய வேடம் கவர்ச்சியாக இருப்பின், அதை நாம் கணக்கெடுக்கக் கூடாது. உலகமே நாடக மேடை அதில் நாம் ஒவ்வொருவரும் நடிகர்களே. என்று ஆங்கிலக் கவிஞர் சேக்ஸ்பியர் கூறியுள்ளார். வேடங்கள் பலவானாலும் எல்லோரும் ஆத்மாக்களே என்பதை மறக்கக்கூடாது.



பகவான் பலதடவை நாம் மூன்று ஆளுமைகளில் செயற்படுகிறோம் என்று கூறியுள்ளார். அவையாவன:
1. உன்னைப் பற்றி நீ நினைப்பது
2. மற்றவர்கள் உன்னைப் பற்றி நினைப்பது
3. உண்மையிலே நீ யாரென்று உணர்வது.

முதலாவது தேக அடிப்படையில் எழுவது
இரண்டாவது மனதின் செயற்பாட்டில் அமைவது
மூன்றாவது ஆத்மாவில் நிலைத்திருப்பது என்பனவாகும்.

நான் யார் என்ற விசாரணையில் ஏற்படும் குழப்பம். இரண்டு நான்கள் இருப்பதேயாகும். உலகிலுள்ள எல்லாவற்றிற்கும் ஆதாரம் ஆத்மாவேயாகும். இந்த ஆத்மா விலிருந்து எழுந்ததுதான் புத்தி, மனம், ஐம்புலன்களுடன் சேர்ந்த உடம்பு. ஆத்மாவிலிருந்து எழுவதுதான் அடிப்படை யான நான் (I) ஆத்மாவிலிருந்து எழுந்த மனம் புலன்களுட னுள்ள உடம்புடன் சேர்ந்த பொழுது சிறிய நானாகச் செயற் படுகிறது. ஆத்மாவிலிருந்து எழுந்த மனம் ஆத்மாவை மறை த்தும் மறந்தும் விடுகின்றது. இப்பொழுது அகங்காரம் கொண்ட நான் புலனாதிக்கத்தில் செயற்பட்டு 6 உள்எதிரிகளையும் தோற்றுவிக்கிறது. மனம் என்கின்ற திசை நீங்கினால் ஆத்மா தானாகவே பிரகாசத்துடன் உடலை இயக்கிக் கொள்ளும்.

மறைத்தல் மறத்தல் ஆகியவற்றிலிருந்து விடுபடு வதற்கு நாம் சாதனைகள் புரிய வேண்டும். அகங்காரம் ஒழிய வேண்டும். மனம் தூய்மையடைந்து ஆத்மாவில் அடங்க வேண்டும். இதைத் தான் நாம் புல்லாங்குழலாக மாறினால் ஆண்டவனின் நாதம் கேட்குமென்று வினக்கம் கொடுக் கிறார்கள்.

ஆத்ம அனுபூதி அடைவதற்கு மனதைப் பற்றிய துல்லியமான விளக்கம் ஏற்பட வேண்டும். அகங்காரத்தை அழிப்பதற்கு பக்தி, கர்ம, ஞான மார்க்கம் என்ற மூன்று பாதைகள் உள்ளன ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றிலும் விருப்பம் ஆற்றல் இருக்கும். நமக்குரிய பாதையில் நாம் சென்று ஆத்ம அனுபூதியை அடைய வேண்டும்.

நான் நான் தான். I am I

- ஆசிரியர்

உசாத்துணை நூல்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்திற்கு

# வயது 50


யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் இந்த வருடத்தைப் பொன்விழா வருடமாக கொண்டாடி வருகிறது. மாதம் தோறும் விசேட சொற்பொழிவுகள், சேவைத்திட்டங்கள் ஆகியன நடாத்தப்பட்டு வருகின்றது.

1967 ஆம் ஆண்டில் பகவான் பாபாவைப் பற்றி அதிகம் அறியப்படாத வருடம். அவர் இறைவன் என்று கூறினால் கேலி செய்யும் காலம். அந்தக் காலத்தில் பல எதிர்ப்புக்கள், அவமதிப்புக்கள் மத்தியில் துணிந்து இந்தப் பெரிய மண்டபத்தை அமைத்தவர்கள் உண்மையிலேயே போற்றப்பட வேண்டியவர்கள். சென்ற வருடம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிராந்தியம் 3 வலயம் 4 இற்கான மத்திய இணைப்பாளர் - .அமர்காகி அவர்கள் "இது போன்ற ஒரு பெரிய மண்டபத்தை நான் உலகில் எங்கும் காணவில்லை" என்று கூறியது இந்த மண்டபத்தின் பெருமைக்கு ஒரு சான்று.

இன்று பகவானின் செய்திகள், வழிகாட்டல்கள், பயிற்சி முகாம்கள் போன்றன வடபிராந்தியத்தில் அதிகமாக நடந்த தென்றால் அதற்கு இந்த மண்டபமும் ஒரு காரணம். வடபிராந்தியத்தில் பெரிய நிகழ்வுகள் எல்லாம் இங்கேயே நடத்தக்கூடிய வாய்ப்பும் வசதியும் உண்டு.

இவ்வளவு பெரிதாக கட்ட வேண்டும் என்று சிந்தித்து செயற்பட்ட மும்மூர்த்திகளை





இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமாகும்.

திரு.செ.சிவஞானம், திரு.வி.கே.சபாரட்ணம், திரு.எஸ்.விஜயரட்ணம் ஆகியோரூடாக பகவான் யாழ்ப்பாணத்திற்கு இந்த வரப்பிரசாதத்தை வழங்கியுள்ளார்.

இந்நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் ஜூன் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை வெகு சிறப்பாகவும், விமர்சையாகவும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் ஏறத்தாள தினமும் 650 பக்தர்கள் அளவில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் மத்திய பிராந்தியம், கிழக்குப் பிராந்திய இளைஞர்களின் நிகழ்வுகளும் இடம் பெற்றது. நிகழ்விற்கு விசேட அதிதியாக தற்போதய தமிழ்நாட்டு மாநில இளைஞர் தலைவரும், பாலவிகாஸ் பயிற்சியாளருமான ஸ்ரீ.வி.விஜயகிருஸ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். அவரின் உரைகள் மற்றும் கேள்வி பதில்கள் என்பன அடுத்த சாயி மார்க்கம் இதழில் பிரசுரமாகும்.

கடந்தகால செயற்பாடுகளுக்காக பராட்டும், எதிர்கால செயற்பாடுகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் " சாயி மார்க்கம்" மனநிறைவடைகிறது.

ஜெய்சாயிராம்

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காணுதல்

(இந் நூலின் ஆசிரியர் சால்ஸ் பென் - Charles Penn) அவர்கள் ஆஸ்திரேலியாவில் பிறந்து அமெரிக் காவில் வாழ்ந்தவர். 1966 இல் பகவானை ஏற்றுக் கொண்டவர். பகவானே இந்நூலை எழுதும்படி தூண்டி அதில் தனது கையொப்பத்தையும் வைத்துள்ளார்)

இந்நூல் சால்ஸ் அவர்களுக்கு சுவாமி எழுதிய கடிதமேயாகும்.
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா
பிரசாந்தி நிலையம்
ஆனந்தபூர் (ஆந்திர பிரதேசம்)
Phone No. 30

நீண்டகாலம் தேவாலயங்களிலும் கோயில்களிலும் பூவுலகிலும் மேலுலகிலும் தேடிக் கடைசியாகத் திரும்பி வந்துள்ளாய். தொடங்கிய இடத்தையே திரும்பவும் அடைந்து வட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளாய். எதற்காக எங்கெல்லாம் தேடி கண்ணீர்விட்டு, பிரார்த்தித்து மர்மத்திலும் மர்மமானதென்று தேனாயோ அது உன்னிடமே உறைந்துள்ள தென்பதை அறிந்துகொண்டாய். அதுவே உனது உயிர், உடல், எல்லாவற்றிற்கும் ஆதாரம். இதுவே உனது இயல்பு. அதை ஆணித்தரமாக ஏற்று வெளிப்படுத்து அதுவே சத்தியம். சத்தியத்தையும் தர்மத்தையும் பின்பற்றினால் உனது உடலுக்கு ஒரு காயமும் வராது.

தியானம் என்பது ஆசைகளை விட்டு மேலெழும் நிலையேயாகும். துறவறம் என்பது தீமைகளுக்கு எதிராகப் போராடி மனதைக் கட்டுப் பாட்டில் வைத்திருப்பதேயாகும்

(கையொப்பம்)

நான் உன்னை ஆபத்தான விபத்திலிருந்தும் மரண வியாதியான பெருமூளை தொற்றிலிருந்தும் காப்பாற்றியுள்ளேன். ஆன்மீக ஈடுபாடு உனது 12 வயதிலேயே தொடங்கியது. அந்த வருடம்தான் நான் பூவுலகில் அவதரித்தேன். நீ உலகமகா யுத்தத்தின்போது எத்தனையோ ஆபத்துகளிலிருந்து காப்பாற்றப்பட்டாய். சாயி அவதாரத்தின் போது எல்லா ஆன்மாக்களும் மேம்படுத்தப்படும்.

எது சரி எது பிழையென்று எல்லா நேரமும் தீர்மானிப்பது இலேசானது அல்ல. கீதையில் கிருஷ்ணர் "இது தான் பாதை, தர்மங்களை விட்டு விட்டு என்னிடம் பூரண சரணாகதியடையவும். துன்பப்படத் தேவையில்லை. நான் உனது கர்ம பலன்களிலிருந்து உன்னை விடுவிப்பேன்" என்று கூறியுள்ளார்.

பேராசிரியர் கஸ்தூரி அவர்கள் எழுதிய "சத்தியம் சிவம் சுந்தரம்" (1965) என்ற புத்தகமே பகவானை எமக்கு அறிமுகப்படுத்தியது.

இப்புத்தகத்தை அமெரிக்காவில் வெளியிட பகவானுக்குக் கடிதம் எழுதினேன். அவர் உத்தரவு தந்தது மாத்திரமல்ல, பின்வரும் பேரறிவையும் எழுதியிருந்தார்.

"நீ எனக்கு எவ்வளவு அருகில் இருக்கிறாயோ அவ்வளவு அருகில் நான் நிற்பேன். நாமத்தை உச்சரித்ததும் உருவம் வெளிப்படும். உருவத்தை நினைத்ததும் நாமம் வெளிப்படும். நாமமும் உருவமும் பிரிக்க முடியாதவை. இதுதான் எங்கும் எப்போதும் வியாபித்திருக்கும் தன்மையாகும்."

அவரின் அருளாலும் போதனைகளாலும் நான் அவருடன் ஒன்றாகிய உணர்வு ஏற்பட்டது. 1965 இல் எழுதிய கடிதத்தில் மிகவும் ஆழமான அறிவுரை கிடைத்தது. அது பின்வருமாறு

"உனது கைகள் எப்போது சேவைக்காக உதவி செய்வதற்காக ஒருவரைச் சாந்தப்படுத்த ஒருவரை உற்சாகப்படுத்த உயர்த்தப்படுகிறதோ அக் கைகள் கடவுளுக்காக உயர்த்தப்பட்டவையாகும். கடவுள் ஒவ்வொரு மனிதனிலுமுள்ளார்".

பிரம்ம மார்க்கத்தை தொடங்க முன், உன்னில் இருக்கும் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மார்ச்சர்யம் என்ற ஆடைகளைக் கழற்றி விடு. உடல் குளிரினால் பாதிக்கப்படாது. அது அன்பெனும் கவசத்தால் பாதுகாக்கப்படும். ஆண்டவனுடன் தொடர்பை ஏற்படுத்திய பின்பு பல சந்தேகங்களும் பிழையான விளக்கங்களும் கலைந்துவிட்டன. இயற்கையை இரசிக்கத் தெரிந்தாலே இந்த தொடர்பை வளர்த்துக்கொள்ளலாம்.

சுவாமியின் பணி தீவிரமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. பிரசாந்தி நிலையத்திற்கு வந்தவர்களிலும் பார்க்க கோடானுகோடி மக்கள் பரந்த உலகில் சுவாமியின் அன்பை அனுபவித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறார்கள். சுவாமி தந்த தன்னம்பிக் கையினால் எனது 74ஆவது வயதில் மரதன் ஓட்டத்தில் முதலாவதாக வந்தேன்.

மனிதனுடைய நோக்கில். தான் ஏதோ பெரிதாக முன்னேறிவிட்டதாக நினைக் கிறான். ஆனால் தெய்வமோ மனிதன் முதலடியைக் கூட எடுத்து வைக்கவில்லை யென்று கூறியுள்ளார். ஒருசிலரே சுவாமியின் தூதர்களாகச் செயற்பட முன் வந்துள்ளார்கள். அகங்காரம் பிடித்த மனிதனிடத்தில் பணம் சேர்ந்தால் மிகவும் அழிவைக் கொண்டுவரும். பணமும் தர்மவழியில் செலவிட்டால் அதுவும் தெய்வீக அன்பு சத்தியமாக மாறலாம்.

தெய்வீகப் பேரன்பு சக்தி எந்தவித மாற்று சக்திகளையும் மேன்மையானதாக மாற்றிவிடும். தெய்வீக சக்தி உலகத்தையும் உலகிலுள்ள அனைத்தையும் படைத்தது. மனித சக்தி பிழையான வழியில் கீழ்நோக்கிச் செல்கிறது. இந்த வீழ்ச்சியை சாயி அவதாரம் மாற்றுகின்றது. இந்த அறிவுரை காலை 1.00 மணி, 24.07.1990 அன்று தரப்பட்டது.

உன்னுடைய உண்மையான நிலையை அறிந்துகொண்டால்தான் என்னுடைய நிலையை ஓரளவு விளங்கிக் கொள்ளலாம். ஸ்தூலம் ஸ்தூலத்தையே விளங்கும். கரி தணலுடன் சேர்ந்தால்தான் தணலாக மாறும். பிரம்மத்தை புத்தியால் அடையமுடியாது.

ஒருமுறை ஒரு கவிஞர் பகவானிட மிருந்து விடைபெற்றுச் செல்ல ஆயத்தமாகிய போது அவர் "பகவான் இனிமேல் என்னிடம் காவுவதற்கு ஒன்றுமில்லை. பறவையைப்போல் பறந்து எல்லாவிடமும் அவதாரின் பிரசன்னத்தை பறைசாற்றுவேன்." என்றார்.

இதற்கு பகவான் "இல்லை அந்தப் பறவையின் இறகுகளை வெட்டி ஒரு இடத்தில் தரிக்க வைப்பேன். எனது வருகையைப் பற்றி நீ சொல்லத்தேவையில்லை. அதற்கு உன்னைத் தகுதியாக்கிக் கொள். உன்னிடம் சந்தேகங்கள் இருக்கும்பொழுது என்னைப்பற்றி எவ்வாறு கூறுவாய்" என்று சொன்னார்.



நீ அச்சத்திலிந்து விடுபடுவது மட்டுமல்ல, எதிர் பார்ப்புகளிலிருந்தும் விடுபடவேண்டும். எனது ஞானத்தை நம்பு. நான் பிழைவிடமாட்டேன். எனது நிச்சயமற்ற தன்மையை நேசிக்கவேண்டும். அது எனது சங்கல்ப்பம். எனது விருப்பமின்றி ஒன்றும் நடைபெறாது. அசையாமல் இரு. விளக்கம் கேட்கவும் வேண்டாம். அதை விரும்பவும் வேண்டாம். விளங்கவேண்டுமென்பதை அறவே கைவிட்டு விட வேண்டும்.

நீ பார்க்கும் பக்தர்களின் எண்ணிக்கையை விடப்பலர் என்னைப் பார்க்கவேண்டுமென்று பல பாகங்களிலும் உள்ளார்கள். எல்லோருக்கும் எனது ஒளியையையும் அன்பையும் கொடுத்து விடுதலைப் பாதையில் முன்னேற உதவி செய்கிறேன்.

எனது தரிசனத்திற்கு வருகின்றவர்கள் அதிர்ஷ்ட சாலிகள். அவர்கள் சத்தியத்தை உணர ஆயத்தமாகி விட்டார்கள். என்னை எனது உடலுருவத்தில் காணவேண்டு மென்று தவிப்பவர்களின் பிரார்த்தனைக்கு அருள் செய்வேன்.

## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்**

**கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.**

**இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - saischoolmail@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமானவர்கள் எனது பௌதீக நிலைத் தரிசனத்தைப் பெறமாட்டார்கள். இவர்கள் சிநேகிதன் மூலமோ, புத்தகநூல் மூலமோ அல்லது எனது புகைப்படம் மூலமோ எனது தரிசனம் கொடுக்கின்றேன். எல்லா நாமங்களும் உருவங்களும் நானே என்றுணர்ந்து தியானத்தின் போது சாந்தியையும் கிருபையையும் கொடுக்கின்றேன். நான் என்ற அகங்காரம் அழியும் வரைக்கும் பகவானின் பார்வையிலிருந்து தப்பமுடியாது.

அஸ்வதா மரத்தைப்பற்றி அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கேட்டார். "அது ஒரு மரம்தானே? அது ஜீவனைத்தானே குறிக்கிறது என்று கேட்டார்."

**கிருஷ்ணபகவான் சொன்னது:**

"சம்சார விருட்சம் மிகவும் விசித்திரமானது. அது உலகிலுள்ள மரங்களைவிட வித்தியாசமானது. உலகிலுள்ள மரங்களின் வேர்கள் கீழேயும், கொப்புகள் இலைகள் எல்லாம் மேலேயும் உள்ளன. அஸ்வதா என்ற சம்சார விருட்சத்தின் வேர்கள் மேலேயும், கொப்புகள் இலையும் கீழே உள்ளன.

அஸ்வதா என்றால் நிலையற்றது. அது அரசமரத்தையும் குறிக்கும். அதன் பூக்களோ காய்களோ நறுமணம் அற்றவை. உண்ணவும் முடியாது. அதனுடைய இலைகள் காற்று வீசாவிட்டாலும் எந்நேரமும் ஆடிக்கொண்டே இருக்கும் இதைப்போல உலகப் பொருட்களும் மாறுதல் அடைந்து கொண்டேயிருக்கும். மக்களுக்கு இந்த உண்மையை அறிவுறுத்துவதற்காக "அஸ்வதா" என்று குறிக்கப்பட்டுள்ளது.

உலகத்தை இரு விதமான விசாரணைகள் மூலம் பார்க்கலாம். புற விசாரணை அகவிசாரணை என்ற இரண்டுமேயாகும். உலகத்தை உலகம் என்று பார்ப்பது பிழை. இது பந்தத்தை உண்டாக்கும். உலகத்தைப் பரமாத்மா என்று பார்ப்பது சரி. இது விடுதலையைக் கொடுக்கும். பிரம்மம்தான் காரணம். உலகம் அதன் விளைவு. விளைவும் காரணத்தின் ஒருவித மாற்றத் தோற்றமேயாகும். உலகிலிலுள்ள உயிரினங்கள்தான் இலையும் கொப்புகளும், விதைதான் பிரம்மம் அதற்குள் முழு மரமும் அடங்கியிருக்கிறது. இதை அறிந்தவன் வேதத்தை அறிந்தவனாகின்றான்.

நாம் வயதைக் கணிக்கும் பொழுது கருவிலிருந்த காலத்தைச் சேர்ப்பதில்லை. பகவான் அதையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லியுள்ளார். 03.08.1979 அன்று பி.பகல் 4.45 மணிக்கு நான் அமெரிக்காவிலுள்ள அலுவலகத்தில் இருக்கும்பொழுது. எனது பணியை மிகவும் தெளிவாக உள்ளிருந்து வெளிப்படுத்தினார். அதன் சாராம்சமே பின்வருமாறு

**"உனது பணி ஆரம்பமாகிவிட்டது.** இவை நான் சொல்லும் சொற்களேயாகும். ஒவ்வொருவருக்கும் அவர் அவருக்கென பணியுண்டு. நான் அழைப்பவர்களே எனது பணியைச் செய்யத் தகுதியுடையவர்களாவர். நான் உங்களின் பக்தி அலைகளை விஸ்தரித்து அதனுள் வருவோரை உள்ளடக்குகிறேன். இதைச் செய்வதற்கு என்மீது கவனத்தை வைக்கவேண்டும். பலன்களை எடுக்கச் சிந்திக்காதே. இந்த வேலை அமைதியாகவே நடைபெறும். எனது அன்பு பாய்வதற்கு நீங்களே சாதனங்களாக இருப்பீர்கள். ஜாக்கிரதையாயிரு. எப்போது அகங்காரம் எழுகின்றதோ அப்போதே என்பணியும் நின்றுவிடும். உனது எதிர்மறையான சிந்தனைகள் அகன்ற பின்பு எனது சாதனமாகத் திரும்பவும் மாறுவீர். எனது வேலை பன்மடங்காகப் பெருகிப்போகிறது. எத்தனையே பிறப்புகளில் இந்தப் பணிக்கு உன்னைத் தயார் படுத்தியுள்ளேன். எனது பணி என்றும் முடிவதில்லை. இதேபோல் உனது பணிக்கும் முடிவில்லை.

நீயும் நானும் ஒன்றே என்பதை உணர்ந்து கொள். உன்மூலமாக எனது தரிசனம் மற்றவர்களுக்குக் கிடைக்கும். பரிசுத்தமாக இரு. மானிடம் உன்னால் பயன்பெறும்.

எல்லோரும் ஒற்றுமையாக எனது பணியைச் செய்யும் காலம் நெருங்கிவிட்டது. இதை யாராலும் கிரகிக்க முடியாது. கனவுகளுக்கும் அப்பாற்பட்டது. எனது பணியை மௌனமாகச் செய்யும்பொழுது நான் இதயபூர்வமாக என்னுடன் இணைத்துக்கொள்வேன். உங்களின் கண்கள் என் வியாபகத்தை பிரகாசித்துக் கொண்டேயிருக்கும்.

ஆகவே பணியில் இறங்குங்கள். எனது அன்பான பக்தர்களே உங்களின் மூச்சில் பரலோகத்தின் நறுமணம் வீசும். நீங்கள் தேவதைகளாகி விடுவீர்கள். உங்களது ஆனந்தமே எனது ஆனந்தமுமாகும்."

வெளியுலகில் முன்னேற்றத்திற்கு தொடர்பாடலும் அதன் சாதனங்களுமே முக்கியம். எமது உள் முன்னேற்றத்திற்கு பிரார்த்தனையும் அன்பான செயல்களுமே முக்கியம்.

ஜெய் சாயிராம்

மொழிபெயர்ப்பு : ஆசிரியர்.

Finding God My Journey to Bagavan. By Charles Penn (1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிரியாரின் பிரசங்கம்

தேவாலயங்களில் எப்போதும் தகவல் பெட்டி ஒன்று இருக்கும் அங்கு வருபவர்கள் பாதிரியாருக்கோ அல்லது நிர்வாகிகளுக்கோ குறிப்புகள் எழுதி அதனுள் போடலாம். இந்த தேவாலயத்தின் பாதிரியார் பெட்டியைத் திறந்த பொழுது ஒரு துண்டு இருப்பதைக் கண்டு எடுத்து வாசித்தார். அதில் எழுதப் பட்டிருந்தது:

நான் ஒவ்வொரு கிழமையும் தவறாது பல வருடங்களாக உங்களின் பிரசங்கத்தை கேட்டுள்ளேன். எனக்கு அதனால் பிரயோசனம் இருப்பதாகத் தெரியவில்லை. உங்களின் நேரமும் எனது நேரமும் வீணாகிப் போய்விட்டது. பாதிரியார் உன்னிப்பாக வாசித்து விட்டு தனது மேசையில் மடித்து வைத்தார். அடுத்த ஞாயிறு பிரசங்கத்தின் போது துண்டில் எழுதப்பட்டதை வாசித்து அங்கிருந்தவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

முதியவர் எழும்பி கதைப்பதற்கு உத்தரவு கேட்டார். கிடைத்ததும் சொன்னார் "நான் பல வருடங்களாக மனைவியுடன் வாழ்கின்றேன். எனது மனைவி எத்தனையோ உணவு வகைகளைச் சமைத்துப் போட்டுள்ளார். அந்தச் சமையல் எப்படிச் சமைக்கப் பட்டது என்று தெரியாது. ஆனால் சமையல் எல்லாம் ருசியாக இருந்தது. அத்துடன் என்னை வாழவும் வழிவகுத்தது. மனைவியின் சாப்பாடு இல்லாவிட்டால் நான் எப்போதோ இறந்திருப்பேன்."

எங்களுக்குப் பலனின் அனுபவம் இல்லா விட்டாலும் எம்மை உயிர் வாழ வைப்பது அதுவேயாகும்.

ஆன்மீக சாதனைகளின் (தியானம், ஜெபம், பிரார்த்தனை, பாடுதல்) பலன் உடனே அனுபவத்திற்கு வராவிட்டாலும் ஒரு நாளைக்கு வந்தே தீரும். அவை இல்லாவிடில் நாம் அழிந்துபோய் விடுவோம்.



நாங்கள் கேட்டதை உள்வாங்கி பயிற்சிக்கு கொண்டுவந்து வாழ்க்கையில் பின்பற்றவேண்டும்.

பகவான் சொன்னார். "மனதை கட்டுப்படுத்த வேண்டுமாகில் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் ஒடுக்கவேண்டும். ஆசைகள் மனதைப் புலன்களுக்குப் பின்னால் ஓடவைக்கும். நாமஸ்மரணை, தியானம் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். கட்டுப்பாட்டிலிருந்து விலகக் கூடாது. போதியளவு முன்னேற்றம் காணப்படாவிட்டால் மனம் தளராது மேலும் மேலும் முயற்சிக்க வேண்டும். விடா முயற்சியும் பொறுமையும் வெற்றிதரும்.

நாங்கள் தப்புகள் செய்தாலும் பகவான் கைவிடாமல் எம்மை வழிநடத்துவார். நாம் இதயபூர்வமாத் திருந்த சங்கல்ப்பம் கொள்ளவேண்டும்.

ஆதாரம் : றேடியோ சாய் 06.01.2013


## தேசிய சேவைத் திட்டம்




**சாயி சிறுவர் இல்லம் - கூமாங்குளம் - வவுனியா**

**நாட்டில் அனாதரவான சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச் சிறுவர் இல்லம் மிகவும் சிறப்பாக கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

024 222 2492

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 ~~242 222 492~~
E mail - shanthamvavuniya@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

"உயிர்களிடத்து அன்பு வேண்டும். தெய்வம் உண்மையென்று தானறிதல்வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறைமையடி பாப்பா" என்று பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி எமது வாழ்வியல் முறையைப் பாடிவைத்தான். இன்றைக்கு பத்தாயிரம் வருடங்களுக்கு முன் இந்தப்பூமியில் 5 மில்லியன் மக்களே வாழ்ந்தார்கள். அப்போது ஏராளமான இயற்கை வளங்களும் விலங்குகளும் இருந்தன. யேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில்கூட சனத்தொகை 130 மில்லியனாகவே இருந்தது. பின் விரைவாக வளர்ச்சியடைந்து 1987இல் 5 பில்லியன் அடைந்து 2027 இல் 10 பில்லியன் அடைவதை எதிர்பார்க்கிறோம். இந்த அதிகமான சனத்தொகை காரணமாக இயற்கை வளங்களும் விலங்குகளும் விரைவாக அழிகின்றன. நாம் வாழும் சூழல் சீர்கெட்டு அதன்விளைவாக காற்று, நிலம், சமுத்திரம் எல்லாம் மாசடைகின்றன. சீதோஷண மாற்றங்கள் உலகம் முழுவதிலும் மக்கள் வாழ்வைப் பாதிக்கின்றன. கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்தாலும் அதற்குப் பதிலாக பொருளாதார யுத்தங்கள் நம்மிடையே உண்டு. இன்றைய உலகம் மேலதிக பொருட்செல்வத்தை நாடும் முடிவிலா ஆசைகளைக்கொண்ட மக்களால் நிரம்பியுள்ளது. இவை எல்லாவற்றின் விளைவு அமைதியின்மை மற்றும் மகிழ்ச்சியின்மை ஆகும். பலவிதமான வியாதிகளை விளைவிக்கும் மன அழுத்தம் மற்றும் ஏக்கங்களால் மக்கள் வருந்துகின்றார்கள். நாம் உண்டாக்கிய இந்த எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் வெளியேற வழி உணடா?

ஆம். அதுவே அன்பு எனும் பாதை. நாம் உலகை மாற்றமுயல்வதற்கு முன் எம்மை இவ் அன்பெனும் பாதையில் நடத்துவிக்கவேண்டும். அன்பு ஒரு மகாசக்தியாகும். மனிதருடைய மனதை மாற்றக்கூடிய சக்தி இந்த அன்புக்கு இருக்கிறது. உலகிலுள்ள ஆயுதங்கள் அனைத்திலும் பெரிய ஆயுதம் அது. அன்பின் சக்தியால் சமாதானம் மலரும். போதிய தொகையில் அன்பு நிறைந்த மக்கள் இருப்பார்களானால் உலகம் மிக வேகமாக மாற்றமடையும். யுரேனியத்தில் ஏற்படும் மாற்றத்தை இதற்கு ஒப்பிடலாம். யுரேனியத்தில் பொருட்திணிவு ஒருஅளவை மீறும்போது மறுதாக்கங்கள் தொடராக ஏற்பட்டு வெடிப்பு நிகழ்கிறது. அது போல அன்பு நிறைந்த மக்கள் தொகை மாற்றம் நிகழ்த்தும் அளவுக்கு பெருகும்போது தொடர்விளைவுகள் உலகெங்கும் ஆரம்பிக்கும். அன்பு வேகமாக பல்கிப்பெருகி பொற்காலம் ஒன்று உதயமாகும். அன்பு சுயநலமற்றது. ஆயினும் தற்போது பாசம், நேசம், காதல் என்று பற்பல வடிவங்களில் சுயநலம் கலக்கப்பெற்ற அன்பையே இன்று காணமுடிகிறது. ஆயின் சுயநலமற்ற அன்பானது முதலில் தன்னிடத்தும் தன் குடும்பத்தவரிடத்தும் விரவி தொடர்ந்து சமூகம் மற்றும் ஏனைய உயிர்களிடத்தும் பரவவேண்டும். சத்திய சாயி பகவானின் "விஸ்வப்பிரேமை" என்று அவரது அன்பை அனுபவித்த பக்தர்கள் கூறுவர். ஏனெனில் அது உயிர்களிடத்து மட்டுமல்ல உயிரற்றவற்றிலும் பரவியிருக் கின்றது. அது இந்த பிரபஞ்சத்தையே தழுவியது.அன்பைப் பெருக்குவதே வாழ்க்கை. அனைவரிடமும் அன்பு செலுத்த எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த நாம் பழகிக்கொள்ளவேண்டும். பிறந்த எல்லா உயிர்களுக்கும் இவ் உலகில் வாழ உரிமையுள்ளது. ஆகவே வாழ்வுக்கு தேவையானவற்றை தேடும் உரிமையும் அடையும் உரிமையும் உள்ளது. இதை தடுப்பதும் மறுப்பதும் பாவமாகும். தடுத்து பாவச்செயல்புரிய நாம் விழையக்கூடாது. மற்றைய ஜீவராசிகளும் எம்மைப்போன்று உயிர் உள்ளவையே. அன்பு பிற உயிர்கள் மீது ஒரு பாசப்பிணைப்பை ஏற்படுத்தும். அந்த உயரிர்கள்மேல் வெறுப்பு தோன்றாது. அந்த வெறுப்பின்மை என்ற தன்மை மற்ற உயிர்களின் செயற்பாடுகளில் நமது இடையூறு இல்லாமல் செய்ய உதவும். எல்லா உயிர்களுக்கும் அன்புப் பாசமும் உணர்ச்சி களும் உண்டு. எல்லாம் ஆன்மாக்களே. பிற உயிர்கள் எப்படியிருந்தாலும் எந்தவித எதிர்பார்ப்புமின்றி நேசிக்கவேண்டும். அப்போது மனதில் ஒரு அமைதியை உணரலாம். நம்மிடையே உள்ள அன்பை வெளிப்படுத்தப் பழக வேண்டும். அன்பு எல்லா உயிர்களிடத்தும் விருப்பமுடனும் நட்புடனும் வாழும் தன்மைதனை தரும். இந்த தன்மை அளவிலா சிறப்பைத் தரும். வாழ்வில் அன்பு என்பது நம்மிடம் இல்லை எனில் நமக்கு மற்றவரிடமிருந்து வரும் அன்பு கிட்டாது. அன்பு குடிகொண்டிருந்தால் புண்ணியச் செயல்கள் நடக்கும். தன்னலமில்லா செயற்பாடுகளே அன்பின் அடிப்படை. ஆன்மா அன்புடன் செயற்பட்டால் ஐம்புலன்களும் அதன்வழி செயற்பட்டு மிகுந்த ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் அளிக்கும். அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்கள் உடம்பின் புற உறுப்புகள் எல்லாம் பயனற்றதாகிவிடும் என்கிறது வள்ளுவம். இவ்வாறு எல்லோரும் எல்லோரிடமும் அன்பு கொண்டால் அன்பை செலுத்தினால் உலகின் பலசிக்கல்கள் தீரும். பாவம், குற்றம் செய்ய தூண்டுதல் இருக்காது. மனதில் உலகில் எல்லா உயிர்களும் அன்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்பட வேண்டியவைகளே என்ற எண்ணத்தை பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இயற்கையாகவே பரிவு, பச்சாதாபம், பாசம் போன்ற உணர்வுகள் தோன்றும்போது அன்பு என்ற மந்திரச் செயலாக்கம் எம்மிடமிருந்து வெளிப்பட்டு விடும். இந்த அதிசயத்தை நாம் உணரலாம். நாம் அன்பு செலுத்தும் உயிர்களும் உணரும். நாம் வாழ்வில் வெற்றி பெறவேண்டுமென்பதற்காக தன்னம்பிக்கை நாணயம், அன்பு மற்றும் பிற உயிர்களின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தி எதைப் பற்றியும் கவலைப்படாமல் கர்மபலன்களைச் சேர்த்து நம் மீதிக் காலத்திற்கு துன்பதுயரங்களுக்கு அடிகோலி அதே துன்பதுயரங்களை நம் வாரிசுகளுக்கும் சுமத்திவிட்டு செல்வதில் என்ன பலன்? அனைத்துயிர்களுக்கும் பாதிப்பின்றி அன்பின்வழி முயற்சித்தால் துன்பமின்றி இன்புற்றிருக்கலாம். ஒவ்வொரு உயிரும் உலகில் அவதரிக்கும்போது அதற்கென தனித்தன்மையுடன்தான் தோன்றுகின்றன. அவைகளின் எல்லா விருப்பங்களினதும் இலக்கு அன்பாகத்தான் இருக்கவேண்டும்.

அன்பின் வழியது உயிர்நிலை (குறள் 80) என்பார் வள்ளுவர். உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத்தேயு 2239) என்கிறது விவிலியம். "அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு" (குறள் 75) என்று வள்ளுவர் அன்பு வாழ்க்கையே சிறந்தது என்கிறார். பிற உயிரினங்களையும் விட மனித இனம் அன்புணர்வை அதிகம் வெளிப்படுத்திக் காட்டக்கூடியது. இவ் அன்பின் அடையாளமாகவே வள்ளலாரும் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று ஓரறிவு ஜீவன்களிடம் அன்பு காட்டினார். நபிகள் நாயகம் "மானுக்குப் பிணை நின்ற படலம்" வாயிலாக வேட்டைக்காரனிடமிருந்து மானையும் குட்டியையும் காப்பாற்றி அவனை மனிதனாக்கினார்.



## ஆதிசங்கரரின் கற்பித்தல்



ஆதிசங்கரர் சீடர்களோடு சந்தையினூடாக சென்றுகொண்டிருந்தார். அங்கே ஒருவன் மாட்டைக் கயிற்றின்மூலம் இழுத்துக்கொண்டு வருவதைக் கண்டார்கள். ஆதிசங்கரர் அந்த மனிதனை நிற்கச்சொல்லி சீடர்களை வட்டமாக நிற்கச்செய்தார். நான் உங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கப்போகின்றேன். இங்கே இப்பொழுது யார் யாருக்குக் கட்டுண்டுள்ளார்கள்? மனிதன் மாட்டுடனா? மாடு மனிதனுடனா? சீடர்கள் தாமதிக்காமல் மாடுதான் மனிதனால் கட்டப்பட்டுள்ளது என்று பதில் சொன்னார்கள். மனிதன் கயிற்றின் மூலம் மாட்டைக் கட்டுக்குள் வைத்திருக்கிறான். மனிதன் தான் எஜமானன். மாடு அடிமை என்று மேலும் சொன்னார்கள்.

இப்பொழுது கவனியுங்கள் என்று சொல்லி ஒரு கத்தரிக்கோலை எடுத்து கயிற்றை அறுத்துவிட்டார் மாடு ஓடத்தொடங்கியது. மனிதன் அதன் பின்னால் ஓடத்தொடங்கினான். மாடு மனிதனைவிட்டு ஓடுகிறது. மனிதனோ மாட்டிற்குப் பின்னால் ஓடுகின்றான். என்ன நடக்கிறது? என்று சீடர்களிடம் கேட்டார்.

யார் எஜமானன்? கயிறிலிருந்து விடுபட்டு ஓடினாலும் மனிதன் அதைப் பிடித்துக் கட்டிவிடலாம். மனது ஓடினாலும் மனிதன் அதை அடக்கலாம் மனிதன்தான் எப்போதும் எஜமானன்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அன்பே சிவம்" என்று திருமூலரும் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று விவிலியமும் விளக்குகின்றன. உலகில் மக்கள் பின்பற்றிவரும் அனைத்து சமயங்களும் அன்பு வழியையே போதிக்கின்றன. "அன்பைத் தகளியாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புறு சிந்தனையை இரு திரியாகவும் கொண்டு" வைணவம் நாராயணனை வழிபடுகிறது. காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி உயிர்களை ஓம்புகிறது சமணம். அன்புதான் உலக ஒளி, அன்புதான் மகாகாவியம் என்று உரைக்கிறது பௌத்தம். உண்மையான அன்பு என்பது இறைவன் மனிதகுலத்தின் மீது கொண்டிருக்கும் அன்பு ஆகும். இறைவன் மீது நாம் அன்பு கூர்ந்து வாழும்போது மனித உறுப்புகள் தவறுசெய்ய அஞ்சுகின்றன. "உங்களது சத்துருக்களையும் நேசியுங்கள்(லூக்கா 635) என்று இயேசு கட்டளையிடுகிறார். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யவேண்டும். இயேசு பாவிகளுக்கு தன்னையே கொடுத்தார்.

அன்பு சகோதரத்துவத்தை ஏற்படுத்துகிறது மன்னிக்கும் பண்பைத் தருகிறது பகவான் சத்யசாயி தனது பிரேமையை பல்வேறு வளர்ப்புப் பிராணிகள் மற்றும் விலங்குகளிலும் வெளிப்படுத்தினார். சாயிகீதா என்பது அவர் வளர்த்த யானை ஆகும். ஒரு பிரிக்கமுடியாத அன்பால் அது இறைவனுடன் பிணைந்திருந்தது. பிருந்தாவன் பல்கலைக்கழக வளாக மான்களும் கிளிகளும் அந்த அன்பிலே திளைத்திருந்தன. ஷீர்டிபாபாவின் பிச்சை ஏற்கும் கலசத்திலிருந்து நாய்களும் பூனைகளும் போதுமானளவு உணவை உண்டன. அவற்றை கனவில்கூட அவர் விரட்டியது இல்லை. தாய்லாந்தின் பங்கொக் நகரிலுள்ள கவலோங்கோன் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அன்பால் தாவரங்களுக்கு ஏற்படும் விளைவுகள் பற்றி பரிசோதித்தபோது அன்பை வெளிப்படுத்திய பூச்செடிகள் பூப்பூத்து நின்றன. மாணவர்களால் அன்பு வெளிப்படுத்தப்படாத பாத்தியில் நின்ற செடிகள் பூக்கவில்லை.

அன்புதான் அகிம்சைக்கு ஆதாரம். காந்திஜி இந்த அகிம்சை ஆயுதத்தால்தான் இந்திய சுதந்திரத்தை வென்று எடுத்தார். அகிம்சை என்பது இயற்கை விதிகளை மீறாமை ஆகும். இயற்கையும் உயிரினங்களும் ஒன்றோடொன்று பிணைந்துள்ளன என்கிறது உயிரியற்கை சாஸ்திரம். சில விலங்கினங்கள் அழிக்கப்பட்டால் மற்ற உயிர்களிடத்தும் இயற்கையிடத்தும் பாதிப்பை உண்டாக்கும். படைப்பின் ஒரு அம்சத்துக்கு கேடுவிளைவிப்பது நமக்கே கேடு விளைவிப்பதாகும்.

புலால் தவிர்த்தலை இந்துமதம் வலியுறுத்து கின்றது. அனைத்து உயிர்களிடத்தும் என்னைக் காண்பாய் என்று கீதையில் கண்ணன் கூறுகிளார். எந்த ஒரு மகாபுருஷரும் உயிர்க்கொலையை வலியுறுத்தவில்லை. இவற்றையெல்லாம் படிக்கிறோம், கேட்கிறோம், ஆனால் அப் பாவச்செயல் புரிந்தே வருகிறோம். ஏன்? இக்கேள்விக்கு பலபதில்கள் வரலாம். ஆனால் தாவர உணவின் உயர்வைப் பறைசாற்றும் மருத்துவரீதியான போஷனை ரீதியான அன்பு ரீதியான உலகியல் ரீதியான பல காரணங்களை நாம் கூறமுடியும். உடலை வலுவூட்ட உணவு அவசியம். எனினும் அது விலங்குணவு அல்ல. ஒலிம்பிக்கில் தடம் பதித்த வீரர்கள்கூட தாவர போஷணை யாளர்களாக உள்ளமை இதற்கு எடுத்துக் காட்டு. இந்தியாவை அணுவல்லரசாக்கிய அப்துல்கலாம் ஒரு தாவரபோஷணையாளர். மேலும் நூறு வயதை கடந்த உலகெங்கிலு முள்ள வயோதிபர்களை கேட்பின் அவர்கள் தாவரபோஷணிகள் என தெரியவரும். எம் உணர்வுகளை கட்டுப் பாட்டுக்குள் வைக்க தாவர போஷணையே சிறந்தது. மருத்துவ ரீதியாக எமது உடலமைப்பு தாவர உணவுக் காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது. அத்துடன் சகல போஷாக்கை யும் தரக்கூடிய நோய் விலக்கி தாவர உணவே ஆகும்.

பகவான் பாபா விலங்குணவை விஷத்துக்கு ஒப்பிடுகிறார். திருமூலர் "பொல்லாப் புலாலை நுகரும் புலையரை எல்லோரும் காண இயமன்றன் தூதுவன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாக்க பற்றி தீவாய் நரகத்தில் மல்லாக்கத் தள்ளி மிதித்து வைப்பாரே" என்கிறார். உடம்பே கோவிலென கூறுகிறது திருமந்திரம். நாம் "கொல்களங்கள் எனப்படும் உயிர்வதை இடத்துக்கு சென்று பார்ப்பின் இரத்த ஆறும் பிராணிகளின் கதறலும் எம்மை நிலைகுலைய வைக்கும். இறந்த உடலை சவக்காலையில் புதைக்கிறோம். ஆனால் மிருகங்களின் இறந்த உடலை எமது வயிற்றுக்குள் போடுகின்றோம். ஆகவே எமது வயிறு என்ன கல்லறையா?

மனிதனுக்கு மட்டுமே இந்த உலகம் என்று எண்ணுவது மனித அகங்காம் தான். அதனால்தான் மனிதன் தன்னை மற்ற உயிரினங்களுக்கு மேலானவனாக எண்ணிக் கொள்கிறான். அவற்றை அழிக்கும் சுதந்திரத்தை தன்கையில் எடுத்துக் கொண்டிருக்கிறான். காடுகளைப் பெரு மளவில் அழித்தாயிற்று. நேற்றிருந்த பல்வேறு உயிரினங்கள் இன்று இல்லை. பூமி தவணை முறையில் அழிந்து கொண்டிருக்கிறது. மனிதஇனம் மட்டும் பல்கிப்பெருகி இந்த பூமியை நிரப்பிக்கொண்டிருக்கிறது. இயற்கைச் சமனிலையை உடைத்த குற்ற வாளிகள் மனிதர்கள்தான். பூமி தற்போது சந்திக்கும் எல்லாப்பிரச்சனைகளையும் உருவாக்கியது மனிதர்கள் தான். வெளியில் தெரிவது மனிதர்களுக்கிடையிலான போர். ஆனால் பன்னெடுங்காலமாக மனிதனுக்கும் ஏனைய உயிர்களுக்கிடையிலும் ஒரு இரகசிய யுத்தம் ஓய்வில்லாமல் நடந்து கொண்டே யிருக்கிறது. இப்போது சற்று விழிப்புணர்வு வந்திருக்கிறது. மரங்களை வெட்டுவதற்கும் மிருகங்களை வெட்டுவதற்கும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

முல்லைக்கு தேர் ஈந்த பாரியின் கதையும் மயிலுக்கு தோகை ஈந்த பேகனின் கதையும் புறாவைக் காப்பாற்ற தன்னையே கொடுத்த சிபியின் கதையும் இன்றைய காலகட்டத்தில் அதிசயமாகத் தோன்றலாம்.





ஆனால் அந்த கதைகள் வெளிப்படுத்தும் நோக்கம் ஒன்றுதான். உயிர்கள் மீதான பேரன்பு. அந்த அன்பிற்கு பின்னால் எந்த நோக்கமும் இல்லை. மனித சுயநலம் இல்லை. உண்மையில் இந்த பிரபஞ்சத்தை நாமாக உணரும் அந்தக் கணம்தான் அன்பு பரிணமிக்கிறது. நம் அண்டவெளியில் பூமி ஒரு தூசி. பொருட்படுத்த தகுந்ததே அல்ல. அண்டவெளி என்பதே கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் கோள்களும் கொண்ட ஒரு மாபெரும் அமைப்பு. அதிலே பூமியில் மட்டுமே உயிரினம் இருக்கிறது. இது ஒரு வரம். இந்த வரத்தை நாம் சாபமாக மாற்றிக்கொண்டிருக்கிறோம். மாபெரும் பிரபஞ்ச இறைசக்தி தன் ஆற்றலை துளித்துளியாக ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஊற்றியிருக்கிறது. துளிகள் துளிகளாகவே இருக்கின்றன. துளிகள் ஒன்றுசேர வேண்டுமானால் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்.

ஜெய் சாயிராம்


செ.அகல்யா
யாழ்ப்பாணம் சாயி நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் காத்த அந்தர்யாமி

(23.11.2016 அன்று நிகழ்ந்த அனுபவப்பகிர்வு)



ஏழு வருடங்களாக அடம்பன் பாடசாலையில் கற்பிப்பதற்காக சங்கானையிலிருந்து பேரூந்தில் போய்த் திரும்பவும் வீடு வந்துசேருவேன். சங்கானையிலிருந்து சாவகச்சேரி சென்று அங்கு மன்னார் பஸ் எடுத்து மாந்தை சந்திக்குச் சென்று இன்னொரு பஸ் எடுத்து பாடசாலையை அடைவேன். பாடசாலைக்கு காலை 7.30 மணிக்கு முன் போய் விடவேண்டும். பாடசாலையில் பலவிதமான கடமைகளை முடித்து பி.ப.2.00 மணிக்குப் புறப்பட்டால்தான் பி.ப. 4.00 மணியளவில் வீட்டை வந்தடையாலாம். மாரிகாலத்தில் சிற்றாறுகள் பெருக்கெடுக்கும். அவற்றையும் பஸ் கடக்கவேண்டும். நான் நேரம் தவறாது கடமையைச் செவ்வனே இறை நாமத்தின் உதவியுடன் செய்து முடிப்பேன். எனது பெற்றோர்கள் வயதானவர்கள். குழந்தைக்கு 3 வயது.

23.11.2016 அன்று புதன்கிழமை. பகவானின் பிறந்தநாள் நிகழ்வுகள் சங்கானை சாயி நிலையத்தில் சிறப்பாக நடப்பது வழக்கம். அதிகாலை ஒரு மணிக்கு குழந்தை எனது முகத்தைத் தடவி அம்மா இன்றைக்கு பரிசு தரப்போகினம். பார்க்க வருவீங்கள்தானே" என்று கேட்டதும் எனக்குப் பதில் சொல்லத் தயக்கமாயிருந்தது. நான் "தூங்கு அம்மா" என்று சொல்லித் தடவிக் கொண்டேன். குழந்தை தூங்கியது. நானோ 2.00 மணிக்கு எழும்பி பல கடமைகளை முடித்துவிட்டு 5.15 மணிக்கு பஸ்ஸில் ஏறினேன். 6.00 மணிக்கு சாவகச்சேரியில் மன்னார் பஸ்ஸைப்பிடித்தேன். மாந்தைச் சந்தியில் அடுத்த பஸ்ஸைப் பிடிக்க முடியவில்லை. பஸ்ஸின் பின்பக்கத்தையே கண்டேன். அதே நேரம் எனது சக ஆசிரியரின் உதவி கிடைத்தது. அவரின் மோட்டார் சைக்கிளில் பாடசாலை சென்றடைந்தேன். பாடசாலையில் பரீட்சைக் கடமைகளுடன் பள்ளியை விட்டுவரும் உபசார விழாவும் சேர்ந்திருந்தன.

2.00 மணியளவில் எல்லோரும் ஆரவாரத்துடன் பைகளைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள். ஆறுகள் பெருக்கெடுத்தால் கடப்பது கஷ்டம் என்று ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் பஸ்ஸை பிடிக்க ஓடினோம். அரைவாசி தூரம் கலைத்துப் பிடிக்கப்போய்க் கைவிட்டோம். நானே நகைகளுடன் மாந்தைச் சந்தியில் தனியே நிற்கவேண்டியதாயிற்று. இறைநாமத்தை உளப்பூர்வமாக உச்சரித்துக் கொண்டேன். எனக்குக் குழந்தைக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றவேண்டுமே என்பதுதான் மனதில் இருந்தது. 3.15 மணிக்கும் மாந்தைச் சந்தியில் நின்றேன். 3.16க்கு எனக்குப் பழக்கமான சாரதி பஸ்ஸை ஓட்டி வந்தார். சாரதி ஐயா ஏன் நகைகளுடன் வெளிக் கிட்டாய் என்று அதிகாரத்துடன் கேட்டார். ஏன் தனியே நிற்கிறாய் என்றும் கேட்டார். இறைவன் உங்களைக் கொண்டு வந்து விட்டார். இனி எனக்குப் பயமில்லை என்று அவருக்குச் சொன்னேன். பஸ்ஸில் எனக்கு முன் சுவாமியின் பெரிய படம் தொங்குகிறது. 5.25க்கு யாழ். பஸ்நிலையத்தை அடைந்தேன். சங்கானை பஸ் ஊர்வதைக் கண்டேன். ஓடிப்போய் ஏறிவிட்டேன். 6.05 மணிக்கு சங்கானை நிலையத்தை அடைந்தேன். அங்கே டாக்டர் சிவசங்கர் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். குழந்தை ஓடி வந்து "அம்மா இன்னும் 4.00 மணி ஆகவில்லையா? எனக்குப் பரிசு இன்னும் தரவில்லை." நான் குழந்தையைக் கட்டிப் பிடித்து இனித்தான் பரிசு தரப்போகிறார்கள் என்று சொன்னேன். பிரதம விருந்தினரின் உரை முடிந்து பரிசில்களும் கொடுக்கப்பட்டன. எனது கண்ணா பிள்ளை பரிசு பெறுவதைப் பார்த்தேன். இருவரும் ஆனந்தத்தில் திளைத்தோம். பரிசு வழங்கி முடிந்ததும் நான் முன்சென்று எனது அன்றைய அனுபவத்தை பகிர்ந்தேன். சிலரின் நெஞ்சு உருகியது.

கலியுகத்தில் எம்மைக் காப்பது நாம் நம்பி வந்த உறவல்ல. இறைநாமம் மட்டும்தான் காப்பாற்றும் என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.

ஜெய் சாயிராம்.

திருமதி. சுரேஷியா சுபாஸ்
சங்கானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் காத்த அந்தர்யாமி

சேவை செய்வதே ஆனந்தம் - சாயி சேவை செய்வதே ஆனந்தம். சேவை என்பது மகத்துவமானது. அதி உன்தமானது. அதிலும் சாயி நிறுவனத்தில் நாம் இணைந்து சேவையில் ஈடுபடும்பொழுது ஏற்படும் ஆனந்தம் - அமைதி அனுபவித்துதான் உணர்ந்துகொள்ளலாம்.

இறைவன் படைப்பில் உலக அமைப்பில் எல்லாம் இறைவன் செயல்படி, திட்டமிட்டபடி, எதுவித குறையுமில்லாமல் சிறப்பாக நடந்துகொண்டே இருக்கிறது. அப்படியாயின் எமக்கு என்ன வேலை யிருக்கிறது! ஏன் சேவை செய்யவேண்டும்?

இறைவன் நடத்தும் நாடகத்தில், இறைவனுடைய பணியில் எம்மையும் ஒரு கருவியாக்கி, அதன்மூலம் எமது வாழ்வைப் புனிதமாக்கி வாழ்க்கை பயணத்தின் சுமையைக் குறைத்து, "சாந்தி"யின் இருப்பிடத்தை அடைய சேவை அவசியமா கிறது. மேலும் சேவையை ஆன்மிக வளர்ச்சிக் காக எல்லோருள்ளும் உள்ளுறையும் ஒரே கடவுளுக்குச் செய்யும் பூசையாகச் செய்ய லாம். இதயபூர்வமாக சேவை செய்ய வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டு சேவை செய்யாமல் என்பொழுது வீணாகப் போகி ன்றதே என்ற ஏக்கம் உருவாகும் பொழுது ஆன்மீகப்பாதையின் முதல் அடியை எடுத்து வைக்கின்றோம். இந்த முதல் அடியை எடுத்து வைப்பது தான் எமது முயற்சி. இந்த முயற்சி சரியாக அமையும் பொழுது அடுத்து அடுத்து வரும் அடிகளில் எம்மை நகர வைப்பார் இறைவன். மேற்குறிப்பிட்ட முதலாவது அடி சரியான முறையில் எடுத்து வைத்தால்... என்ன சேவை செய்யவேண்டும் என்ற திட்டம் எமது மனக்கண் முன்வந்து வட்டமிடும். போதியளவு நேரம் கிடைக்கும், அதற்குரிய ஆட்பலம் இணைந்து கொள்ளும். பணமும் வந்து சேரும். முழு அளவில் எல்லாமே இறைவனால் இனிதாக நிறைவேற்றப்படும். எனவே நாம் செய்ய வேண்டியது, தூய்மையான அன்புடன், மனத்துடிப்புடன், ஏக்கத்துடன் பிரார்த்தனை செய்தல். இறைவா சேவை செய்யாமல் என்பொழுது வீணாகிப் போகின்றதே! நற்பணி செய்ய நல்வழி காட்டு: எங்களுக்கு இறைவனுடைய திருவருளால் எங்களுக்கு சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தவுடன் அதைப் பிரசாதமாக தலைவணங்கி ஏற்று பணிவன்புடன் செய்யும் பொழுது மனச்சுமைகள் யாவும் கரைந்து போய்விடும். வீட்டு வேலைகள் இலகுவாக நிறைவேறும். முன்செய்த கர்மவினையின் பெரும்பகுதி அழிந்துவிடும். எஞ்சி இருப்பது ஆனந்தமே நிறைந்துவிடுவது மனச்சாந்தி. எனவே நாம் மனத்தால், உடலால், பொருளால் சேவைசெய்ய எம்மை தயார்படுத்திக்கொள்ளவேண்டும்.





சேவையின் அளவு, தொகை, பரப்பளவு... எந்தளவு இருக்கவேண்டும்! பகவான் கூறுகின்றார்: நீ எத்தனை பேருக்கு புடைவை கொடுத்தாய்? எத்தனை பேருக்கு அன்னதானம் செய்தாய்? எவ்வளவு பணம் செலவழித்தாய்? என்ற கணக்கெல்லாம் கடவுளுக்குத் தேவையில்லை. வேண்டுமானால் அவற்றையெல்லாம் வருமானவரி இலாகாவுக்கு காட்டு. கடவுள் உன் தூய இதயத்தைப் பார்க்கிறார். என்ன சிந்தனையோடு சேவை செய்தாய் என்பதைப் பார்க்கிறார். கடவுள் பார்ப்பது நல்ல மனம், நல்ல தரம் எண்ணுக்கணக்கல்ல, தொகையல்ல. பரப்பளவல்ல.

சாயி நிறுவனத்தில் செய்யப்படும் சேவை நல்ல மனத்துடனும், சிறப்புடனும், நல்ல தரத்துடனும் அமையவேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அரைகுறையாகப் பட்டும் படாமலும் (உதவி) சேவை செய்தோம் என்றில்லாமல் சில பேராவது பயன்படும் வகையில் சேவை அமையவேண்டும். புட்டபர்த்தியில் அமைந்துள்ள மருத்துவமனையில் ஒரு தனிமனிதனுக்கே பலலட்சம் ரூபாய் செலவில் இருதய சத்திரசிகிச்சை இலவசமாகச் செய்யப்படுகின்றது. சேவை மட்டுமல்ல. சேவையாளர்களின் தரத்தைப் பற்றி பகவான் குறிப்பிடு கையில்: தரமற்ற செயல்புரியாத நூறு தொண்டர்கள் இருப்பதைவிடத் தரமான சேவை செய்யக்கூடிய ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் இருந்தால் போதும்.


ஒரு சேவைத்திட்டத்தின் மூலம் பல நன்மைகள், பல நற்செய்திகளை வெளிக்கொணரலாம். உதாரணமாக அண்மையில் கைதடியில் அமைக்கப்பெற்ற இரண்டாவது வீடு, மலசலகூடம், குழாய்க்கிணறு, இவற்றின்மூலம் வெளியாகும் செய்திகள்: இங்கு 33, 29 வயதுடைய இரண்டு தலை வளர்ந்து உடல்வளராத ஊனமுற்ற பெண்கள், தந்தை கவலையால் குடிப்பழக்கத்திற்கு அடிமையானார். தாய் பல கஷ்டங்களின் மத்தியில் பிள்ளைகளைப் பராமரிக்கின்றார். அயலவர்கள் உறவினர்கள் எது வித உதவியும் செய்வதில்லை. ஆனால் சொத்திக் குடும்பம் என்று ஏளனம் செய்து அவர்களைத் தனிமைப்படுத்தி வேதனைப் படுத்துகிறார்கள். இதை அறிந்த சாயி நிறுவனத்தினர் உதவி செய்ய முன்வந்தார்கள். ஒரு அளவான வீடு, மலசலகூடம், கிணறு கட்டிக்கொடுக்கத் தீர்மானித்து செயலிலும் இறங்கினார்கள். தந்தையின் குடியை மறப் பதற்கும் பலமுயற்சி செய்து கொண்டிருக் கிறார்கள்.

தற்பொழுது அந்த குடும்பத்திற்கு பெரு மகிழ்ச்சி, கடவுளுடைய உதவி தங்களுக்கு கிடைத்துவிட்டது. சொத்திக் குடும்பம் அங்கவீனர்களையும் இந்த சமூகம் ஒதுக்க வில்லை. எங்களிடம் அன்பு செலுத்த பலர் இருக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல மற்ற அங்கவீனர்களும் இந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறார்கள். இந்த வீடமைப்பின் மூலம் அங்கவீனர்கள், அந்தக் குடும்பம், வெளிச்சமூகம், சாயி நிறுவனங் களின் செயற்பாடுகள், சாயி போதனைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

எனவே எல்லோரும் சேவைப் பணியில் ஈடுபட்டு ஆனந்தம் பெற அருள் புரியும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

ஜெய் சாயிராம்

செ.ஈஸ்வரலிங்கம்,
யாழ்ப்பாணம்.



அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குள்ளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது? சமய கோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெது? மேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுள்தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளியதாக வுல்
கருதியஞ்சலி செய்குவோம்.

-தாயுமானசுவாமிகள்-








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவாமி எனக்கு வழங்கிய கட்டளை

சாயி பாபாவைப் பற்றி முதலில் கேள்விப்பட்டது பிரதானவீதியில் இருந்த டாக்டர் சோமசுந்தரம் வீட்டு சாயிபாபா படத்தில் இருந்து திருநீறு வருவதாக அறிந்தேன். ஆனால் அந்தநேரம் நம்பிக்கை ஏற்படவில்லை. எங்கள் குலதெய்வம் நல்லூர் முருகனாகும். அங்கு தொண்டனாகவே இருந்து வந்தேன். நான் யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலை செய்துவந்த காலத்தில் எனக்கு மேலதிகாரியாக இருந்த வேல்முருகு ஐயா அவர்கள் என்னை 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அழைத்து வந்து யாழ்ப்பாணம் சமித்தியில் அங்கத்தவராக பதிவு செய்தார்.

1980 ஆம் ஆண்டிலிருந்து தீவிர சேவாதாள் தொண்டனாகவும் 4 வருடங்கள் சேவாதாள் கன்வீனராகவும் 1994 வரை சேவை செய்தேன். அரசாங்க உத்தியோகத்தர் களுக்கு இடமாற்றம் கிடைப்பது வழமை யாகும். எனவே இடமாற்றத்திற்கு (1995) மன்னார், புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களுக்கு விண்ணப்பித்து இருந்தேன். சுவாமி தனது சேவாதாள் தொண்டர்கள் மீது நாணயக்கயிற்றை தானே பிடித்து வைத்திருப் பார். புத்தளத்திற்கு போக வேண்டிய என்னை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார். 01.01.1995 தொடக்கம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்றேன். 3ஆம் ஈழப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமாகையால் முல்லைத்தீவுக் கச்சேரி புதக் குடியிருப்பில் இயங்கி வந்தது.

1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு நேரம் (2.30) எனது கனவில் சுவாமி தோன்றினார்.(சிவத்த அங்கியுடன்) அறைக் கதவுக்கு நேரே நின்று இரண்டுகையையும் உயர்த்திய படி "நீ





உடனடியாக யாழ்ப்பாணம் போய்வா" எனக் கட்டளையிட்டார். இரண்டு கைகளையும் உயர்த்திய அபயக்கரக் காட்சியைக் கண்டு ஒரே ஆனந்தம். மறுபுறம் என்னையே நம்ப முடியவில்லை. ஆச்சரியமும் கூடவே ஏற்பட்டது. பின்னர் நித்திரையும் கொள்ளவில்லை. கண்ணைக் கழுவிவிட்டு சுவாமியின் படத்தின்முன் இருந்து பஜனை பாடிக்கொண்டும் சுவாமியின் புத்தகங்களை விடியும் மட்டும் வாசித்துக் கொண்டும் இருந்தேன்.

எனக்கோ பெரிய மனப்போராட்டம். சம்பளம் எடுக்காமல் போனால் வீட்டில் கஷ்டம். செலவுக்கு காசு வேண்டும். மறுபுறம் சுவாமியின் கட்டளையை மீறமுடியாது. சுவாமி காரணமில்லாமல் கட்டளையிடமாட்டார். அவர் எல்லாம் அறிந்தவர். எல்லாம் வல்லவர். முக்காலத்தையும் தெரிந்தவர் அல்லவா?

எனவே, 9ஆம் திகதி யாழ்ப்பாணம் போவதற்கு தீர்மானம் எடுத்தேன். ஒரு கிழமை லீவு எடுத்துக்கொண்டு 10ஆம் திகதி பிற்பகல் புறப்பட்டேன். யாழ்ப்பாணத்தில் முன்னேறிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கைமூலமாக வலிகாமம் பிரதேச மக்கள் முழுப்பேரும் திக்குத்திக்காக இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். எனது உடுவில் வீட்டில் வசித்துவந்த குடும்பத்தினர் இடம்பெயர்ந்து கொக்குவிலில் இருந்தார்கள். பின்னர் அவர்களை கூட்டிச் சென்று கந்தர்மடத்தில் சகோதரியின் வீட்டிற்குப் போய் தங்கினோம். அங்கும் வீட்டிற்கு மேலால் ஒரே செல் அடி நடந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் அழுதபடியே இருந்தார்கள். 25ஆம் திகதியும் ஆகிவிட்டது. உயிர்ப்பலிகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் எனது மைத்துனர் தனது தாயையும் தந்தையையும் விட்டுவிட்டு தனது குடும்பத்துடன் வவுனியா போய்விட்டார். எனவே எல்லோரையும் வவுனியா கூட்டிச்செல்வதற்கு இயக்கத்திடம் பாஸ் எடுக்கச்சென்றேன். அவர்கள் வீட்டை எங்களிடம் தந்து விட்டுப் போகும்படி கூறினார்கள். என் தலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது. இந்த இக்கட்டான நிலையில் எல்லோரையும் புதுக்குடியிருப்புக்கு கூட்டிச்செல்ல தீர்மானித்து 28ஆம் திகதி பிற்பகல் புறப்பட்டு ஊரியான் பாதையை அடைந்தோம். மழையும் பெய்துகொண்டிருந்தது. மாமனார் தன்னை கொலைசெய்ய அழைத்து செல்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜரின்

## நாதாந்த நடனம்



அம்பலத்தாரின் ஆடிடும் அங்கம் அறிவிப்பதென்ன?
ஆக்கத்தின் அதிபதி அவர். அழிவின் அதிபதி அவர்.
அங்கத்தின் அசைவாலும் உடுக்கின் ஒலியாலும் உற்பத்தி உண்டாகிறது.
அழகிய கரத்தின் அபய முத்திரைஅஞ்சேல் என அடியார்க்கு அறிவிக்கின்றது.
தாழ்த்திய கரம் தஞ்சமளிக்கும் தாளினைச் சுட்டித் தெரிவிக்கின்றது.
தூக்கிய பாதம் துன்பம் தொலைந்த விடுதலையைக் குறிக்கின்றது.
ஐயனின் ஐஞ்செயல்களும் அழகுற அவர் ஆட்டத்தில் அமைகின்றது.

(இத்தனையும் இனிது எடுத்துரைக்கும் இச் சிறந்த விக்கிரகம் இலங்கையின் இரண்டாவது பெரும் தலைநகராக வரலாற்றில் இடம்பெற்ற பொலநறுவையில் அமைக்கப்பட்ட சிவாலயத்தில் இடம்பெற்றது. இது உலகில் உள்ள சிவாலயத்தில் இடம்பெற்றது. இது உலகில் உள்ள சிறந்த நடராஜ விக்கிரகங்களுள் ஒன்று என கலை விமர்சகர்களால் கருதப்படுகிறது)

திரு.K.V.சிவநேசன்
கொக்குவில்.

என கத்தினார். நானும் வள்ளம் ஓட்டு பவர்களுடன் சேர்ந்து கழுத்து அளவு தண்ணீரில் இறங்கி எல்லோரையும் ஏற்றிக்கொண்டு கண்டாவளைப் பகுதியை அடைத்தோம். பின்னர் இரவு ஒரு மணிக்கு புதுக்குடியிருப்பு புறப்பட்டு 3.30 மணியளவில் சென்றடைந்தோம். நண்பரின் வீட்டில் தங்கினோம்.

1995 அக்டோபர் 30ஆம் திகதி யாழ்.குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து பெரும் கஷ்டப்பட்டார்கள் என்பதை வடமாகாண மக்களும் இலங்கை மக்களும் அறிவார்கள். சுவாமியின் அற்புதம் இங்கு என்னவென்றால் தனது இனிய பக்தர்களின் துன்பங்களை காப்பாற்றுவதுதான் அவரின் வேலையாகும். தனது பக்தனை மட்டுமல்ல பக்தனின் குடும்பத்தையும் பாதுகாக்கின்றார் என்பதையும் உணர்த்தியுள்ளார்.

மானுடராகிய எங்களுக்கு அக்டோபர் 30ஆம் திகதி இப்படி ஒரு துன்பகரமான நாள் ஏற்படும் என்று தெரியுமா? தெரியாது. இதனால்தான் யோகர்சுவாமியும் தனது பக்தர்களிடம் தமிழ்மக்கள் தாண்டிக்குளத்தை தாண்டுவார்கள் என்று கூறியிருந்தார் என்பதை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

28ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இரண்டு நாள்கள். எவ்வித கஷ்டமும் துன்பமும் இன்றி எனது குடும்பத்தை சுவாமி காப்பாற்றியுள்ளார் என்பதை தெரியப்படுத்தி முக்காலத்தையும் அறிந்தவரான சுவாமியின் பாதார விந்தங்களை வணங்கி எனக்கு நடந்த அற்புத லீலையை சமர்ப்பிக்கின்றேன்.

ஜெய்சாயிராம்

சாயிசேவையாளன்,
தா.அருளானந்தம்
மருதனார்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு



## அன்பு

தோற்றங்கள் மாறிப் போகும்
தோல்நிறம் மாறிப் போகும்
மாற்றங்கள் வந்து போகும்
மறுபடி மாறிப் போகும்
ஆற்றிலே வெள்ளம் வந்தால்
அடையாளம் மாறிப் போகும்
போற்றிய அன்பு மட்டும்
புயலிலும் மாறாதம்மா....

வ.செந்தமிழினி
12 A/L (2018)
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி.



உலகிற்கு என்னைத் தந்த என் இறைவா!
உள்ளத்தில் குடி கொண்ட என் இறைவா!
பிறப்பு இறப்பு நீ படைத்தாய்
வாழ்வும் சாவும் நீ படைத்தாய்
இரண்டிற்கும் இடையில் வாழ்ந்து மறையும்
எம்மவர்க்கு நீ அன்பளித்தாய்
அன்பென்னும் வற்றாக் கடலில் நான் நீந்த
என் தவபலனாய் தாய் தந்தீர்
அம்மா என்ற வடிவதற்கு
அன்பு எனும் உயிர் கொடுத்தீர்
துயரங்கள் என்னை நாடா
என்னருகில் தாய் இருக்கையிலே
பள்ளி செல்லும் வேளையில்
சற்றென்று இனம் தெரியாமல்
அன்பென்னும் உருவில் நான் கண்டேன் நட்பினை
கடுகடு கோபமும் எப்போதும் அறிவுரையும்
எம் ஆசான் செய்வதே! அதிலும் அன்புண்டு
என்றுணர்ந்தோம் எம் பெறுபேற்றில்
இன்னல்கள் சூழ்கையில் ஆதரவைப் பெற்றிட
விந்தைமிக்க மனிதனின் நெஞ்சத்தில் உறைந்திட
இறைவன் தந்த இவ் உலகிலே
இணையில்லாப் படைப்பது
அன்பெனும் படைப்பது
அகிலத்திற்கு பழையது
மழையின்றி இப்புவிக்கு வாழ்வுண்டோ?
அன்பின்றி அகிலமது இயங்கிடுமோ?
அன்பிற்கு ஏங்கியவர் பலருண்டு
புராணத்திலும் அதை நாம் பார்த்ததுண்டு
அன்று கர்ணனும் இன்று சமூகமும்
ஏங்குவது அன்புக்கே
அன்புக்கு எல்லை என்றும் வகுப்பதில்லை
அன்பின்றி எவ் அணுவும் அசைவதில்லை
போலிகள் தினம் தினம் பார்ப்பதுண்டு அன்பே
போலியானால் வாழ்கின்ற வாழ்வில் அர்த்தமுண்டோ?
அன்பென்பது போரினைப் போன்றது
ஆரம்பிப்பது இலகு நிறுத்துவது கடினம்
உண்மையான உறவுகள் என நம்பியவர்கள்
சில சமயம் வேசம் போடுவதால் தான்
உண்மையான அன்பும் ஊமையாகி போகிறது
அன்பென்பது மனிதனின் பலவீனம்
ஏமாற்றப்படும் அன்பு மனிதனை மிருகமாக்கும்
ஏமாற்றமில்லா அன்பு மிருகத்தை மனிதனாக்கும்
சிலர் அன்பை வார்த்தைகளால் உணர்த்தலாம்
சிலர் அன்பை உணர்வுகளால் உணர்த்தலாம்
ஆனால் சிலர் அன்பு புரியாது அதை காலம்
உணர்த்தும் போது கண்கள் கலங்கும்
அன்பை பயன்படுத்தி பிறரை காயப்படுத்தாதீர்
அதன் வலியைப் போக்க எப்போதுமே வழி இருக்காது
அன்பிற்கே நாம் அடிமையாக வேண்டும்
அன்பென்றும் புவி எங்கும் நிலைக்க வேண்டும்
அன்புக்கு கட்டுப்படாதோர் எவருண்டோ
அன்புக்கு அழிவுண்டு என பொருள் உண்டோ
அலைகடல் போல் அன்பும்
என்றும் ஓய்வதில்லை...

பிறேமராஜ் கம்சாஜினி
யா/இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு



அன்னை குழந்தையை அள்ளி அணைத்திடல்
அகத்தினில் பொங்கிடும் அன்பதனால்!
கன்னியர் காளையர் நெஞ்சத்தில் முகிழ்த்தே
காதல் மலர்வதும் அன்பதனால்!
கூட்டுக்குள் குஞ்சுக்கு வாயினால் உணவினை
ஊட்டிடும் பறவை அன்பதனால்!
கூட்டுக் குடும்பமாய் வாழும் உறவுக்குள்
கூடிடும் பாசம் அன்பதனால்!
நண்பர்கள் நாமென்று சொல்லியே உணர்வோடு
இன்பமாய்க் கைகோர்ப்பர் அன்பதனால்!
தன்னிடம் உள்ளத்தைப் பகிர்ந்து கொடுத்திடும்
தன்மை எழுவதும் அன்பதனால்
உள்ளங் கவர்ந்தவெம் உறவு பிரிந்திடில்
கண்கள் கலங்குவதும் அன்பதனால்!
கள்ளங் கபடில்லா வாழ்வும் துலங்கிடும்
கயமை கலவாத அன்பதனால்!

ஜெயராசா சோபனா
யா/வடஇந்து மகளிர் கல்லூரி

# அன்பு

அன்பு என்ற அமிர்தத்தை
அன்னை ஊட்ட அறிகின்றோம்
அன்பை அறியும் முன்னாலே
அதனுள் மூழ்கிப் போகின்றோம்
தன்னுள் புகுந்த உயிரிடத்தில்
தானும் கலந்து தங்குவதால்
மின்னும் இந்தப் பூமியிலே
மீளாச் சிறைதான் அன்பன்றோ

அன்பு அறிவில் இருந்து விட்டால்
ஆன்ம சக்தி கிடைத்துவிடும்
அன்பு மனத்தில் இருந்து விட்டால்
ஆழ்ந்த கருணை பிறந்து விடும்
அன்பு உணர்வில் இருந்து விட்டால்
ஆசை காதல் பிறந்து விடும்
அன்பு செயலில் இருந்து விட்டால்
அகிம்சை ஞானம் பிறந்து விடும்

செல்வி.கி. சயானா
J/Little Flower's Girls' M.M
Karampon Kayts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சேவைத் திட்டம்




**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 715 678 332
E mail - info@srisailanka.org
Web: www.srisailanka.org



# அம்மாவின் அன்பு



உலகில் சிறந்தது, ஈடு இணையற்றது, எளிதில் யாராலும் பெற்றுக் கொள்ள முடியாதது எது என்றால் அது ஒரு தாயின் அன்பாகத்தான் இருக்கமுடியும். உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் காரணமானவள் தாய். புத்தர், யேசு, காந்தி போன்ற தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து தெய்வங்களாகி விட்ட மனிதர்களை உலகுக்கு தந்தது தாய்மையேதான். பலநாள் பட்டினி கிடந்தாலும் ஒருவேளை தன் பிள்ளை பசியால் வாடுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவள் தான் தாய்.

ஒரு தாய் தனது பிள்ளை தவறான வழியில் செல்ல வேண்டுமென்பதை நினைத்துக்கூடப் பார்க்க மாட்டாள். அவள் ஊட்டி வளர்த்த பாலுக்கு விலை இல்லை. இவ்வளவு பெருமைக்குரிய பல தாய்மாரை இன்றைய பிள்ளைகள் மறந்து விடுவது உண்டு. வயது முதிர்ந்த தாய்மார்களைத் தமக்கு சுமையாக நினைக்கின்ற நிலையும் உண்டு. இதனால் இவர்கள் முதியோர் இல்லங்களில் காலத்தைக் கடத்தும் நிலையில் வாழ்கின்றார்கள். சில நன்றியில்லா பிள்ளைகள் தமது தாய் அன்பை இப்படி வெளிப்படுத்து கின்றனர். தாயை மதிக்கின்ற எந்த மனிதனும் கடவுளைத் தேடிக் கோயிலுக்கு செல்லவேண்டியதில்லை. இதனாலேயே மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்கில் முதல் வணக்கத்துக்குரியவராக தாயைப் போற்றுகின்றோம்.

அம்மாவின் அன்புக்கு எடுத்துக்காட்டாக "அம்மாவை வணங்காத உயிரில்லையே" "ஆசைப்பட்ட எல்லாவற்றையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா?" போன்ற திரைப்படப் பாடல்கள்கூட அமைகின்றன. ஒரு தாய் கருவறையிலேயே தனது குழந்தைக்கு அன்பைச் சொரிகின்றாள். எனவே பத்து மாதம் எம்மைச் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி, சீராட்டி வளர்த்த தாயைக் கடவுளாக மதிப்போம். உயர்ந்த பண்புள்ள மனிதர்களாக நாம் வாழ்வோம்.

ஜீ.சானுகா
யா/இளையதம்பி மகா வித்தயாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அன்பு

ஆயிரமாயிரம் நட்சத்திரங்களுக்கு மத்தியிலே நின்று ஒளி வீசும் சந்திரனைப்போல் எத்தனை உறவுகள் வந்தாலும் எனக்கு உயிர் தந்த உறவு என் அம்மா. அம்மா என்ற வார்த்தை எத்துணை அழகானது, அன்பானது, பண்பானது.

"ஆயிரம் உறவு உன்னை தேடிவந்து நின்றாலும் தாய் போல் தாங்க முடியுமா?" என்ற பாடல்வரி எத்துணை மகத்தானது. பத்து திங்கள் தன் கருவறையில் தாங்கி என்னை சுமந்த என் தாய்க்கு இவ்வுலகிற்கு வந்துவிட்டேன் என்ற செய்தியை அழுகுரலோடு அறிவித்தேன். என்முதல் அழுகுரலைக் கேட்டு சிரித்த என் தாய், அதன்பின் என் அழுகுரலைக் கேட்டு சிரிப்பதில்லை. என் அழுகை கேட்டால் பதறுவாள். அள்ளி அணைத்து முத்தமிடுவாள். என் சிரிப்பை பார்த்து தன்நிலை மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிபவள். என் உதடுகளில் புன்னகையை காண தன் சோகத்தை மறைத்தவள்.

என் தூக்கத்திற்காக தன் தூக்கத்தை தொலைத்தவள், தன் பசி மறந்து தன் இரத்தத்தையே பாலாக்கி எனக்கு ஊட்டியவள். என் சிறு காயத்தைகூட பொறுத்துக் கொள்ள முடியாமல் கண்ணீர் சிந்துபவள் எவ்வாறு என்னை உலகிற்கு தந்த வலியை பொறுத்து கொண்டாளோ? நினைக்கையிலே என் விழியோரத்தில் கண்ணீர்த் துளிகள். மெழுகுதிரியாய் தன்னை உருக்கி, என்னை ஒளிர்வித்த நடமாடும் தெய்வம் என் அம்மா. நான் செய்யும் குறும்புகளை இரசிப்பவள். ஆனால் தவறுகள செய்தால் அன்புடன் கண்டித்து திருத்துவாள். "அம்மா" என நான் அழைக்கையில் இவ் உலகையே மறந்து என்னை அணுஅணுவாய் இரசிப்பவள் என் அழகு அம்மா.

உலகிலே ஏழு அதிசயங்கள் இருந்தாலும் என் அம்மாவே என் அதிசயம். "அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ்" என்ற திருக்குறளின் அர்த்தத்தை எனக்கு உணரச் செய்த தெய்வம் என் அம்மா. நான் தேவதையைக் கண்டதில்லை கடவுளைக் கண்டதில்லை, ஆனால் இரண்டும் சேர்ந்த வடிவமாய் என் முன்னே நடமாடும் ஜீவன் என் அம்மாவைக் காண்கிறேன். ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் என் அன்னைபோல் ஒரு தெய்வம் இல்லை. உன் மடிமீது தலை சாய்த்து உறங்கினால் இவ்வுலகே எனக்கு மறந்துபோகும் மாயம் உன் அன்பில்தான் உள்ளது. உன்னை எத்தனை முறை நான் காயப்படுத்தினாலும் மீண்டும் மீண்டும் மருந்தாய் வந்து சுகமளிப்பவள் நீதானே என் அம்மா. குருவி தன் குஞ்சுகளை காப்பதுபோல் எனைக் காக்கும் என் காவல் தெய்வமே நீதானே! இவ்வுலகில் நான் பெறும் எல்லா இன்பங்களுக்கும் பின்னால் நீ பட்ட இன்னல்கள் மறைந்து உள்ளதம்மா! என் தாயாக நீ கிடைப்பதற்கு நான் புண்ணியம் செய்திருக்கவேண்டும். எத்தனை முறை நான் பிறந்தாலும் அத்தனை முறையும் நீயே என் அம்மாவாக வேண்டும். என் அன்பு அம்மா ஆயிரம் முத்தங்கள் உனக்கு என் அம்மா.

டன்சன் மதுமிதா
யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்.

# உயிர்களின் மேல் அன்பு

சிறுவர்களாகிய நாங்கள் உயிர்களின் மேல் அன்பு செலுத்தவேண்டும். இறைவன் உயிர்க் குலத்திற்குக் கொடுத்த ஒரேயொரு வரம் அன்புதான். அன்பே உயிர்க்குலத்தின் வளர்ச்சிக்கு ஊற்று. அன்பே உயிர்க்குலத்தின் வளர்ச்சிக்கு பாதுகாப்பு கவசம்.

நாம் உயிர்களை பிடித்து அடைத்து வளர்க்கக் கூடாது. அவை சுதந்திரமாக வாழும் உரிமையை கொடுக்க வேண்டும். நாம் பறவைகள், மிருகங்களுக்கு எம்மால் முடியு மானவரை உதவி செய்யவேண்டும். அவற்றிற்கு உணவு கொடுத்து மகிழ வேண்டும். இந்த உயிரினங்கள் இனம் பெருகி வாழ்வதற்கு எம்மாலான உதவிகளை செய்ய வேண்டும்.

"கொத்தித் திரியும் அந்தக் கோழி அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திரியும் அந்தக் காக்கை அதற்கு
இரக்கப்பட வேண்டுமடி பாப்பா
பாலைப் பொழிந்து தரும் பாப்பா அந்த
பசு மிக நல்லதடி பாப்பா ...."

எனக் குழந்தையாக இருக்கும் போதே அவர்களுக்கு அன்பாய் இருக்க கற்றுக் கொடுக்கிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

ஆதலால் அன்புடையவராக விளங்க உயிர்களின்மேல் அன்பு வைத்து கடைசியாக நம்மை நேசித்துக் கொள்ளவேண்டும். அதுவும் வாழ்தலுக்குக்காகவேயாகும். அன்பு இல்லையேல் பிறதுறைகளில் பெற்றவை அதாவது அறிவு, யோகம் முதலியன கூட பயனற்றுப் போகும். எனவே நாம் ஒவ்வொருவரும் அன்புள்ளவர்களாக இந்த வையத்திலே பிறர்மீதும் உயிர்கள்மீதும் அன்பு செலுத்தி வாழ்ந்து அன்பின் விடியலை அனுதினம் கண்டு அகமகிழ்வோடு இன்புற்று வாழ்வோமாக.

செல்வி. ரஜீனா ரவிச்சந்திரன்
யா இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே மனித இயல்பு

"அன்பிலார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார் என்றும் உரியபுர் பிறர்க்கு" என்ற குறள்பாவின் மூலம் திருவள்ளுவர் அன்பின் மகிமையை மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். அன்பு மனித இயல்பு. அன்பின்றி ஒரு அணுவும் அசையாது. அன்பு என்பது ஒருவராலும் அசைக்கமுடியாத ஓர் ஆயுதம். இந்த உலகம் சுழன்று கொண்டிருக் கின்றதென்றால் அது அன்பின் மூலமாகத் தான். அன்பு என்பது எல்லோரிடமும் இயல்பாகக் காணப்படுகின்ற ஒரு செயல். அன்பால் செய்யமுடியாத காரியம் எதுவுமில்லை.

அன்பை யார் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். அதே அன்பை யார் வேண்டு மானாலும் யாருக்கும் கொடுக்கலாம். இது இறைவனால் மனிதனுக்காக படைக்கப் பட்ட பொக்கிஷம் மனிதர்கள் எல்லோரும் ஏதோஒரு வகையில் இந்தக் குறுகிய காலத்தில் அன்பிற்காய் மட்டும்தான் ஏங்கிக் கொண்டிருக் கின்றார்கள். அன்பு இறைவனுக்கு மேலாக புனிதமாகப் போற்றப்படுகின்றது. அன்பால் எதை வேண்டுமானாலும் செய்யமுடியும். அன்பு யாரிடம்தான் இல்லை. அன்பால் பணிந்தவர்கள் யார்தான் இல்லை. கரையாத கல்கூட அன்பால் கரைந்துவிடும். அன்பிற்கு அந்தளவிற்கு சக்தி உண்டு. உலகம் சுழல்வதற்கும் உயிர்கள் உயிர் வாழ்வதற்கும் எல்லாவற்றிற்குமே அன்பு ஒன்றுதான் காரணமாக காணப்படுகின்றது.

விலைமதிப்பில்லாத பொக்கிஷம் அன்பு. பணம் கொடுத்து வாங்க முடியாதது அன்பு. யாராலும் அழிக்கமுடியாதது அன்பு. அன்பால் இந்த உலகை ஆண்டவர்கள் பலர். அன்பால் ஒருவனை அழிக்கவும் முடியும். அதே அன்பால் ஒருவனை ஆக்கவும் முடியும்.






மகாத்மா காந்தி அன்பென்னும் அஹிம்சையை கைக் கொண்டபடியால் தான் நாம் இன்னும் தமிழர்களாக நடமாடுகின்றோம். மனிதனுக்கு மனிதன்தான் அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்றில்லை. ஐந்து அறிவு படைத்த உயிரினங்கள் மீதும் நாம் நமது அன்பைக் காட்டலாம். அன்பை மனிதர்கள் மனிதர்கள் மீதுதான் காட்டவேண்டும் என்றில்லை. அன்பை யார்மீதும் காட்டலாம். அன்பொன்றினால்தான் இந்த பூமி இன்னும் அழியாது காணப்படுகின்றது. அன்பு ஓர் அன்னை தன் பிள்ளைமீது காட்டுகின்ற அன்பு பாசமாக கருதப்படுகின்றது, பிதா தன் பிள்ளை மீது காட்டுகின்ற அன்பு அக்கறை, ஆசான் மாணவர்கள்மீது காட்டுகின்ற அன்பு அறிவு, ஒரு நண்பன் நண்பன் மீது காட்டுகின்ற அன்பு நட்பு, ஒரு ஆண் ஒரு பெண் மீது வைக்கின்ற அன்பு காதல் என அன்பு பலவகையாகக் காணப்படுகின்றது.

எக்காலத்திலும் எவ்வேளையிலும் மக்கள் மனித நேயம் மிக்கவராக வாழவேண்டும். எல்லா மதங்களுமே அன்பைத்தான் போதிக்கின்றன. நீ உன்னை நேசி. தானாகவே பிறரையும் நேசிப்பாய். இவ் அன்பு ஆதிகாலத் தொடக்கத்திலிருந்து பேணப்படுகின்றது. இதிகாசங்கள், புராணங்கள் எல்லாமே அன்பின் மகிமை பற்றித்தான் கூறுகின்றன. நாம் இறைவன் மீது காட்டுகின்ற அன்பு பக்தி. இறைவன் நம் மீது காட்டுகின்ற அன்பு கருணை எனப் படுகின்றது. கண்ணப்பநாயனார் இறைவன்மீது கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவற்ற அன்பின் காரணமாகத்தான் தன் கண்ணையே இறைவனுக்காகக் கொடுத்தார். எதுவித தயக்கமுமின்றி ஒரு துளியேனும் சிந்திக்காது தன் கண்ணை சிவனுக்கு கொடுத்தார். யாரால் முடியும். உடல்உறுப்புகளிலேயே சிறந்தாக போற்றப்படுகின்றது கண். அவ்வாறான கண்ணையே சிவனுக்கு கொடுப்பதற்கு காரணம் அவர் இறைவன் மீது கொண்ட அளவற்ற அன்பு. இதிலிருந்தே அன்பின் மகிமை தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது. அன்பு என்பது ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகவே காணப்படுகின்றது.

மனிதனிடம் இயல்பாகவே அன்பு காணப் படுவதனால்தான் அநாதைக் குழந்தைகள் துன்பமில்லாமல் இன்பமாக வாழமுடிந்தது. அன்னை தெரேசாவை யாராலுமே தெரிந்திருக்காமல் இருந்திட முடியாது. அவர் ஏழைகளின் மீது கொண்ட அன்பினால் மட்டும்தான் அவரால் ஏழைகளுக்கு உதவிசெய்யமுடிந்தது. அவர்களுக்காக குரல்கொடுக்க முடிந்தது. அன்பிற்கே அடி நாதமாக போற்றப்படுகின்றார். சிபிச் சக்கரவர்த்தி மன்னன் சிறு புறாவுக்காக தன்னுடைய உடம்பிலிருந்து தன்னுடைய சதையை வெட்டிப் புறாவிற்கு எடையாகக் கொடுத்தார். அவன் அவ்வாறு செய்வதற்கு காரணம் அன்பு. அன்பு எல்லோரிடமும் இயல்பாகக் காணப்படுகின்றது. அன்புள்ளம் கொண்டவர்களையே சமுதாயம் மதித்துப் போற்றும். இதனையே உலகம் விரும்புகின்றது. அன்பைப் பயன்படுத்திமாத்திரமே நாம் அடையநினைக்கும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளமுடியும். அன்பு இல்லாதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. அதேபோன்று அன்பை வெளிக்காட்ட முடியாதவர்கள் என்று யாருமே இல்லை.

உயிர்களிடத்தில் நாம் காட்டுகின்ற அன்பு கருணையாக படுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் மீதும் அன்பு செலுத்துபவர்களாகவே காணப்படுகின்றார் கள். அதே போலதான் நாம் உயிர்களிடத்தில் அன்பைக் காட்டவேண்டும். அன்பின்றி எதுவுமேயில்லை. அன்பு ஓர் அழகான ஆயுதம். இந்த உலகத்தில் இருக்கின்ற எல்லோரும் இறைவனால் படைக் கப்பட்ட மனிதர்கள். எல்லோருமே இறக்கத் தான்போகின்றோம். அதுவரை நாம் வாழப்போகின்ற இந்த குறுகிய காலம்வரை அன்பை எல்லோருக்கும் கொடுப்போம்.

அன்பு இல்லாவிட்டால் மனிதனே இல்லை. பணமின்றி நாம் இலவசமாக பெற்றுக்கொள்வது இந்த அன்பை மட்டும்தான். அந்த அன்பை உண்மையான அன்பாக எல்லோக்கும் கொடுப்போம். இறக்கத்தான் பிறந்தோம். அதுவரை அன்பைக் கொடுப்போம். இன்றுவரை இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு அடிப்படைக்காரணம் அன்பு மட்டும்தான். உங்கள் இதழ்களை புன்னகை செய்வதற்காக மட்டும் பயன்படுத்துங்கள். யாரையும் அறியாமல்கூட காயப்படுத்தி விடாதீர்கள். ஏனென்றால் ஒரு மனிதனை வீழ்த்தக் கூடிய ஆயுதம் நா மட்டும்தான். தூய்மையான அன்பைக் கொடுத்து உண்மை யான அன்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். அன்பே மனித வாழ்வின் அடிப்படை இயல்பு.

சண்முகலிங்கம் சண்கீதா
பிரிவு 03
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையில் அன்பு

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி அரிதிலும் அரிது" என்றார் திரு.வி.கல்யானசுந்தரனார். அந்த மனிதப் பிறவியில் பிறந்து நாம் இயற்கையோடு ஒத்து ஒழுகிக் கொள்ளுதல் நம் எல்லோரினதும் கடமையாகும். ஆகவே இயற்கையுடன் மனிதன் அன்பான உறவைப் பேணுதலே உயர்ந்த வாழ்க்கையாகும்.

மனிதனது வாழ்க்கை அகச்சூழல், புறச்சூழல் என்பவற்றால் உருவாக்கம் பெறுகின்றது. புறச்சூழலில் இயற்கை வளங்கள் பங்கெடுக்கின்றன. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப் பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள பொருட்கள் யாவும் இயற்கை யோடு சம்பந்தப்பட்டவையாகும். அதே போன்று ஐம்பூதங்களில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றின் இயக்கங்களுக்கும் இயற்கை அவசியமாகும். நாம் அவற்றை மரியாதை யுடன் போற்றுவோமானால் இயற்கையின் அன்பில் இறைவனைக் காணலாம். ஒரு நாட்டில் இயற்கை வளமாகிய காட்டுவளம் சிறந்ததாக அமையும் போது அந்த நாடே வளம் பெறுகின்றது. நம் மூதாதையர் அன்று இயற்கையை போற்றி அன்பு செலுத்தி வாழ்ந்தனர். ஒரு காட்டை நாம் பேணிப் பாதுகாத்தால் அது ஒரு நாட்டின் இயற்கை வளத்தையும் பொருளாதார வளத்தையும் உறுதிப்படுத்தும் ஒரு சாதனமாகும் என்று கூடச் சொல்லலாம்.

இயற்கை நமக்கு அளிக்கும் நன்மையை உணராமல் இயற்கையை நாம் ஏன் சீண்டிப் பார்க்கின்றோம். நாம் இயற்கையை மரியாதையுடனும் வணங்கவேண்டும். இதற்கு சிறந்த உதாரணமாக படருவதற்கு இடமின்றி இருந்த முல்லைக்கொடிக்கு தன் தேரையே கொடுத்தான் பாரிமன்னன். அதுபோல பேகன் என்ற அரசன் குளிரால் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையைக் கொடுத்தான்.



இதைவிடச் சிறந்த முன்னுதாரணமாக சிபிச் சக்கரவர்த்தியின் கதையைக் கூறலாம். புறாவுக்காக தன்னுடைய தொடையை வெட்டிக்கொடுத்தார். இது அவர்கள் செய்த அன்பில்லையா? ஒவ்வொரு மனிதனும் தான் செய்த தவறை எண்ணினால் இயற்கையை நன்றாகப் பேணிப் பாதுகாக்கலாம். முற்காலத்தில் மனிதன் இயற்கையையுடன் தொடர்புற்றிருந்தான். இயற்கையை நேசித்தான். அந்தக் காலம் முதல் இயற்கையைப் பற்றி பல்வேறு விதங்களில் அறிந்து கொண்டனர். இயற்கையுடனான தொடர்பு முதலில் எகிப்திய மக்களால் உருவானது என்று கூறலாம். அவர்கள்தான் இயற்கையையும் இயற்கைப் பொருட்களையும் வணங்கினார்கள்.

அதாவது எகிப்திய மக்களால் வணங்கப்பட்ட இயற்கைகள் சூரியக் கடவுளைக் ஆடேன், சூறாவளிக் கடவுளை சென் என்றும் ஆகாயக் கடவுளை ஹேட்டர் என்றும் மரங்களின் அதிபதியை ஒரிசிஸ் எனவும் அழைத்து வணங்கினார்கள். அதைவிடக் காட்டிற்குச் செல்லும்போது காட்டுத்தேவதையிடம் அனுமதிவேண்டி உட் செல்வார்கள் என்பது செவி வழிக்கதையுண்டு. அவ்வாறு மனிதனுக்கு இயற்கை எவ்வாறு தோன்றுகின்றதோ: அவ்வாறே இயற்கையை வழிபட்டனர். இயற்கையை மதிப்புடனும் மரியாதையுடனும் அன்பு செலுத்தி வழிபட்டு வந்தனர்.

மனிதனின் பௌதீகத் தேவைகள் அனைத்தையும் இயற்கை வழங்கியது. சூரியன், சந்திரன், மரங்கள், மிருகங்கள், மனித எலும்புகள் என்பவற்றையும் வழிபட்டனர். அதேபோல ஒவ்வோரு சமயமும் இயற்கையைப் பற்றிக் கூறுகின்றது. பௌத்த சமயம் மனிதனை இயற்கையோடு இணைத்துக் காண்பதே பௌத்த தர்மமாகும். "புத்த பெருமான் இயற்கைக்கு மனிதரால் மரியாதை அளிக்கப்படவேண்டும்." என்று கூறினார்.

இந்து சமயமானது "இயற்கைக்கும் தெய்வத்தன்மை உண்டு என்று கூறுகின்றது. இதுவே இந்து சமயத்தின் நோக்காகும். "நிலம் உள்ளவரை விதைத்தலும் அறுவடையும்" என்பதுபோல நாம் இயற்கை இருக்கும்வரை இயற்கையை வணங்கவேண்டும். அத்தோடு இயற்கையை பேணிப் பாதுகாத்துவிடுதல் நன்று ஒன்றைமட்டும் மனதில் வைக்கவேண்டும். அதாவது "இயற்கையை நீ அழித்துக் கொண்டிருந்தால் ஒருநாள் இயற்கை உன்னை அழிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது."

எனவே இயற்கையை பேணி நாம் சந்தோசமாகவும் இயற்கையில் அன்பு செலுத்தி வாழ்வோமாக!
"இயற்கையில் அன்பு செலுத்தி இன்பமாக வாழ்வோம்"

தம்பிநாயகம் மதுசனா
தரம் - 09
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமூகத்தில் அன்பு



"அன்பே சிவம்" எனும் வாக்கிற்கிணங்க அன்பே உலகிற்கெல்லாம் மேன்மையானது. நாம் பிறக்கும்போதே அன்பில் கட்டப்படுகின்றோம். அன்பொன்றே உன்னதமாக தெரியும். அன்பைப் பற்றி கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், பௌத்தம் ஆகிய மதங்கள் மிக அழகாக எடுத்தியம்பு கின்றன. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர், அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" என்கிறது இந்து மதம். உங்களை நேசிப்பவர்களை மட்டும் நேசிப்பதால நற்பெயர்கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா? கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் கூட அதைச் செய்கிறார் கள். உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கு நீங்கள் நல்லது செய்தால் அதில் என்ன அதிசயம் உள்ளது? தீயவர்களும் அந்த அளவுக்கு நன்மை செய்கின்றனர். உங்கள் எதிரியை நேசியுங்கள். பின் பரம்ம மண்டலத்திலிருந்து உங்களுக்கு கிடைக்கும் பரிசு உயர்ந்ததாகவிருக்கும். நீங்கள் இறைவனின் புதல்வர்களாக இருப்பீர்கள். என்கிறது கிறிஸ்தவ மதம்.

யார்மூலம் சமூகத்திகு நன்மை அதிகரிக்கின்றதோ அவனே சிறந்த மனிதனாவான். இறைவன் படைப்புக்குள் அனைத்துமே அவன் குடும்பத்தினர் ஆவார். இறைவனின் படைப்புக்கு மிக அதிகம் உதவி செய்ய முயற்சி செய்பவரே இறைவனுக்கு மிக நெருங்கிய அன்பனாகிறான் என்கிறது இஸ்லாம் மதம். உலகில் உள்ளது ஒரே மதம் - ஒரே கடவுள் அதுவே அன்பு. அந்த அன்பு ஒரு நொடியில் மாற்றமுடியாத எந்தப் பழக்கவழக்கங்களையும் எந்த நோய்களையும் மாற்றிவிடும். அன்பிற்கு இணையாக இவ்வுலகில் ஒன்றும் இல்லை. அன்பு என்பது பிறந்தவுடன் அன்னையுடன் ஆரம்பிக்கின்றது. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது ஒரு திரைப்படப்பாடல். ஒரு பிள்ளை பிறக்கின்றது. அது வளர்ந்து நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவனை நல்வழியில் வழிகாட்டுவது ஒரு அன்னையாவார். அன்பையும், பொறுமையையும், கீழ்ப்படி வையும் விட்டுக்கொடுப்பையும் பிள்ளை தாயிடமிருந்தே அறிகின்றது.

"மோட்சம் என்பது எங்கோ தொலைவில் இருப்பதாக நாம் நினைக்கின்றோம். ஆனால் பரிபூரணமான அன்பு நம் மனதில் நிறையும்போது மோட்சத்தின் எல்லை யை நாம் தொட்டுவிடுவோம்" என்கிறார் சர்வமதப்பிரியர் சாயிபாபா அன்பின் சிறப்பை ஒரு கதையின்மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. ஒருநாள் சிவபக்தி நிறைந்த சிவகிரியின் குடும்பத்தினர் ஒன்றாக வீட்டில் இருந்தனர். அப்பொழுது சிவன் சிவகிரியை சோதிப்பதற்காக யாசகர்கள் மூவரை அவரிடம் அனுப்பினார். அந்த யாசகர்கள் சிவகிரியின் வீட்டுவாசலில் நின்று" உள்ளே வரலாமா" என்று கேட்டனர். சிவகிரி மிகவும் பரிவுகொண்டவன். அனைத்தையும் அன்பு செய்வதன் காரணமாக சிவஅருள் மிக்கவன். அவன் அவர்களை உள்ளே அழைத்தான். அப்பொழுது அவர்கள் நான் பணம், இவர் கல்வி, மற்றையவர் அன்பு எங்கள் மூவரில் நீங்கள் ஒருவரைத்தான் வீட்டிற்குள் அழைக்க முடியும் என்றனர். சிவகிரி ஒரு தர்மசங்கடத்திற்கு ஆளானான். உடனே சிவகிரியின் மகன் கோகுலன் தந்தையிடம் "அப்பா கல்வியை அழைப்போம் அப்பொழுதுதான் நாம் சிறந்த மனிதர்களாக திகழ முடியும். மற்றவர்கள் நம்மை மதிப்பார்கள்" என்றான். உடனே சிவகிரியின் மனைவி பார்வதி "வேண்டாம், பணம் உள்ளே வரட்டும். பணம் வந்தால் நாம் செல்வச் செழிப்போடு வாழலாம். நாம் கடன் பட்டு வாழவேண்டாம். நாம் பெரிய வீடுதுரவோடு இருக்கலாம்" என்றாள். ஆனால் சிவகிரியோ அமைதியாக நின்று யோசித்துவிட்டு அன்பை உள்ளே அழைப்போம். அப்பொழுதுதான் நாம் சந்தோசமாக இருப்போம். அன்பே எல்லாவற்றிலும் மேன்மையானது என்றான். இறுதியாக அன்பையே உள்ளே அழைத்தனர். ஆனால் அன்பைத் தொடர்ந்து கல்வியும், பணமும் உள்ளே வந்தனர். உடனே பார்வதி "நீங்கள்தானே சொன்னீர்கள், எங்கள் மூவரில் ஒருவர்தான் வரலாம் என்று, நாங்கள் அன்பைத்தானே உள்ளே அழைத்தோம்" என்றாள். பின்பு அன்பு சொல்லலாயிற்று. "நான் எங்கு உள்ளேனோ அங்கே பணமும், கல்வியும் நிறைந்திருக்கும். அன்பே உலகத்திற்கு பொதுவானது. அன்பே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமாகும். "அன்பே சிவம்" என்று கூறி மூவரும் மறைந்தனர். இவை சிவபெருமானின் திருவிளையாடல் என்பதை சிவகிரி அறிந்து கொண்டான். இன் கதையினூடாக "அன்பே சிவம்" என்பது தெளிவுபடுகிறது. இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் அன்பின் மேன்மை சிறந்து விளங்குகின்றது. சிபிச் சக்கரவர்த்தி என்ற மன்னன் புறாவை காப்பாற்றுவதற்காக தன் உடலின் சிறு அங்கத்தை வெட்டிக்கொடுத்து உயிரினங்கள் மீது செலுத்தும் அன்பை எடுத்துக் காட்டுகிறார். பாரிமன்னன் இயற்கைமீது கொண்ட அன்பினால் தனது தேரின்மீது முல்லைக்கொடியை படரவிட்டார். நாயின்மீது வைத்த அன்பால் மோட்சம் செல்லும்போது, நாய்க்கு கிடைக்காத முக்தி இன்பம் தனக்கும் வேண்டாம் என்று தருமன் கூறியுள்ளார். இவற்றின் மூலம் அன்பின் பெருமை புலப்படுகின்றது. உண்மை இருக்கும் இடத்தில் மட்டுமே அன்பும் அமைதியும் அதன் வடிவமான கடவுளும் அவரது ஆசீர்வாதமும் இருக்கும்.

"ஆண்டவன் மீது கொள்ளும் உள்ளார்ந்த அன்பு மட்டுமே மனித சமுதாயத்தை ஒன்றிணைக்கும் கருவியாக அமையும்" என்கிறார் சாயிபாபா.

இன்று உருண்டோடிக் கொண்டிருக்கும் உலகின் அன்பு என்பது அற்ப பொருளாக மாறிவிட்டது. அன்பை விலைகொடுத்துதான் வாங்கவேண்டும். குடும்பத்தில் காணப்படும் அன்பானது இன்று சிறைப் படுத்தப்பட்டு விட்டது. தந்தை அலுவலகத்தில் நாட்களை கழிக்கின்றார். பிள்ளையோ தாய், தந்தையின் அன்பில்லாமல் ஆயா மூலமாகவே வளர்கின்றார்கள். இதனால் சில பிள்ளைகள் அன்பு என்றால் என்னவென்றே உணராத, தெரியாதவர்களாகவே காணப்படுகின்றனர். அன்பின் முதல் பள்ளியாய் திகழும் குடும்பத்திலே அன்பில்லையென்றால் எந்த மனிதனும் பூரணமடையமாட்டான்.



எனவே முதலில் குடும்பத்தில் அன்பு மிளிர வேண்டும். பெற்றோர்கள் பிள்ளை களுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். துன்பத்திற்கு நிவாரணம் அன்பு என்பதே மருத்துவர்களில் முதல் மருந்து. எனவே அன்போடு இருந்தால் இயற்கை அழிவுறாது. நாம் இயற்கை மீதும் சமூகத்தின் மீதும் அதீத அன்பு கொள்ளவேண்டும்.

அறிவு எதையும் பிரித்துப்பார்க்கும். ஆனால் அன்போ எல்லாவற்றையும் சேர்த்துப்பார்க்கும். அன்பிற்கு மொழி கிடையாது. மொழிகள் புரியாத இடத்தில் அன்பினால் அனைத்தையும் சாதிக்கலாம். அனைவருக்குள்ளும் அன்பு இருக்கின்றது. அதை வெளிப்படுத்தும் மனிதரே நல்லறிவு கொண்டமனிதராவார். "பொறுமையின்மூலம் கோபத்தை வெற்றி கொள்ளுங்கள். அன்பின் மூலம் வெறுப்பினை வெற்றிகொள்ளுங்கள்" என்கிறார் சர்வமதப்பிரியர் சாயிபாபா. நாமும் சாயி பாபாவைப்போல் அன்பையே மேன்மையாகக் கொண்டு வாழவேண்டும். எனவே அன்பே தலை சிறந்த தொன்றாகும். நாம் எப்பொழுதும் சமூகத்தோடு அன்பாக இருக்கவேண்டும். ஆகவே, "அன்பே சிவம்"

ஸ்பெல்டின் பிரியா
யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்.

## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 112687014, 0094 777316935



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் மகாசக்தி

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்" என்று வள்ளுவர் அன்பைப்பற்றி தனது திருக்குறட்பாவில் கூறியுள்ளார். அதில் அன்பிற்கு அணைகட்ட முடியாது. அன்பு ஓர் மகாசக்தி என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். மக்கள் இறைவன்மீது கொண்ட அன்பை பக்தி என்றும், தாய் மகன் மீது கொண்ட அன்பை அக்கறை என்றும் தலைவன் தலைவி மீது கொண்ட அன்பை காதல் என்றும் பலவகையாக அன்பை வகைப்படுத்தி காட்டியுள்ளனர்.

இவ்வுலகில் உள்ள மக்கள் யாவரும் ஒருவர்மீது ஒருவர் ஏதோ ஒரு வகையில் அன்பினை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர். ஒரு மனிதனில் பொறாமை, கோபம், நான் எனும் அகந்தை, இரக்கமின்மை போன்ற பல்வேறு குணங்கள் காணப்படுகின்றன. இவ்வனைத்து தீய குணங்களையும் அடக்கி ஒரு மனிதனை பூரண மனிதனாக மாற்றக்கூடியது அன்பெனும் மகாசக்தியே.

இப் பூவுலகில் பிறந்த அனைவரையும் அந்த அன்னை (இயற்கைத்தாய்) தாங்குகின்றாள். அவள் மக்கள் மீது கொண்ட அன்பினால்தான் மனிதர் என்ன தீமைகளை செய்தாலும் அவற்றை பொருட்படுத்தாமல் சகிப்புடன் தாங்குகிறாள். ஒருவர்மீது ஒருவர் பொறாமை கொண்டாலோ அவர் செய்கின்ற செயல்கள் தவறானது என்றதும் அவர்மீது கோபம்கொண்டாலோ இந்த உலகில் என்னைவிட எதுவும் பெரிதில்லை என்று எண்ணி நான் எனும் அகந்தையுடன் திரிந்தாலோ எம்மை யாரும் மதிக்கப் போவதில்லை. அத்தோடு நாம் இவ்வுலகில்தான் இருக்கின்றோமோ என்ற சந்தேகங்களையும் இவ்வாறான தீய குணங்கள் ஏற்படுத்திவிடும்.

ஆனால் அன்பென்ற ஓர் ஆயுதத்தை பயன்படுத்தி தீய செயல்களை செய்கின்றவனைகூட நல்ல மனிதனாக மாற்றமுடியும். நமது எதிரியைகூட அன்பெனும் சக்தியால் அரைநொடியில் நம் நண்பனாக மாற்றமுடியும். ஆதிகாலம் தொடங்கி இன்றுவரை அன்பைவிட ஒரு சிறந்த மருந்தும் மகாசக்தியும் இந்த உலகில் இல்லை என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். இராமன் மீது கொண்ட அன்பினால் இலக்குமணன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் சென்றார்.

இவ்வாறு அன்பு மட்டுமே எல்லா இடங்களிலும் மேலோதங்கி காணப்படுகின்றது. விலங்குகளுக்கும் அன்பென்றால் ஒரு மகாசக்தி என்பது புரியும். அவை ஐந்தறிவுடைய ஜீவராசிகளாக இருந்தாலும் அன்பாக பேசினால் அவ்வார்த்தைக்கு அடிபணிந்துவிடும். பல மகான்கள் தவ சிரேஷ்டர்கள் இறைவனை இவ்வன்பு வழியில்தான் அடைந்தனர். இவ்வுலக வாழ்வில் இருந்து கன்மவினைகளிலிருந்து நீங்கி முக்திபெற விரும்பி இறைவன்மீது அன்பு வைத்தனர். அதன்பலனாக இறைவனை அடைந்தனர்.


காரைக்கால் அம்மையாருடைய கதையில் கூட அவர் இறைவன் மீது கொண்ட அன்பினால் காடு, மலை என எதுவும் பாராமல் நடந்து எலும்பாக மாறிய பிறகும் இறைவனை காண வேண்டும் என்ற ஆர்வத்தில் திருத்தலத்தை அடைந்தார். திருத்தலத்தை அடைந்த பிறகும் தமது பாதங்கள் தீயவை களையும் அசிங்கங்களையும் மிதித்தும் தாண்டியும் வந்தது என்பதனால் தமது பாதம் அத்திருத்தலத்தில் படக்கூடாது என்று தனது தலையால் நடந்துசென்றார். அந்த செயலில்தான் இறைவன் மீது கொண்ட அன்பை அவர் வெளிப்படுத்துகின்றார்.

அதேபோன்று இறைவன் மக்கள் (உயிர்கள்) மீது கொண்ட அன்பினால்தான் திருப்பாற்கடலிலே அமுதோடு நஞ்சினைக் கலந்தபோது அந்த நஞ்சை உண்டு மக்களை காப்பாற்றினார். இந்தச் செயல்களிலிருந்து மக்களை இறைவன் நேசிக்கும் தன்மை விளங்குகின்றது.

இவ்வாறு அன்பு இல்லாத இடம் எதுவுமே இல்லை. நீ ஒருவனை அன்பாக நடத்தினால் உனக்கு ஒரு தீமை நடைபெறும் பொழுது அவன் உனக்கு உதவுவான். பொறாமை, கோபம், நயவஞ்சகம் இவற்றிற்கு இல்லாத சக்தி அன்பிற்கு உண்டு. இந்த தீய எண்ணங்களை அடியோடு அழிக்கும் ஓர் சக்தி உண்டெனில் அது அன்பென்ற மகா சக்தியே ஆகும். "அன்பே சிவம்" "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாம் என்பர் அறிவுடையார்" இது திருமந்திரத்தினை படைத்த திருமூலரது கூற்று. அந்த கூற்றிலேயே இறைவனும் அன்பும் ஒன்றுதான். அன்பென்ற வழியிலேயே இறைவனை அடையலாம். அதை தவிர வேறு வழியில்லை என்று எமக்கு விளக்க முற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு

அன்பை விட மிகச் சிறந்த மருந்து எதுவும் இல்லை. இதைத்தான் எல்லா மதங்களும் போதிக்கின்றன.

அன்பினால் இவ்வுலகை ஆண்டவர் பலர். அன்பை மட்டும் நீ ஆயுதமாக பயன் படுத்தினால் போதும் இவ்வுலகமே உனது சொல்லிற்கு அடிமைதான். மற்றோர்களைக் காணும் போது அன்பான ஓர் பார்வை, இதழாலே ஒரு புன்னகை அதுவே போதும் காலம் முழுவதும் அவர்களின் மனதில் நீ நிலையாய் காணப்படுவாய். மனிதர்களிடம் மட்டுமன்றி விலங்குகள், தாவரங்கள் என அவற்றின் மீதும் அன்பை காட்டவேண்டும். "முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி", "மனுநிதி கண்ட சோழன்" இவர்களின் கதைகள்மூலம் அவர்கள் உயிர்கள்மீது கொண்ட அன்பும், அவ்வன்பின் மகத்துவமும் புரிகின்றது.

எனவே "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நாம் அன்பை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி பிற உயிர்களிடத்தில் அவ் அன்பை காட்டி எல்லோர் மனதில் நீங்காத இடத்தைபிடித்து அதே அன்பினால் பிறரை நல்லவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் மாற்றி இவ்வுலகை உய்விப்போமாக!

நாகவிமல சிறி டயானா
பிரிவு 03
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்



பூஞ்சோலை எனும் ஓர் அழகான கிராமம் அக்கிராமத்திலே மாதவன், விமலன் இரு நண்பர்கள் வசித்து வந்தார்கள். இவர்கள் இருவரும் அன்பு உள்ளவர்கள் எப்போதுமே ஒற்றுமையாக இருப்பார்கள். இவர்கள் இருவரையும் பார்த்த சுரேஸ் இவர்கள் மீது பொறாமை கொண்டான். எப்படியாவது இவர்கள் இருவரையும் பிரிக்க திட்டம் தீட்டினான். வழக்கம்போல மாதவனும் விமலனும் விளையாடுவதற்காக கடற்கரைக்குச் சென்றார்கள். அதைப் பார்த்த சுரேஸும் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவர்கள் ஒற்றுமையாக கோபுரம் கட்டி விளையாடினார்கள். அதைப் பார்த்த சுரேஸ் இவர்களை பிரிப்பது சுலபம் இல்லை என்று நினைத்து திரும்பிச் சென்றான். ஆனாலும் சுரேஸின் மனதிலே இருவரையும் எப்படியாவது பிரிக்கவேண்டும் என்று அவனது மனதிலே ஓடிக்கொண்டிருந்தது. சுரேஸ் மறுநாள் மாதவனைக் காண்கிறான். எப்படியாவது இவனது மனதைக் குழப்பி இவர்களது நட்பை பிரிக்க இது ஓர் அரிய சந்தர்ப்பம். இதைக் கைவிடக்கூடாது என்று நினைத்து மாதவன் அருகில் செல்கிறான். "ஹாய்! எப்படி இருக்கிறீங்க" "நான் சுகம், அது சரி இந்த ஊரில் உங்களை நான் முன்னர் பார்க்கவே இல்லை" "அதுக்கு என்ன இப்ப பாத்துட்டீங்கள் தானே. நானும் உங்ககூட பிரன்ஸ் சேர விரும்புகிறேன்" "அப்படியா? அது நல்ல விடயம்தான். எங்களை தேடி எவ்வளவு அன்பாக கேட்கும் போது சேராமல் இருக்கமுடியுமா? எதுக்கும் நான் விமலனை கேட்டுவிட்டுச் சொல்கிறேன். ஏன் அவனெண்டால ரொம்ப பிடிக்குமோ?" "ஆமாம் எனக்கு அவனெண்டால் ரொம்பப் பிடிக்கும். அது மட்டுமல்ல. அவன்தான் என்னை சிறந்த முறையில் வழிநடத்தி நான் இந்த நிலைமைக்கு இப்ப உன்முன்னால நிக்குறன். அவனுக்காக என் உயிரைக்கூட கொடுப்பேன். மாதவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் சுரேஸின் கெட்ட சிந்தனைகள்அடியோடு அழிந்துபோய் விட்டது. தான் இப்படி ஓர் அன்பான நண்பனை இது வரைக்கும் இந்த உலகில் பார்க்கவே இல்லை. நானும் இப்படி ஒரு நண்பனோட நட்பு கிடைக்கப்போவதை நினைத்து மிகவும் சந்தோசப்படுகிறேன்" என்று மாதவனுக்கு சொல்லுகிறான். மறுநாள் மூன்றுபேரும் ஒன்றாகச் சந்திக்கிறார்கள். இந்த உலகில் அன்பை விட எதுவுமே இருக்கமுடியாது. அன்புக்கு முன்னால் நாங்கள் எல்லோரும் அன்பான பிள்ளைகள் என்று விமலன் தனது நண்பர்களுக்கு கூறிக்கொண்டு மூவரும் சென்றார்கள்.

சி.நிவேதா
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் மகா சக்தி

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவைப் பாட்டியின் வாக்கிற்குப் பொருத்தமாக அமைய மனிதர்களாகப்பிறந்த நாம் உயிர்களிடத்தில் அன்பை செலுத்தவேண்டும். எவனொருவனின் உள்ளத்தில் அன்பு ஊற்றெடுக் கின்தோ, அவன் இந்த வையகத்தில் உயர்ந்தவனாகிவிடுகின்றான்.

மனித குலத்தின் மேன்மைக்கும் வெற்றிக்கும் எழுச்சிக்கும் உரிய வழி அன்பு என்று கூறினால் அது மிகையாகாது. அன்பினால் எதையும் சாதித்துவிடலாம். அன்பு என்ற வார்த்தைக்கு விளக்கம் கூற முடியாது. அதனை நாம் செய்கையிலேயே காணலாம். இந்த வகையில் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டவேண்டும். எடுத்துக்காட்டாக நாம் ஆடு, மாடுகளை எம் தேவைக்காக பயன்படுத்தவே கூடாது. அந்த உயிர்கள் எம்மைப் பார்த்து பயப்படாதவகையில் நாம் அன்பு செலுத்த வேண்டும்.

இதனாலேயே இறைவனுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் தனது அன்புடைமை என்ற அதிகாரத்திலேயே "அன்பின் வழியது அஃர் நிலை உயிதிலர்க்கென்பு தோல் போர்த்த உடம்பு" எனக் கூறியுள்ளார். அன்பு இல்லாதவர்க்கு இந்த உடம்பு எலும்பினை தோலால் போர்த்தியது போலாகும் என்கிறார். எவன் ஒருவன் தன்னை நேசிக்கின்றானோ அவன் மற்றைய உயிர்களையும் நேசிப்பான். உள்ளத்தில் கருணை படைத்தவன் இறைவனுக்கு சமமானவன் ஆவான்.



"அன்போடு நாளினைத் தொடங்கிடுக
அன்போடு நாளினை செலவு செய்கள
அன்பினால் நாளினை நிரப்பிடுக
அன்பினால் நாளினை நிறைவு செய்க
இதுவே இறைவனை அடையும் வழி"

என பாபா மகத்துவ மொழியின் மூலம் அன்பும் இறைவனும் ஒன்றே. அன்பே இறைவனை அடையும் வழி எனக்கூறி போற்றியுள்ளார். அன்பின் அடையாளங்களாக தன் தசையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும் ஐந்தறிவுகொண்ட கன்றுக்காக தன் மகனை தேர்க் காலில் இட்டுக் கொலைசெய்த மனு நீதி கண்ட சோழனின் கதையும் முல்லைக்கு தன் தேரையே கொடுத்த பாரிமன்னனின் கதையும் அன்பின் அடையாளங்களே.

அன்பே கடவுளாவார். அன்புடையவர் பிறருக்கு வரும் துன்பத்தை தனக்கு வந்த துன்பமாகக் கருதுவார். துயர்கண்ட இடத்தில் மனத்தூய்மையுடன் நின்று செயற்படுவர். இதனையே எமது இலக்கியங்களும் கூறுகின்றன. இவ் இலக்கியங்களைக் கற்ற நாம் மனத்தூய்மையுடன் ஜீவகாருண்யமும் உடையவர்களாக வாழவேண்டும்.
அன்பு என்பது இன, மத, மொழி வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டவை. இறைவனின் உண்மைப் பெயர் ஆத்மா ஆகும். இந்த ஆத்மாவின் உண்மைப் பெயர் அன்பு ஆகும். அன்பு எங்கும் நிறைந்தது. எமது துயரங்களைத் தீர்ப்பதும் அன்பு. அன்பே அனைவரையும் இணைக்கின்றது. எமது மனமும் அன்பினாலேயே தூய்மையடைகின்றது. அன்பை திருவள்ளுவர் "அன்புற்று அமர்ந்த வளக்கென்ப வையத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு" என இந்த உலகத்தில் இன்பம் அடைந்தவரின் சிறப்புபற்றி கூறியுள்ளார்.

பகைமையை இவ் உலகில் ஒருபோதும் பகைமையால் வெல்ல முடியாது. அன்பினாலேயே பகைமையை வெற்றிகொள்ளமுடியும் என புத்தபெருமான் பகைமையை வெல்ல அன்பென்ற ஆயுதமே போதும் என்று கூறியுள்ளார். அன்பெனும் ஆயுதம் கொண்டே அகிலத்தில் அனைவரையும் நல் முறையில் வாழவைக்கமுடியும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்..." என்ற திருமூலரின் கருத்தும் இதனையே குறிப்பிடுகின்றது. அன்பே சிவம் என்பதன்மூலம் அன்பே இறைவனின் திருவுருவம் என நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். இவை மட்டுமல்ல தமிழில் எழுந்த காப்பியங்களான இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளிலெல்லாம் அன்பு மேலோங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அன்பு

உன்னதமாய் வாழும் இந்த மானிடப் பிறவியிலே அன்பிற்கோர் அச்சாணியாய் விளங்குபவள் அன்னையே ஆவாள். குழந்தையொன்று தனது வாயால் முதன்முதலில் கூறும் வார்த்தை அன்பின் அடித்தளமாக விளங்கும் "அம்மா" என்னும் சொல்லையே ஆகும். ஒருதாய் பத்துமாதம் சுமந்து ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். அந்தத் தாயே தனக்குப் பிள்ளையால் எந்த இடர்வரினும் மனதாலும் சபிக்காத அன்புடையவள் ஆவாள். காரணம் அந்தப்பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது படும் துன்பங்களை அவளைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள். சொந்தங்கள் பிரிந்தாலும் சொல்லாலும் நழுவாதவள் அன்னையே ஆவாள்.

ஒரு தாயானவள் தனது பிள்ளையின் வாழ்க்கைப் பயணம் எங்கெங்கு செல்லவேண்டுமோ அங்கே செல்வதற்கு நல்ல வழியை எடுத்துக் கூறுபவள் பெற்றவளே ஆவாள். ஆனால் பெரும்பாலானோர் பெற்றவளின் பெருமதிமிக்க அறிவுரையை காதிலும் விழுத்துவதில்லை. அவளின் அன்பைக் கூடப்புரிந்து கொள்வதில்லை. தனது கால் போனபோக்கெல்லாம் சென்றுவிடுகின்றான். இதனால் பாரிய பிரச்சனைகளுக்குக்கூட ஆளாகவேண்டி உள்ளது. இதையொத்தே "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்று ஆதிகாலம் தொட்டே கூறப்படுகின்றது. இக் காலத்தில் தாயைத் தமது கால்தூசியாகவே கருதுகின்றனர். இதற்கும் முற்பட்ட காலங்களில் தாயைப் பெருமதி வாய்ந்த சொத்தாகவே கருதி வந்தனர். அவர்களுக்காகவே தனி மரியாதை வழங்கப்பட்டது.

இவ்வுலகில் எந்தவொரு அறிவாளி இருந்தாலும் அவர் ஒரு தாய்மூலமாகவே இந்த நிலையை அடைந்தார் என்பதை மறந்து விடலாகாது. எனினும் இந்த அன்னையர்களைச் சிறப்பிக்கும் முகமாகவே மே 8ஆம் திகதி அன்று உலக அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஒருமுறை நபித்தோழர் மனிதர்களில் நான் யாருக்குக் கட்டுப்படுகிறேன் என்று அடுத்தடுத்து மூன்றுதடவைகள் அதே கேள்வியைக் கேட்டும் இறைதூதரான நபிகள் நாயகம் அவர்கள் "தாய்" என்றே பதிலளித்தார். எனினும் அவருடைய பதில் சரியாக இருப்பினும் அதனைப் பெரும்பாலானோர் நடைமுறைப்படுத்துவதில்லை. எனவே அன்னையருக்கு மரியாதை இழக்கப்படுகின்றது.

தற்காலத்தில் முதியோர் இல்லங்கள் அதிகளவில் காணப்படுகின்றது. காரணம் பிள்ளைகள் தமது தாய்மாரை முதுமைப்பருவத்தில் பராமரிக்கமுடியாமல் முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். இதனால் பெற்றோரின் மனநிலைப் பாதிப்புக்கும் கூட அவர்கள் காரணமாகின்றனர். அவ்வாறான பிள்ளைகளைத் தானே அவர்களின் தாய் பெற்ற பிள்ளை என்று அன்பைப் பொழிந்து அமுதூட்டி வளர்த்தாள். ஆனால் அமுதளித்த அன்னைக்கு உணவளிக்க முடியாதவர்களாகப் பிள்ளைகள் வாழ்வது கவலைக்குரிய விடயமாகும். துறவிகள் கூட எல்லாவற்றையும் துறந்துவிட முடியாது. இதற்கும் உதாரணமாக ஆதிசங்கரருடைய தாய்க் காணப்படுகின்றதை அவதானிக்கலாம். இராமயாணத்தில் இராமன் காடு போக தந்தை இறந்த செய்தியும் மகாபாரதத்தில் வருகின்ற பஞ்ச பாண்டவர்களின் கதையும் கண்களால் குருவைப் பார்க்காது மானசீகமாய் குருவினை வழிபட்ட ஏகலைவனின் கதையும் கோவலன் இறக்க கண்ணகி மதுரையை எரித்த கதையும் தன் உறவுகளிற்காக தன் உயிரினை அர்ப்பணித் தமையும் அன்பின் அடையாளங் களாக மிளிர்வதனை காணலாம்.

"பெற்றோருடனும் மற்றோருடனும் அன்பாக பாசப்பிணைப்புடனும் பழகுபவனுடைய மரணத்தை அல்லா இலேசாக்குகிறார். அவரை சுவர்க்கத்திலும் நுழையச்செய்கிறார்" என முகமது நபி அருமையான வாசகம் மூலம் நல் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். எம்மிடத்தில் அன்பு இருக்கும் இடத்தில் எம்முடன் பேரானந்தமும் நிலை கொள்ளும். நாம் எமது ஒவ்வொரு பணியையும் அன்புடனேயே செய்ய வேண்டும்.

எம் எண்ணத்தில் அன்பை கைக் கொள்வது சத்யம், செயலில் அன்பைக் கைக் கொள்வது தர்மம் எனப்படுகின்றது. எமது உணர்ச்சியிலேயே அன்பினை கைக் கொள்வது சாந்தி எனப்படுகின்றது. அன்பை புரிதலையே அஹிம்சை எனக் குறிப்பிடு கின்றோம். மொத்தத்தில் எம் அன்பானது மனித மனங்களை மட்டும் இளக வைக்கும் என எண்ணலாகாது. விலங்குகள், தாவரங்கள் கூட அன்பினை பயக்கிறது. எம் இதயத்தை நிறைத்து நிற்பது அன்பு என்பதால் அன்பே மனித இயல்பு எனலாம். விலங்குகள் பறவைகள், சிற்றெறும்புகள், புறாக்கள் எவ்வாறு அன்பு கொண்டு வாழ்கின்றனவோ அவ்வாறே நாமும் அன்பு கொண்டு வாழக் கற்றுக்கொள்வோமாக.

ச.விதுஷா
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இறக்கும் தறுவாயில் எனது மகன் என்னை மடிதாங்கவேண்டும் என வரம் பெற்றவர் ஆவார். இப்படி அன்னையின் அன்பைப்பற்றி வாயால் கூறிமுடிக்க இயலாத மாபெரும் காவியம் போன்றதாகும்.

ஒரு தாயானவள் பகல் முழுவதும் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு இரவிலும் தூக்கம் இன்றி தனது பெற்றபிள்ளையைப் பாசத்தோடு அரவணைப்பவளாவாள். பாசத்தின் அகராதியாகவும் கடவுளின் கருணையாகவும் பெண்மையின் சிறப்பை உயர்த்துபவளாகவும் அன்னை விளங்கு கிறாள். ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அத்தனை உறவுகளின் ஆத்மார்த்தமான அன்பை ஒருமிக்கச் செய்து அன்பின் உச்ச நிலையைக் காட்டுவது தாயன்பு மட்டுமேயாகும். தூய்மையான அன்பின் மகத்துவத்தை வார்த்தைகளால் அடக்கிவிடமுடியாது. எம்மால் பெற்றவர்களுக்கு ஏதாவது நன்மை, தீமை செய்யப்பட்டிருப்பின் அவை நமக்கே எமது பிள்ளைகளால் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமேதுமில்லை. அன்னையால் நினைக்கும் காரியம் யாவற்றையும் செய்து விடமுடியும்.

பொறுமைக்கு உதாரணமாக பூமாதேவி விளங்குகின்றாள். ஆனால் அன்புக்கு உதாரணமாக அன்னையே விளங்குகிறாள். அது மட்டுமல்லாமல் தாயானவள் தன்பிள்ளையின் நல் வாழ்க்கைக்காக தினம் ஏங்குபவள் ஆவாள். இப்படிப்பட்ட அன்னையை எந்தவொரு கவிஞனாலும் அந்தளவு சுலபத்தில் வர்ணிக்கமுடியாது. தாயானவள் பிள்ளைக் காக எவற்றைச் செய்தாலும் பிள்ளைகள் அதற்கு ஈடான உதவிகளைச் செய்வதில்லை. தாய், தந்தை, குரு, தெய்வம் என்று அன்று தொடக்கம் இன்றுவரை கூறப்படுகின்றது. அவ்வரிசையை நோக்கினால் முதலிடம் வகிப்பவள் அன்னை மட்டுமே ஆவாள். இவளைத் தவிர பிள்ளைகளுக்கு அதிக பாசமூட்ட யாராலும் இயலாது என்பது உண்மையே ஆகும்.

அன்பு என்பதன் உட்கருத்தாக தாய் விளங்கு கிறாள். அவளைப் போற்றித் தெய்வமாக மதிக்கும் காலத்தில் அவளை அவமானப்படுத்தும் செயற்பாடுகளில் நாம் ஈடுபடுகின்றோம். ஒரு தாயானவள் தனது பிள்ளையை அன்பு என்னும் பாசக்கயிற்றால் இறுகக்கட்டி தனது பிள்ளையை ஒரு பொக்கிஷமாகவே பாதுகாக்கின்றாள். ஆனால் அவற்றைப் புரியாதவர்களாகவே நாம் வாழ்கின்றோம்.

எனவே நமது வாழ்க்கைப் பயணத்தைச் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து, இப் பூவுலகை தலை நிமிர்ந்து நிற்க அன்னையின் அறிவுரையை காதில் விழுத்தி நமது தாயின் ஆசீர்வாதமாக எண்ணி நாமும் எமது குடும்பமும் தலை நிமிர்ந்து வாழ வழிவகுப்போமாக!

ஜெ.கலிஸ்னா
யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புட்டபர்த்தியில் நடந்த சத்சங்கத்தில் கேட்டவை .....

ஒருநேர்காணலில் பட்டப் படிப்பு மாணவர்களும் வேறு அடியார்களும் இருந்தார்கள். மாணவர்கள் சுவாமியைத் தங்களின் விடுதிக்கு வருமாறும் தங்களுடன் கதைக்கு மாறும் கெஞ்சினார்கள். (ஏனென்றால் சுவாமி சில நாட்கள் இவர்களுடன் கதையாமல் இருந்தார்) சுவாமி தனது பக்தர்கள் தரிசனத்திற்காகக் காத்திருக்கிறார்கள். போக வேண்டும் என்று சொன்னார். மாணவன் ஒருவன் தாங்களும் பக்தர்கள் தானே என்று சொன்னான். இதற்குச் சுவாமி "நீங்கள் மாணவர்கள். இங்கே படிக்க வந்துள்ளீரகள். வெளியில், இருப்பவர்கள் பக்தர்கள். எவ்வளவோ தொலைவிலிருந்து எவ்வளவோ தொல்லைகளுக்கு மத்தியில் எனது அன்புக்காக வந்துள்ளார்கள்" என்று சொல்லித் தரிசனம் கொடுக்கப் புறப்பட்டார்.

இராமாயணக் கதையைப் பிரபஞ்ச சக்தியே எழுதி கதாபாத்திரங்களைத் தெரிந்தெடுத்து சக்தியும் அவதார மெடுத்து எல்லோரையும் திறமையாக நடிக்க வைத்தார். இராமர், சீதை, இராவணன் ஆகியோருக்கு இந்நாடகக் கதை முன்னரே தெரியும். இராவணன் போருக்கு ஆயத்தமாகும் போது மண்டோதரி இராவணனை நோக்கி "ஏன் எல்லோரையும் போரில் ஈடுபடுத்த வேண்டும். தேவரீரும் இராமரும் போராடித் தீரக்கலாமே" என்று சொன்னாள். இராவணன் "ஆம். இராமர் என்னைக் கொன்று எனக்கு விடுதலை அழிப்பார். இராக்கதர்கள் எல்லோரும் விடுதலை பெற வேண்டும் என்பதே எனது நோக்கம்" என்று பதிலளித்தான். போரில் இராவணன் மற்றும் இராக்கத வம்சத்திலுள்ள அநேகர்களும் மடிந்து விடுதலை பெற்றார்கள். எஞ்சிய இராக்கதர்கள் போரில் நேரடியாக ஈடுபடாதபடியால் உயிர் பிழைத்தார்கள். போர் முடிந்ததும் எஞ்சியவர்கள் இராம பிரானிடம் தங்களையும் கொன்று விடுதலை தருமாறு மன்றாடினார்கள். இராம பிரான் கலியுகத்தில் அவதரித்து இவர்களுக்கு விடுதலை கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். இந்த நேர் காணலின் போது பேராசிரியர் கஸ்தூரியும் உடன் இருந்தார். அவர் தான் நல்ல பக்தி மான் என்ற எண்ணம். பகவானிடம் தான் இராம அவதாரத்தின் போது யாராக இருந்தேன் என்று கேட்டார். அவரது மனத்தில் தான் அனுமானாக இருந்திருப்பேன் என்ற எண்ணம். சுவாமி அவரது எண்ணத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு சிறிது நேர அமைதிக்குப் பின் "நீயா அப்போது எஞ்சியிருந்த இராக்கதர்களில் ஒருவனாக இருந்தாய். "என்று சொல்லி கஸ்தூரி அவர்களிடமிருந்த சிறிய அகங்காரத்தையும் அழித்தார்.




முன்னாள் சுவாமியின் மாணாக்கன் கூறியது:

பஜனையின் போது எங்களின் தலை தெரியாமல் பெண் பிள்ளைகள் பக்கம் திரும்பி விட்டால் உடனே சைகை மூலம் "கவனமாயிரு.கண்ணைத் தோண்டிப் போடுவேன்" என்று எம்மை எச்சரிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாம்ருத்யுஞ்ஜய மந்திர மஹா யக்ஞம்





மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரயக்ஞம் 22.01.2017 அன்று யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் காலை 7.00 மணிதொடக்கம் நண்பகல் 2.00.மணிவரை நிகழ்ந்தது.


உலக நலன்களுக்காகவே யக்ஞம்,யாகம் நடாதப்படுகின்றன.அதி ருத்ர மஹா யக்ஞம் மனிதனிலுள்ள ராக்ஷசத்தன்மையைஅகற்றி, தெய்வீகத்தன்மையை அதிகரிக்கிறது.

மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரம்
ஓம் த்ர்யம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனான்
ம்ருத்யோர் மூக்ஷிய மாம்ருதாத்.

கருத்து
நறுமணம் கமழ்பவரும் உணவூட்டி வளர்ப்பவரும் முக்கண்ணருமாகிய சிவபெருமானைப் போற்றி வழிபடுகிறோம். வெள்ளரிப்பழம் காம்பிலிருந்து விடுபடுவது போல் மரணத்தின் பிடியிலிருந்து விடுபடுவோமாக. ஆன்ம நிலையிலிருந்து விலகாமல் இருப்போமாக.
மரணத்தை வெல்வதே இம் மந்திரத்தின் பொருள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்வது என்ற பொருள் அல்ல. வாழும் பொழுதே உடம்பைத் தனக்கு வேறானது என்று உணர்வது தான் மரணத்தை வெல்வது என்பதாகும்.

நன்மைகளாவன:

- வெளியே செல்லும் போது இந்த மந்திரத்தை ஓதினால் விபத்துகளிலிருந்தும் வேறு ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றப்படுவோம்.
- மாற்றமுடியாதகொடியநோய்களையும் குணப்படுத்தலாம.
- இறந்தவர்களை உத்தேசித்து இந்தமந்திரத்தைச் செபித்தால் அவர்களுக்கு நற்கதி கிடைக்கும்.
- மோட்சத்தை அளிக்க வல்லது.
- செல்வம் சாந்தி திருப்தி ஆகியவற்றையும் தரவல்லது.



TRUTH
RIGHT CONDUCT
PEACE
LOVE
NON VIOLENCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வ மத விழா

சர்வ மத விழா 22.04.2017 அன்று மானிப்பாயிலுள்ள சத்ய சாயிபாடசாலையில் நிகழ்ந்தது.

இப்பகுதியிலுள்ள சகல மதப் பெரியார்களையும் அழைத்து, மதங்களுக் கிடையேயுள்ள ஒற்றுமையை மக்களுக்கு விளங்க வைத்து, சர்வ மத ஒற்றுமையை நிலை நாட்டுவதே இவ்விழாவின் நோக்கமாகும்.

பாடசாலை அலங்கரிக்கப்பட்டு தேசியக் கொடி, பிரசாந்திக் கொடி, பாடசாலைக்கொடி ஆகிய மூன்றும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.

காலை 9.05 மணிக்கு விருந்தினர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு. ஒரு நிமிட மௌன பிரார்த்தனையின் பின்பு மங்கல விளக்கு ஏற்றப்பட்டது.

மங்கள விளக்கை ஏற்றி இந்த விழாவுக்கு ஒளியூட்டிய பிரமுகர்களாக:

**பிரதம விருந்தினர்:**
ஆளுநர் மாண்புமிகு றெஜினோல்ட் கூறே அவர்கள்.

**சிறப்பு விருந்தினர்:**
மாகாண முதலமைச்சர் மாண்புமிகு க.வ.விக்னேஸ்வரன் அவர்கள்.

- சத்திய சாயி சர்வதேச நிறுவனம், ஸ்ரீலங்கா மத்திய சபைத் தலைவர் ஸ்ரீ.வி.மனோகரன் அவர்கள்.
- வண.மீகஹ ஜந்துரேசிறீவிமலதேரர், ஸ்ரீநாகவிகாராதிபதி அவர்கள்.
- அருட்தந்தை ஜெபரட்னம் கத்தோலிக்க திருச்சபை முதல் குரு அவர்கள்.



- கலாநிதி பால கைலாசநாத சர்மா,சிரேஷ்ட விரிவுரையாளர.யாழ்.பல்கலைக்கழகம், அவர்கள்
- அல் ஹாஜ் மௌலவி யு.ஆ.யு.ஆசீப் காசினி யாழ். கிளிநொச்சி உலாமா சபைத் தலைவர் அவரகள்.
- திரு.நா.புவநேந்திரன், மனித மேம்பாட்டுக் கல்வி தேசிய இணைப்பாளர் அவர்கள்.
- யாழ்.மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சனா ஹெற்றியாராச்சி அவர்கள்.
- வலிகாமம் கல்வி இணைப்பாளர் மதிப்பக்குரிய திருமதி ஹேமானந்த யுறேனியாய அவர்கள்,
- திருமதி. வன்னியசேகரம் அவர்கள்,
- சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் வடமாகாண இணைப்புத்தலைவர். திரு.கே.வி.சிவநேசன் அவர்கள்
- சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார் அவர்கள்,
- திரு.இ.வசந்தசேனன் அவர்கள், முன்னாள் மாவட்ட நீதிபதியும், சத்திய சாயி பாடசாலையின் பணிப்பாளரும் ஆவார்,
- கலாநிதி திருமதி சுந்தரேசன் அதிபர் சத்திய சாயி பாடசாலை அவர்கள் ஆகியோர் மங்கல விளக்கை ஏற்றி வைத்தார்கள்.

இந்நிகழ்விற்கு திரு.இ.வசந்தசேனன் அவர்கள் தலைமை வகித்தார்கள். வைத்திய கலாநிதி.சி. சிவகோணேசன் அவர்கள் நெறிப்படுத்தினார்கள்.

மங்கல விளக்கேற்றலைத் தொடரந்து திரு.சி. சிவோதயன் அவர்கள் விருந்தினர்களையும் சபையோரையும் அன்புடன் வரவேற்றார்.

வரவேற்புரையின் பின்பு உடுவில் நாட்டிய கலா கேந்திரத்தினர் வழங்கிய வரவேற்பு நாட்டிய நாடகமும் இடம்பெற்றது. இதை கலாநிதி.திருமதி.கிருஷாந்தி இரவிந்திரன் அவர்கள் நெறிப்படுத்தினார்கள். இதில் முதல் தனி நடனமும் தொடர்ந்து குழுநடனமும் இடம் பெற்றது.


குழு நாட்டிய நாடகத்தில் சகல மத போதனை களையும் எடுத்துக்காட்டி, எல்லா மதங்களிலும் அன்பு தான் மையப் பொருளாக எடுத்தோதப்படுகிறது என்றும் இதனையே சத்திய சாயி பாபாவும் வலியுறுத்தியுள்ளார் என்றும் காட்டப்பட்டது. நாட்டிய நாடகத்தின் பெயர் “அன்பு வழி” என்பதாகும் இதற்கு நுண்கலைப் பட்டதாரிகள் பக்கவாத்தியம் வாசித்தார்கள்.

பிரதம விருந்தினர் மாண்பு மிகு றெஜினால்ட் குரே அவர்கள் வேறு நிகழ்வொன்றில் பங்கு பற்ற வேண்டியிருந்த தால் அவரது உரை அடுத்து இடம் பெற்றது.

“ எல்லோருக்கும் வணக்கம்!
சகல மனித வாழ்க்கையில் முரண்பாடுகள் மூன்று நிலைகளிலுள்ளன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையில்
மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில்
மனிதனுக்கும் இதயத்திற்கும் இடையில்

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே ஏற்படும் முரண் பாட்டைத் தீர்க்க விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உதவும்.

மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை நிவர்த்தி செய்ய மதபோதனைகள் உதவி செய்யும். எல்லோரிடமும் அன்பு காட்டவேண்டும். மத வித்தியாசமே முன்னைய காலங்களில் முரண்பாடுகளுக்கும் போர்களுக்கும் காரணமாயிருந்தன. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் முரண்பாடு இருந்தது. இப்போது இஸ்லாமியர்களுக்கிடையிலேயே முரண்பாடுகளும் அமைதியின்மையும் அதிகரித்துள்ளன. மனிதன் மேலே வைத்திருக்க வேண்டியதைக் கீழேயும் கீழே வைத்திருக்க வேண்டியதை மேலேயும் வைத்துள்ளான். மனிதன் தன்னைக் கீழே வைத்து இன, மத, மொழியை மேலே வைத்துள்ளான். இதனால் தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

மதத்தைப் பிடித்துக் கொண்டு அதன் போதனைகளைக் கை விடுகிறோம். புத்த மதம் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறது. புத்த விகாரையில் இந்துத் தெய்வங்களான விஷ்ணு, கணபதி, சக்தி ஆகியோரின் உருவங்கள் வைத்து வணங்கப்படுகின்றன. இன்று சகல மதத்தினர்களும் ஒன்று கூடி ஒற்றுமையை வலியுறுத்துவது நல்ல உதாரணம். சத்திய சாயி பாபாவும் ஒற்றுமையை அன்பு, இரக்கம் மூலம் ஏற்படுத்தவே செயற்பட்டுள்ளார். இன. மத, ஜாதி பேதமில்லாத நல்ல காலம் வரத்தான் போகிறது. இந்த விழாவிற்கு என்னை அழைத்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

இதைத் தொடர்ந்து வடமாகாண முதலமைச்சர் மாண்பு மிகு க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.
ஓம் குருர் ப்ரஹ்மா குரர் விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்மா தஸ்மை ஸ்ரீகுரவே நம:
என்ற பிரார்த்தனையுடன் தனது உரையை ஆரம்பித்தார்.




இக்காலக் கட்டத்தில் சர்வமத விழாக்கள் அவசியமாகின்றன. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவும் சர்வ மதங்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவதையே தனது பெரும் பணியாகக் கொண்டு நம்மை ஆற்றுப்படுத்தினார். மதங்கள் இடம், காலம், சந்தர்ப்பம் ஆகியவற்றால் சில செயற்பாடுகளை தம்தம் மதத்திற்கு ஏற்ப உள்ளடக்கி யுள்ளன.

மதஸ்தாபகர்கள் அந்த அந்த மதத்திற்கு மட்டும் சொந்தமல்லர். அவர்கள் மனித குலம் முழுமைக்கும் சொந்த மானவர்கள். மனிதர்கள் பிறக்கும் போது பக்கச்சார்பற்றவர்கள் பின்னரே பக்கசார்பு ஏற்படுகின்றது. தற்போது வாழ்க்கை இயந்திரமயமாகின்றது. இதனால் நேரமில்லை என்கின்றனர். முற்காலத்தில் வாழ்க்கை நிறைவுள்ளதாக இருந்தது. நேரம் இருந்தது.

நேரத்தை தெய்வ வழிபாட்டில் ஈடுபடுத்தினர். மக்களிடையே இணக்கத்தை ஏற்படுத்த இத்தகைய நிகழ்வுகள் அவசியமாகின்றன. நாட்டிய நாடகம் நல்ல எடுத்துக்காட்டு எனலாம். இத்தகைய நாடகங்களை எங்கும் போட்டுக் காட்ட வேண்டும். நன்றி.

அடுத்ததாக வடபிராந்திய படைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சனா ஹெற்றியாராச்சி அவர்கள் ஆங்கிலத்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை நிகழ்த்தினார்கள்



"ஓம் ஸ்ரீ சாயி ராம் ! எல்லோருக்கும் வணக்கம். நான் மதத்தைப் பற்றிப் பேசத் தகுதியற்றவன். ஆனால் 33 வருடங்கள் இராணுவத்தில் கிடைத்த எனது அனுபவங் களை வைத்துச் சிறிது பேசலாம் என எண்ணு கிறேன். நல்லதும் கெட்டதும் மனிதனின் மனதில்தான் எழுகின்றன. கெட்ட எண்ணங்கள் கெட்ட செயல்களைத் தூண்டும். மாறாக நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களைச் செய்யத் தூண்டும். மேலும் நல்ல எண்ணங்கள் உதித்தால் சமாதானம் நிலவும். ஒரு மதமும் வன்முறையைப் போதிக்கவில்லை. விசேஷமாக புத்த மதம் அஹிம்சையையே போதித்துள்ளது. நாம் மதங்களின போதனையைப் பின்பற்றினால் சமாதானம் திகழும். நாம் தான் முதலில் ஏனைய மதங்களை மதிக்க வேண்டும். நாம் மதித்தால் ஏனையோரும் எம்மை மதிப்பார்கள். நாம் முதலில் புன்னகை புரிந்தோமானால் மற்றவர்களும் எமக்குப் புன்னகை தருவார்கள். நாம் முப்பது வருடங்களாகப் போரினால் பாதிக்கப் பட்டோம். தென் இலங்கை மக்கள் தாங்கள் கூட பாதிக்கப் பட்டோம் என்கிறார்கள் வட இலங்கை மக்கள் தாங்கள் அதிகம் பாதிக்கப் பட்டோம் என்கிறார்கள். உண்மையில் முழுத்தேசமும் பாதிக்கப்பட்டது. அபிவிருத்தி பாதிக்கப்பட்டது. இப்போது காலம் வந்து விட்டது. நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் நம் தேசத்தைக் கட்டி எழுப்புவோம். சிறு பிள்ளைக் காலத்தில் நானும் சிநேகிதரும் யாழ்ப்பாணம் வந்து நண்பர் வீட்டில் தங்கினோம். அவர்களும் விடுதலை நாட்களில் எங்கள் வீடுகளில் வந்து தங்குவார்கள். இப்படியான நட்புறவை நாம் மீண்டும் தொடங்குவோமாக. நன்றி. வணக்கம்.



நெறியாளர், கிழக்கு மாகாணத்தில் வெள்ளப் பெருக்கின் போது சத்திய சாயி நிறுவனத்துடன் இணைந்து நிவாரணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டதைச் சபை யோருக்கு நினைவூட்டினார்.

இதனைத் தொடர்ந்து சத்திய சாயி பாடசாலைப் பணிப்பாளரும் முன்னாள் மாவட்ட நீதிபதியுமான மதிப்புக்குரிய திரு.இ.வசந்தசேனன் அவர்கள் தனது தலைமையுரையை நிகழ்த்தினார்.



பகவானை வணங்கி, விருந்தினர்களுக்கும் சபை யோருக்கும் வணக்கம் செலுத்தினார். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் சிரார்த்தினம் 24.04.2011 ஆகும். பகவான் மதங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டு மென்ற அறிவுரைக்கிணங்க, சர்வ மத விழாவை இம்மாதம் கொண்டாடுகிறோம் மதம் மக்களை நல் வழிப்படுத்தவும் இறைவனை நோக்கி நகர்த்தவுமே ஸ்தாபிக்கப்பட்டது.

மதங்களின் பாதையிலிருந்து மக்கள் விலகிச் செல்வதால் தான் உலகில் பல இடங்களில் முரண்பாடுகள் உள்ளன. நாம் மதக் கொள்கைகளை மதிக்க வேண்டும். ஆறு உள் எதிரிகளை அகற்ற வேண்டும். நல்ல பண்புகளை வளர்பதற்கே மதங்கள் துணை புரிகின்றன. மதத்தைக் கடைப்பிடிப்ப தென்றால் மத இலட்சியங்களை மத போதனை களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். பின்பற்றாமையே மதங்களுக்க ஏற்பட்ட வடு. எத்தனை மதமாயினும் வளரட்டும். நாம் ஏற்றுக் கொள்வோம்.

இன்பம் வந்த பொழுது இறைவனை மறந்து விடுகிறோம். துன்பத்தில் துவளும் போது இறைவனைத் தேடுகிறோம். எங்களின் பிரார்த்தனை தூய்மையான இதயத்துடன் செய்யப்பட்டால் இறைவன் எங்களைப் பாதுகாப்பார். இதே போன்று சர்வ மத விழாக்கள் பல இடங்களில் நடாத்தப்பட வேண்டும். இன்றைய விழா ஒரு முன்மாதிரியாக இருக்கட்டும். நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர். அருட்திரு.ப ஜெபரட்ணம் அவர்கள் உரை நிகழ்த்தினார்.



எல்லோருக்கும் வணக்கம் சொல்லி, கத்தோலிக்க திருச்சபை ஆயர் அதி வந்தனைக்குரிய ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியாததையிட்டு மன்னிப்புக் கேட்டுள்ளார். அவர் இவ்விழா சிறப்பாக நடக்க தனது ஆசீர்வாதத்தையும் என் மூலம் அனுப்பி, என்னைப் பங்கு கொள்ளுமாறு பணித்துள்ளார்.

சர்வ மதக்கோட்பாட்டை சத்திய சாயி பாபா இலட்சியமாகக் கொண்டுள்ளார். ஒரே ஒரு கடவுள் தான். நாம் எல்லோரும் அவரின் பிள்ளைகளே. இது கண்ணுக்குத் தெரியாத விடயம். ஆனால் யதார்த்தமானது. இந்த உண்மையைக் கண்டு கொள்வதே இன்றைய நிகழ்ச்சியின் நோக்கம் ( Unity of faith is an invisible entity) சத்திய சாயி பாபாவின் மதம் அன்பு மதம். மத பேதங்களைக் குறைக்க வேண்டும். கத்தோலிக்க மக்களோ அல்லது குருமார்களோ ஏனைய மதங்களை இழிவு படுத்தினால் அது மிகவும் தவறு. அவ்வாறாக நடந்த நடந்து கொண்டிருக்கின்ற தவறுகளுக்கெல்லாம் கத்தோலிக்க திருச்சபை மன்னிப்புக் கோருகிறது. விவிலிய நூலில் பரிசுத்த பவல் அன்பைப் பற்றிக் கூறியதைச் சொல்லுகிறேன் "அன்பு பொறுமை யானது, இரக்கமானது, பொறாமையில்லாதது, தற்புகழ்ச்சி இல்லாதது, அகங்காரம் இல்லாதது, தீங்கு நினையாதது, இறுமாப்பில்லாதது, எரிச்சல் இல்லாதது. நம்பிக்கையுள்ளது, எதிர்ப்பில்லாதது, நிரந்தரமானதும் ஆகும்.

அன்பின் விளைவு மன்னிப்பும் தியாகமும் ஆகும். இரண்டும் தேவை. யேசுபிரான் முன்னிலையில் விபசாரப் பெண்ணை நிறுத்தி கல்லால் எறிய ஆயத்தமானார்கள். யேசுபிரான் அப்பெண்ணை மன்னித்து இனிமேல் பிழை செய்யாது இரு என்றார். மற்றவர்களைப் பார்த்து பாபிகளே உங்களையும் மன்னித்துவிட்டேன். போங்கள் என்றார் இரண்டாவது நிகழ்வு சிலுவையில் ஏற்றப்பட்ட போது நிகழ்ந்தது. கீழே நின்ற தீயவர்கள் " நீ பிதாமகன் என்றால் மூன்று ஆணிகளையும் கழற்றி விட்டு கீழே வா. நாங்கள் உன்னை நம்புவோம். ஏற்றுக் கொள்வோம்" என்றனர் ஆனால் யேசு பிரானோ "கீழே நிற்பவர்கள் அறியாதவர்கள். அவரகளை மன்னித்து விடுங்கள்" என்று வேண்டினார். சிலுவையிலிருந்தது தனது வலியைப் போக்க வில்லை. மற்றவர்களுக்காக பிதாவிடம் மன்னிப்புக் கோரினார். இங்கே தியாகம் மேலோங்கியுள்ளது. 30 வருடங்கள் போரின் போது பலர் எவ்வளவோ தியாகங்கள் செய்தார்கள். ஆனால் சமாதான காலத்தில் எமக்குத் தீங்கு இழைத்தவர்களை மன்னித்து, எமக்கு ஏற்பட்ட காயங்களை மறப்பதுதான் மிகப்பெரிய தியாகம். மன்னிப்பில் குற்றங்களை மறந்து விட வேண்டும். இதுதான் யாருக்கும் தோல்வி இல்லாத முடிவு. இது நட்புறவுக்கு அவசியம் .உதாரணமாக கணவன் மனைவிக்கிடையே தகராறு. கணவன் மனைவியை முழங்காலிட்டு மன்னிப்புக் கேட்கச் சொல்கிறான். மனை வியும் அப்படியே செய்கிறாள். மன்னிப்புக் கொடுக்கப்படுகிறது. மனைவிக்குக் கிடைக் கிறது. ஆனால் சுயகௌரவம் தாக்கப் பட்டுள்ளது. இதில் கணவனுக்கு வெற்றி. மனைவிக்குத் தோல்வி. இருவருக்கும் தோல்வி இல்லா விட்டால்தான் நட்புறவு மேலோங்கும். இறைவனிடமும் வெற்றி தோல்வி இல்லை. அன்பு வாழ்வு முறையைப் பின்பற்ற வேண்டும். இதைக்கிரகிக்கின்ற பாதையில் செல்ல வேண்டும்.

இந்த உன்னதமான நிலையை கண்டறிவதற்கு இவ்விழா உதவி செய்யும். நாட்டிய நாடகம் அற்புதமாக இருந்தது. ஒரே கடவுள், ஒரே சொர்க்கம். எல்லோரும் வரவேற்கப்படுவார்கள்.

நன்றி.

அடுத்து வண.மீகஹ ஜந்துரே ஸ்ரீ விமல தேரர்,நாகவிகாராதிபதி தனது உரையை ஆரம்பித்தார்:
எல்லோருக்கும் காலைவணக்கம் கூறியபின் தம்மபதத்திலிருந்து ஒரு சுலோகத்தைக்கூறி அதன் பொருளை பின் வருமாறு தந்துள்ளார் அதாவது எல்லாப் பாபங்களிருந்து விலகி, நல்ல காரியங்களைச் செய்து, மனத்தை ஒருநிலைப் படுத்துவதே பௌத்த தர்மம். புத்த சமயம் 2600 வருடங்களுக்கு முன்பு சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதித்தது. ஒரு கவி பின்வரும் பொருளைத் தரும் பாடலைப் பாடினார்
"திருடனால் திருட முடியாதது
அரசனால் எடுக்க முடியாதது
வெள்ளத்தால் அழியாதது
கல்வியே ஆகம்."

புத்தம் ஒரு மதம் அல்ல. அது ஒரு போதனை. அன்பு. இரக்கம்.

எல்லா உயிரகளிலும் அன்பு பற்றியது புத்தம். இன்று இந்த விழாவில் நான் பங்குவதையிட்டு மிகவும் நான் மிகவும் சந்தோநமடைகிறேன். இதற்காக பாளி மொழியில் ஆசிர்வதிக்கின்றேன்:
புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
இறைவன் துணை.
நன்றி.

அடுத்து சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலாநிதி. பால கைலாசநாத சர்மா அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார்.





காயத்திரி மந்திரம், மிருத்யுஞ்ஜய மந்திரங்களை உச்சரித்து சபையோருக்கு வணக்கம் செலுத்தினார்.

"இன்றைய விழா காலத்தின் தேவை. நான் மாணவனாக இருந்த போது வைட்வீல்ட (Whitefield) சென்றிருந்தேன். இந்நிகழ்ச்சியின் போது அப்போதைய நினைவுகள் எழுகின்றன. நாம் சமயத்தை சமயபாடம் என்று சொல்லிப் போதிக்கின்றோம். சமய உண்மைகளை வாழ்க்கைக்குக் கொண்டு செல்வதில்லை. இது மக்களுக்குச் சென்றடைய வேண்டும். அன்புத்தளம், நம்பிக்கையும் பண்பாடும் ஆகும். இன்று இங்கே நடந்த நாட்டிய நாடகம் தரமானது. ஆழ்ந்த கருத்தை வெளிப் படுத்தியது. விழுமியங்களை அழகாகச் சேர்த்துள்ளார்கள். இம்மாதிரியான நாட்டிய நடனக் கலைஞர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். மற்றைய இடங்களுக்கும் எடுத்தச் செல்ல வேண்டும். நாம் ஏனைய மதங்களை விமர்சிக்கக் கூடாது. இந்நிகழ்வில் பகவானின் சக்தி வெளிப்படுவதை நான் உணர்கிறேன். ஆனால் மதங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம். அன்பை உணராததால் சிறியோர்கள், இளைஞர்கள் முதியோர்கள் ஆகியவர்கள் மத்தியில் பிரச்சினைகள் எழுகின்றன. "சத்தியம் வத.தர்மம் சர" அதாவது "உண்மை பேசு,தர்மத்தைக் கடைப்பிடி" என்பதாகும். எல்லா மதங்களையும் இணைத்துப் பொது வான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும். பாடசாலைகளில் சமய பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. விடயத்தை நன்கு தெரிந்தவர்கள் கற்பிப்பதில்லை. தனித்துவத்தை முரண்பாடில்லாமல் வெளிப்படுத்த வேண்டும். விழுமியங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். நன்றி.

நெறியாளர் - சத்திய சாயி நிறுவனம். அளித்த விளக்கம் வருமாறு

விழுமியங்கள் மக்களுக்கு சத்திய சாயி கல்வி முறை மூலம் எடுத்துச் செல்லப் படுகின்றது. சர்வ மத ஒற்றுமையை, கொழும்பில் 22ம் திகதி ஏப்ரல் மாதம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ள மனித விழுமிய நடைப் பயணம் மூலம் எடுத்துக் காட்ட ஏற்பாடாகியுள்ளது. அன்று சகல மதத்தவர்களும் தங்கள் மதங்கள் போதிக்கும் விழுமியங்களைக் கொண்ட பதாகைகளைத் தூக்கிச் செல்வார் கள்.சிறுவர்களுக்கு பாலவிகாஸ் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அல் ஹாஜ் மௌலவி யு.ஆ.யு.அசீஸ் காசிம் யாழ்,கிளிநொச்சி மாவட்ட உலாமாத் தலைவர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.



அல்லாவின் அன்புடனும் அருளுடனும் உபநியாசத்தைத் தொடங்குகிறேன்.

நாம் அனைவரும் இந்த விழாவில் மதங்களின் ஒற்றுமையை இலட்சியமாகக் கொண்டுள்ளோம். இந்த இலட்சியத்தை அலட்சியப்படுத்தாது எடுத்துச் செல்ல வேண்டும். ஒற்றுமையே குர்ஆனிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. அனைத்து மக்களுக்கும் அன்பு கருணை காட்டுவதே இஸ்லாமிய தர்மம். இஸ்லாம் ஒரு நடுத்தரமான மதம். தியாகத்தின் மத்தியில் வளர்ந்த மதம்.பிறக்கும் போது எல்லாப் பிள்ளைகளும் இஸ்லாமியப் (சமாதானமான) பிள்ளைகள் தான். பின்பு வளரும் போது பெற்றோர்களின் மதத்தைப் பின்பற்று கிறார்கள்.

எங்களது ஹஜ் தொழுகையில் மின்னா பள்ளத்தாக்கில உள்ள தூபிக்கு 3 கற்கள் எறிய வேண்டும் இப்றாகிம் பல வருடம் பிள்ளையில்லாது பிள்ளைப் பேறு கிடைத்தது. இந்த அருமையான பிள்ளை யைக் கொல்ல வேண்டும் என்று கனவில் இப்றாமிக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் அதை உண்மையென நம்பி தந்தை தனது மகனைக் கொல்ல கத்தியுடன் கூட்டிச் செல்கிறார். சயித்தான் அப்போது குழந்தையைப் பார்த்து " ஏ குழந்தாய் உன்னைக் கொல்வதற்காகவே தந்தை ஆயத்தமாகிறார்" என்று சொன்னதும் குழந்தை ஒரு கல்லைத் தூக்கி சயித்தானுக்கு எறிந்தது. சயித்தான் இப்றாகிமுக்கு ஏன் குழந்தையைக் கொல்லப் போகிறாய் என்று கேட்க அவரும் கல்லை எடுத்து எறிகிறார். பின் சயித்தான் தாயிடம் போய் தந்தை பிள்ளையைக் கொல்ல ஆயத்தமாகிறார் என்று சொல்ல தாயும் கல்லைச் சயித்தானுக்கு எறிகிறார். இது கேட்ட வாக்கில முழு நம்பிக்கை வைத்துச் செய்யப்பட்ட செயல். சயித்தான் நம்பிக்கையைக் குழப்ப எத்தனிக்கிறான். சயித்தானுக்கு கல்லெறிதான் கிடைத்தது. இப்படியான தியாகத்தில் வளர்ந்தது இஸ்லாமிய மதம்.

கஸ்டப்பட்டவனுக்கு உதவவேண்டும்.
பிள்ளைகளுக்கு படிக்க உதவ வேண்டும்.
தொழில் இல்லாதவனுக்கு உதவ வேண்டும்.
கஸ்டப்பட்டவனும் நாளடைவில் நல்லவனாக வாழ்வான்.
இறைவன் எல்லோருக்கும் அருள் பாலிப்பானாக..

இதையடுத்து சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் இலங்கை மத்திய சபைத் தலைவர் திரு.வி.மனோகரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.




எல்லோருக்கும் வணக்கம். புத்தமத குரு, மாண்பு மிகு. ஆளுநர் ஆகியவர்கள் தமிழில் ஆற்றிய உரையைக் கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். என்னால் அவர்களின் தரத்தை எட்ட முடியமோ என்ற அச்சம் மோலோங்கி நிற்கிறது.

அவர் சபையோரைப் பார்த்து கேட்டார்

எங்கள் நாடு முன்னேற்றம் அடைந்துள்ளதா?
இல்லை
ஏன் அடையவில்லை?
எங்களிடம் போதிய திறமைசாலிகள் இல்லையா?
இருந்தால் நாம் ஏன் முன்னேறவில்லை?

1970ல் சிங்கப்பூர் இலங்கையை விடக் குறைந்த நிலையிலிருந்தது. இப்போது அது பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. அன்று பிரதம மந்திரியாக இருந்த லீ குவான் யு என்பவரின் திறமையான ஆடசி தான் அந்நாட்டை கட்டி எழுப்பியது. அதே போல தென் கோரியா பல துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளது. இதன் பின்புலத்தில் நாம் வளர முடியாது இருப்பதற்கு எம்மிடையில் ஒற்றுமை இல்லாதமை தான் காரணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறக்கும்போது தூய்மையாகப் பிறக்கின்றது. பின்பு பெற்றோரின் பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்கின்றது. மகாத்மா காந்தி "நாம் எங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். நல்ல மனதுடன் பார்த்தால் எல்லாம் நல்லதாகவே இருக்கும்" என்று சொல்லியுள்ளார். நாம் ஒற்றுமையுடன் குழுவாகச் சேவை புரிய வேண்டும் என்று அப்துல்கலாம் அவர்கள் கூறி இருப்பதை நினைவில் கொள்ளுவோம்.

நாம் தீய எண்ணங்களையும் ஆசைகளையும் குறைக்க வேண்டும் என்பது பாபாவின் அருளுரை. மேலும் அவர் தரும் மகா வாக்கியம்:
ஒரே ஒரு குலம் -அது மனித குலம்
ஒரே ஒரு மொழி- அது இதய மொழி.
ஒரே ஒரு மதம்- அது அன்பு மதம்
ஒரே ஒரு கடவுள்- அவர் எங்கும் நிறைந்துள்ளவர்

நன்றி

அடுத்ததாக, சத்திய சாயி நிறுவனத்தின் தேசிய கல்வி இணைப்பாளரும் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளருமான அன்பன். நா.புவனேந்திரன் உரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் சுவாமியின் போதனைகளிலிருந்து பல எடுத்துக் காட்டுகள் மூலம் தனதுரைக்கு அணி சேர்த்தார்.





பகவான் தான் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க வரவில்லையென்றும் ஒவ்வொரு வரையும் அவரவர் மதத்தில் மேலோங்க வைக்கவே அவதரித்தாகவும் கூறியுள்ளார்.

பிரார்த்தனை செய்யும் உதட்டைவிட சேவை செய்யும் கரங்களே மேன்மை யானவை. நன்றி.
அடுத்து



சத்திய சாயி நிறுவனத்தின் வட பிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் திரு.K.V.சிவநேசன் தனது நன்றி உரையில் விழாவில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி செலுத்தினார்

நிகழ்வு மகா மங்கள ஆரத்தியைத் தொடர்ந்து மதிய போசனத்துடன் நிறைவடைந்தது.

ஜெய் சாயி ராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவருளில் மாணிக்க வாசகர்



இறைவனோடு இணைந்திருந்த சிவகணங்கள் ஆயிரம பேரும் வேதாகமங்களின் பொருளை விளக்குமாறு சிவபெருமானிடம் வேண்டினர். சிவபெருமானும் அதற்கு மகிழ்ந்து பூலோகத்தில் தென்னாட்டில் உள்ள திரு உத்தர கோச மங்கை தலத்தில் வைத்து பொருள் சொல்வோம். நீங்கள் அங்கு செல்லுங்கள் என்று கணங்களுக்கு ஆணையிட்டார்.

அவ்வாறே நடைபெற்று வரும் நாளில் ஒருநாள், சிவப்பரம் பொருள் பொருளை விளக்க, அதே நேரம் வானவீதியில் இந்திரன் முதலான தேவர்கள் அரம்பையர் புடைசூழ சென்று கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற குடமுழா நந்தீசசர் எனும் சிவகணத்தார். அதை ஒரு கணம் ரசித்தார். ஏனைய கணங்கள் பாடத்தில் மூழ்கியிருக்க இவர் ஒருவரது கவனம் சிதைந்ததால் சினந்த சிவனார் சாபமிட்டார்.

"பூலோகத்தில் நீ மனிதனாய் பிறந்து உழல்வாய் பின் என் திருவடி சேர்வாய்" என்று. காரணகாரியமில்லாது கடவுளின் செயல் அமையாதல்லவா? எனவே குடமுழா நந்தீசரும் தான் புகுவதற்கேற்ற தாய் தந்தையரை தேடிப்புறப்பட்டார். இறுதியில் திருவாதவூரிலே சம்பு பாதாசிரயர் என்னும் அமாத்தியப் பிராமணருக்கும் அவர் தம் பதிவிரதையான சிவஞானவதி என்பாருக்கும் மகனாகப் பிறந்தார்.

இறைவனுடைய பாதங்களை சிரமேற்கொண்டு ஆஸ்ரயிக்கப்பட்டதால் சம்பு பாத சிரயர். சிவஞானமே இடமாக கொண்டதால் சிவஞானவதி. இதுவே அவருக்கு தக்க தங்க இடமாயிற்று எனலாம். பெற்றோர் செய்த புண்ணியம் பிள்ளைக்கு. இறைவனின் தலப் பெயரையே நாம கரணமாக்கி திருவாதவூரார் எனப் பெயரிட்டனர்.

வாதபுரீஸ்வரர் அருளால் வாதவூரர் வளர்ந்தார். பூணூல் சடங்கு முப்புரிநூல் அணிவித்தனர். வேதாகமம் பதினெண் புராணங்கள், நியமம் தவறாமை என்ற பொருள் விளங்க முப்புரிநூல் அணிவித்தனர். அதாவது வேதாகமம் என்பது சத்தியத்தையும் பதினெண் புராணங்கள் என்பது தர்மத்தின் வழிநடத்தலையும், நியதி என்பது இவற்றின் வழி நிற்க வேண்டும் என்பதையும் குறிக்கின்றது.

வாதவூரரும் இதன் வழி நின்றதால் பதினாறு வயதிலேயே பாண்டிய மன்னனின் தலைமை அமைச்சரானார். தென்னவன் பிரமராயன் என்ற உயர்ந்த பட்டமும் அரசனால் வழங்கப் பெற்றார்.

கற்ற கல்வியின் பயன் அதன்படி ஒழுகுதல் என்பதற்கேற்ப ஆத்மவிசாரம் அவருள் நடந்ததால் ஆத்ம வேட்கை எழுந்தது. ஆண்டவனுக்கே எதுவும் என்று பூரண சரணாகதி நிலை மேம்பட்டது.

அதேவேளை அரசனும் இவரை அரபிக் குதிரைகள் வந்திருப்பதால் வேண்டும் பொருட்களை கொண்டு சென்று குதிரைகளை வாங்கி வரும்படி பணித்தான். அருள் தாகம் கொண்ட அமைச்சர் தென்னவன் பிரமராயரும் பொருள்களுடனும் பணியாட் களுடனும் புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை எனும் அடங்காத மானையும், கர்ம வினைகளை வெட்டி எறியும் மழுவையும் கொண்ட சிவ அன்பின் வயப்படத் தொடங்கினார்.

கூத்துக் கலைந்த பின் கோலம் வேறு கூத்தாடி வேறு என்று கூத்தனிடம் மனம் குடி கொள்ளத் தொடங்கினார் மகா மந்திரமாம் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதத் தொடங்கினார் ஏகாட்சரமாம் ஓங்கார ஒலியில் ஒளியைக் காட்டவல்ல ஞான குருவைத் தேடிய போது, குதிரை வாங்க அனுப்பிய சந்தர்ப்பத்தை பயன் படுத்தி ஞானகுருவை தேடிய வண்ணம் சென்றார்.

அனுபவ ஞானமடைந்தவரை அவர் கண்டாரில்லை. பின்னாளில் அனுபவத்தையே ஆண்டவன் அருள் என உணர்ந்தவர் அல்லவா அவர்.

ஓரிடத்தில் வேதபாராயண நாதம் அவரின் இதயத்தை ஈர்த்தன. ஏவலாளரை அனுப்பி பார்த்துவரச் சொன்னார். பாரத்து வந்தவர் சொன்னதைக் கேட்டதும் அவர் ஒருவித பரவசத்தில் மூழ்கினார்.

அது திருப்பெருந்துறையென்றும் ஒளிபொருந்திய ஞானசாரியர் ஒருவர் ஞானகுருவாய் அமர்ந்திருக்க அவரைச்சூழ தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மாணாக்கர்கள் வேதபாடம் சொல்ல கேட்கும் ஒலியே அது வென்று சொன்னார்கள்.

திருப்பெருந்துறை தலம் அண்ட சரா சரங்களின் நீர் நிலை நதிகள், சமுத்திரங்கள் ஓரிடத்தில் இறைவனின் சங்கலப்பத்தால் சங்கமித்த இடம் என்ற வரலாற்றுப் பெருமையுடையது. எங்கள் உடலில் அது புருவ மத்தி என்றுகூறப்படும் அங்குதான் எமது நாடி நரம்புகள் கூடும் பெருந்துறையாகும். அறிவுக் கண்ணாகிய நெற்றிக் கண் இருக்கும் இடமாகும். அதனால் அங்கு இருக்கும் இறைவனுக்குப் பெயர் ஆத்மநாதர். அதை அடைவதற்கு உரிய மார்க்கத்தைக் காட்டுவதால் அம்பிகைக்குப் பெயர் சிவயோகாம்பிகை.



இத்தனை சிறப்பும் பொருத்தமானது மான எனும் திருப்பெருந்துறை பெயரைக் கேட்டதும் வாதவூரரை அது ஈர்த்ததில் வியப்பில்லை. பிறவிக்கடலை நீந்திக் கரையேற்றும் துறையல்லவா.

வாதவூரர் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கு குருந்தமர நிழலில் சிவனைப்போலவே தேஜசுடன் கூடிய சிவயோகியரைக் கண்டதுமே கண்ணீர் பெருகியது. சிவயோகியாரின் பாதம் பணிந்தார். சிவயோகியாரும் தன் இரு பாதங்களையும் வாதவூரரின் தலைமீது வைக்க வாதவூரர் அதை தன் கைகளால் சிக்கனப் பிடித்து தன் கண்களில் ஒற்றி, பின் தன் நெஞ்சிலும் ஒற்றிக் கொண்டார்.

"மெய் தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கு கைதான் தலை வைத்து கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம். பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி.... என்று கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னை கண்டு கொள்ளே" என்று சரணாகதி அடைந்தார்.
ஞானகுருவும் அதை ஏற்றுக் கொண்டு அவருக்கு உபதேசம் செய்வதற்கு பூம்பந்தல் அமைக்குமாறு சொன்னார். அடுத்த நாள் பிரம்ம முகூர்த்த நேரம் வாதவூரர் தம்மை தூய்மை செய்து பரமாசாரியரிடம் வர அவருக்கு தன் கையாலேயே சிவஞானகுரு நீறணிவித்தார். உபதேசம் தொடங்கியது. கண்ணீர் மல்க கருணைக் கடலின் உபதேசத்தை செவிமடுத்தார்.

மாயையாகிய இவ்வாழ்வை சீர்படுத்தி கர்மத்தைத் தொலைக்க தர்மத்தை காட்டி இலகுவில் என்னை அறிந்து கொள்ளவே பரப்பிரம்மமாகிய தான் இவ்வுரு எடுத்து வந்துள்ளேன். எவர் ஒருவர் கலைகளனைத்திலும், ஆகமங்களிலும் பல சமய சாத்திரமும் அறிந்து அவற்றில் ஒருமையெனும் உண்மைப் பொருளாகிய என்னை உள்ளத்தில் காண்கிறாரோ அவரே ஆணவம் நீங்கி சிவபோதம் எனும் அன்பினால் விரிந்து என்னையடைவார்.

உபதேசம் உவகை தர "நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன். தேனாய் இன்னமுதமாய் தித்திக்கும் சிவபெருமான்தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்" என்று திருவாசகத்திலே பின்னர் பதித்தார்.

குதிரை வாங்கக் கொண்டுவந்த பொருளை யெல்லாம் சிவப்பணிக்கு ஈந்தார். "செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு இம்மைதரும் பயன் ஈங்கு ஒழிக்கும். என்று திருவாசகத்திலே சேவையின் மகத்துவத்தை சொல்கிறார்.

ஞானாசிரியரின் கைகளிலே உள்ள புத்தகத்தை வாதவூரர் இப்புத்தகம் யாதென வினாவ "சிவஞான போதம்" எனப் பதில் வருகிறது. அப்படியானால் அதன் பொருள் என்ன? என்று கேட்க.... ஞானாசிரியர் சிவம் என்பது என்றுமுள்ள உண்மைப் பொருள். ஞானம் என்பது அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமாக அதைத் தேர்தல். போதம் என்றால் அங்ஙனம் தேர்ந்ததை அனுபவத்தில் உணர்ந்து லயித்தல் எனப் பதிலளித்தார்.

உபதேசம் நிறைவுபெற "தேவரீர் அந்நிலையை எனக்கு அளிக்க வேண்டுமென வாதவூரர் வேண்ட நீ வடமொழி ஆகமங்களை தமிழில் பாடு என ஆணை யிட்டார்". அதுவே திருவாசகம் ஆனது.

குதிரை வாங்க உடன் வந்தோர் அவருக்கு அதை ஞாபகமூட்ட "மாயா காரியமாகிய இச் செய்கை வேண்டாம் நீங்கள் செல்லலாம்" என்று விடை தந்தார்.

ஆமாம் விடையவர் தந்த விடையால் தெளிந்த வாதவூரர் தந்த விடைதான் அது. வாதவூரரோடு இனி வாதம் புரிதல் பயனளிக்காது என்று வந்தவர்கள் பாண்டிய மன்னனிடம் சென்று அவரின் நிலை பற்றிக் கூறினார் வெகுண்டான் பாண்டியன் தான் கொடுத்த பொருள்களோடு வாதவூரரை திரும்ப அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தான்.

உருவமும், உள்ளமும் மாறி நின்ற வாதவூரரிடம் மன்னனின் செய்தி ஓலை மூலம் தரப்பட்டது. "பாராளும் மன்னருக்கு அடிமையல்லேன், பரம் பொருளுக்கே நான அடிமை" என்ற பதிலை கேட்ட பாண்டிய வீரர் மலைத்து நின்றார்.

நிலைமை தெரிந்த நிமலனாம் ஞானாசிரியர் "அஞ்சற்க நாமே ஆவணி மூல நட்சத்திரத்திலே குதிரைகளைக் கொண்டு வருவோம். நீவிர் செல்க" என்று வாதவூரரை மீண்டும் அமைச்சர் கோலம் பூணச் செய்து அனுப்பி வைத்தார்.

மன்னனும் வாதவூரரிடம் செய்தி அறிந்து அரசசபையிலே மந்திரி பதவியை தொடர்ந்து வகிக்க அனுமதித்தான். எனினும் அரச சபையின் அதிகாரிகள் "வாதவூரர் தன் உயிரைக் காப்பாற்றவே அப்படிச் சொன்னார். உண்மையில் பொருள்கள் அனைத்தும் சிவபுண்ணியத்திற்கு வழங்கப்பட்டு விட்டன" என்றனர்.

மற்றவரின் சொற்கேட்டு மன்னனும் மந்திரியாரை சிறையில் அடைத்தான். திரவியங்களைத் திரும்பத் தரும்படி வற்புறுத்தினர். பதிலேதும் கூறாமல் மௌனமாக இருந்தார் வாதவூரர். ஆனால் இறைவனிடம் "உடற்சிறையிலிருந்து விடுபட விளையும் என்னை ஏன் இச்சிறையில் அடைக்கவோ அனுப்பியாய்? என்று மனதால் ஞானாசிரியரிடம் முறையிட்டார்.

திருப்பெருந்துறை ஆத்மநாதருக்கு வாதவூரரின் ஆத்மார்த்த பிரார்த்தனை கேட்டது. பக்தனுக்காக குதிரைச் சேவகன் ஆயினார். சிவகணங்கள் குதிரை வீரர்கள் ஆயினர். காட்டிலுள்ள நரிகள் இறைவனுடைய சங்கல்ப்பத்தால் உயர்ந்த சாதி குதிரைகள் ஆயின. பாண்டி நாடு நோக்கி குதிரைகள் பாய்ந்தன.

மனமாகிய குதிரையை அடக்கும் இறைவனே குதிரை ராவுத்தனாக மாறியதால் அவை ராவுத்தனின் சொல் கேட்டு அடங்கி சகலவிதமான போர்த்தந்திர முறைகளையும் செய்து காட்டின. மன்னன் மகிழ்ந்தான். தான் மற்றவரின் சொற்கேட்டு வாதவூரரை சிறையிலடைத்ததை எண்ணி வருந்தி உடனே அவரை விடுவித்தான். குதிரைகளை கயிறு மாற்றி தனது லாயத்திலே சேர்ப்பித்து மகிழ்வடைந்தான். வாதவூரரும் ஞானா சிரியராகிய இறைவனின் கருணையை எண்ணி மெய்சிலிர்த்து கண்ணீர் மல்கினார். தான் இறைசேவையில் ஈடுபட்டதால் இறைவனே சேவகனாகியதை நினைந்து உருகினார்.

நள்ளிரவு நேரம் மதுரை உறங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று குதிரைகள் கனைப்பொலி, நரிகளின் ஊளை, மதுரை மாநகர் பதறியது. பரிகளெல்லாம் நரிகளாகியது. ஏற்கனவே இருந்த குதிரை களை கடித்துக் குதறின. மதுரை வீதியெங்கும் நரிகளால் நிரம்பியது. சிறிது நேரத்தில் அனைத்தும் காட்டுக்குள் ஓடிமறைந்தன.

வெகுண்ட மன்னன் வாதவூரரை மீண்டும் கைது செய்தான் மறுநாள் அவரை வெயிலில் நிறுத்தி பாறாங்கல்லை தலையில் சுமந்தபடி நிற்கும் தண்டனை அளித்தான். திரவியங்களை திரும்பத் தரும்படி வற்புறுத்தினான்.

இயலாமையால் இளைத்த வாதவூரர் இறைவனிடமே இதய சுத்தியுடன் இறைஞ்சினார். இதற்காகத் தானா உன்னிடம் வந்து சேர்ந்த என்னை இங்கு அனுப்பி வைத்தாய் என்று முறையிட்டார்.

முறைப்பாடு முதல்வனாம் இறை வனுக்குக் கேட்டது. தனது தலையிலுள்ள கங்கையை நோக்கினார். கருத்தறிந்த கங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகையில் இறங்கினாள். பெருக்கெடுத்தது வைகை. வைகை கைவைத்ததால் அணைகள் உடைந்து மதுரை வெள்ளமானது. மக்கள் பதறினர். மன்னன் செய்வதறியாது திகைத்தான்.

கற்றோரிடம் கருத்துக் கேட்டான். மதுரை சொக்க நாதருக்கு பூசைகள் செய்தும் வெள்ளம் அடங்கவில்லை. சிவனடியாராகிய வாதவூரரை துன்புறுத்தியதே வைகை பொங்கக் காரணமென்று கற்றோர்கள் சொல்ல, அரசன் உடனே வாதவூரரை விடுதலை செய்தான். வெள்ளம் அடங் கியது. அரசன் வாதவூரிடம் நடந்த தவறுக்கு மன்னிப்பு கோரினார். அவன் செயலென அவரும் அறிந்து துதித்தார்.

அணைகளை சீராக்கும் பணி அரசனால் அறிவிக்கப்பட்டது. மக்கள் அனை வருக்கும் பங்குகள் பிரிக்கப்பட்டு அணை கட்டுமாறு பணிக்கப்பட்டனர். ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டிய வேலையாதலால் கூலிக்கு தட்டுப்பாடு வந்தது. வந்தி என்று அழைக்கப்படும் பிட்டு விற்று வாழ்க்கை நடாத்தும் மூதாட்டிக்கு எவர் உதவியும் இல்லாததால் அவளது பங்கு மட்டும் அணை கட்டப்படாமல் இருந்தது. மனம் நொந்தார். காவலாளர் வந்து அவள் பங்கை அடைக்குமாறு எச்சரிக்கை செய்து விட்டுப் போயினர். முதுமையின் தளர்ச்சி, கூலிக்கும் ஆளில்லை. வேறுதுணையுமில்லை. இந்நிலையில் மதுரை சோமசுந்தரரை வேண்டினாள். தூய்மையின் பிரார்த்தனை தூயவனுக்குக் கேட்டது. துணைபுரிய வந்தார் கூலியாளாக.

கங்கை கொண்ட சடையில் மண்கூடை அபயம் அளிக்கும் கரங்களில் மண்வெட்டி. என்னைக் கூலி கொள் வாருளரோ? என்று கூவிக் கொண்டு வந்தான். தூய்மையான மனத்தால் செம்மனச் செல்வி என்று அழைக்கப்பட்ட வந்தி கூலியாளைக் கண்டு ஆனந்தித்து இறைவன் கருணையை



எண்ணி மகிழ்ந்தாள். கூலியாளை அழைத்தாள். வந்த கூலியாள். "கூலி என்ன தருவாய்" என்றான். "என்னிடம் பணமில்லை களைப்பாற பிட்டு தருகிறேன்" அன்போடு வந்த வார்த்தையாதலால் ஆண்டவன் சம்மதித்தார்.

அணைவேலை தொடங்கினாலும் அது அங்கொன்றும் இங்கொன்றுமாக மண் குவிக்கப்பட்டதே யொழிய வேலை முடிந்த பாடில்லை. கூலியாளனோ பாடுவார், ஆடுவார் சிறிது வேலை செய்வார். மணல் கும்பியில் படுத்து தூங்குவார். களைத்தவர் போல் செம்மனச் செல்வியிடம் பிட்டு வாங்கி உண்பார். சுவையாயிருக் கிறதென்று தலையாட்டுவார். அண்டங்களை தன்னுள் அடக்கிய ஜடாமுடி அன்பிற்காக ஆடியது. ஆனால் அணை மட்டும் முழுமையாக அடை படாமல் இருந்தது.

கவனித்த காவலர் மூதாட்டியை எச்சரித்தனர். அப்படியும் அணைவேலை நடைபெறவில்லை. காவலர்கள் அரசனிடம் முறையிட்டனர். அரசன் கூலியாளை பிடித்து வருமாறு சொன்னார். சென்ற காவலர்கள் கையில் கூலியாள் அகப்படவில்லை. அரசனே நேரில் வாதவூரருடன் வந்தான். அதுகண்ட மூதாட்டி பயத்தில் மதுரை சொக்க நாதரை மீண்டும் வேண்டினாள்.

கூலியாள் அப்பொழுது அகப்படுபவன் போல் அகப்பட்டான். ஆம் மூதாட்டியின் அன்பில் அகப்பட்டதால் அகப்பட்டார். வேலை முடிக்கத் தவறிய கூலியாளின் கைகள் கட்டப்பட்டன. இரத்தம் வரும் வரை பிரம்பால் அடியுங்கள். என்று அரசன் கட்டளை பிறந்தது. காவலர்களால் நெருங்க முடியவில்லை. அரசனே பிரம்பால் அடிக்க அந்த அடியை தனது வலது பக்க தோளில் வாங்கினான் இறைவன். இடது பக்கம் பார்வதியின் மேல் அடிவிழக்கூடாது என்ற கருணைக் கடலின் செயல் இது.

எங்கும் நிறைந்துள்ள சிவத்தின் பக்கத்தின் விழுந்ததால் சகல ஜீவராசிகளின் மீதும் ஏன் அருகில் நின்ற அரசன், வாதவூரார், செம்மணச் செல்வியார் முதுகிலும் அடி விழுந்தது. கூலியாள் மறைந்தார். அறிவு பெற்றான் அரசன்.

வாதவூரரை வணங்கி அவரை அமைச்சர் பதவியிலிருந்து விடுவித்து ஆண்டவன் பணியில் ஈடுபட விடை கொடுத்தான். தர்மம் நலியும் போது இயற்கை சீற்றமடையும். சீற்றத்தின் காரணம் அறிதலே சீரிய சிந்தனை. சீரிய சிந்தனையே சிறப்பான வாழ்வுக்கு வழிவகுக்கும். குருமணியாய், குதிரைச் சேவகனாய், மண் சுமந்த கூலியாளாய் வந்து தம்மையாட் கொண்ட இறைவனின் கருணையே நோக்கி கசிந்துள்ளம் உருகி கலந்து வாழுமாறு அறிய இறைவனின் பாதம் பட்ட மண்ணில் புரண்டு புரண்டு அழுதார்.

திருப்பெருந்துறை அவருள் வாவென்று அழைக்க குருமணியை தேடி மீண்டும் ஓடினார். அங்கு தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது பேர் புடைசூழ இறைவன் குருந்த மரநிழலில் அமர்ந்திருந்த காட்சியை மீண்டும் கண்டார். ஈர்த்தென்னை ஆட்கொண்ட இறைவனடி போற்றியென்று சரணாகதி அடைந்தார். உலகியலிருந்து மீண்டு வந்த, மீண்டும் வந்த நிலையை கண்ட பரமாசாரியர் இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னை புடம் போட்டாயிற்று நான் வந்த வேலை நிறைவுற்றது என்று கூறிப் புறப்பட ஆயத்தமானார். அப்போது சிவகணங்கள் அனைவரும் இறைவனோடு புறப்பட்டனர்.

சிவகுருநாதர் அவர்களைத் தடுத்து, "இக்குருந்த மரநிழலில் தெய்வத் தன்மை பொருந்திய பீடத்தை அழகோடு செய்து அதன் மீது வேதங்கள் தேடும் நம்முடைய பாதங்களைப் பிரதிஸ்டை செய்யுங்கள். சகிப்பதற்கு அரிய துன்பங்களினின்று நீங்கி, அதுவும் நாமேயென்னும் பாவனை பண்ணி, இடையறாத அன்பினால் நாள் தோறும் வணங்கி இங்கிருங்கள். ஒருநாள் இப்பொய்கையிலே தூய்மையான அக்னி தோன்றும் உடனேயே அதில் வீழ்ந்து என்னை வந்தடைவீர்கள்" என்றார்.

புனிதர்கள் புவியோடு சம்பந்தப் பட்டிருப்பினும் நல்ல கர்மத்தின் பற்றையும் நீக்கினாலே தெய்வத் தன்மையடையலாம். மனம் நல்லது கெட்டது ஆகியவை நீங்கி சமநிலை பெற்றாலே முக்தி நிலை அடையலாம் என்று பொருள்.

பின் வாதவூரரை நோக்கி "நீ மட்டும் தொடர்ந்து புவிமீது தங்குவாய். உத்தரகோச மங்கை சென்று அங்கு சித்திகள் பெறுவாய். நான் குறிப்பிடும் தலங்களை வணங்கிக் கொண்டு தில்லை சேர்வாய். அங்கு மதமறியா மார்க்கத்தில் உழலும் பௌத்தரை வாதில் வென்று நம் பதமாகிய சாயுச்சியத்தை அடைவாய்". என்று வழிப்படுத் தினார் சிவகுருநாதர்.

அங்குள்ள கொன்றை மர நிழலில் அமர்ந்தவர் "தொல்லை நீக்கும் தில்லையில் உள்ளவையெல்லாம் வெளியிலில்லை, உன் உள்ளத்திலேயே அமர்ந்திருக்கின்றன என்று கூறி தனது திருக்கரங்களாலே வாதவூரருக்கு நெற்றியிலே விபூதி அணிவித்து அந்தர்தானமாயினார்.

சிவப்பொருளின் உபதேசம் திருவாகசமாயிற்று. சிவபுராணம் என்றுமழியா சிவனின் தன்மை பற்றிக் கூறியது. இறைவன் குறிப்பிட்டபடி பலதலங்களுக்கும் சென்றார். உத்தர கோச மங்கை, திருவண்ணா மலையிலும் அவருக்கு இறைவனின் ஞானகுரு தரிசனம் கிடைத்தது.

சத்தியமாகிய ஆத்மாவை வெளிப்பட வைத்து, ஆத்மார்த்தமாகிய தர்மத்தின்வழி செயல் புரிந்து, ஆத்ம விசுவாசமாகிய அன்பை அனைத்திலும் வெளிப்படுத்துவதே திருப்பள்ளி எழுச்சி. அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே திருவெம்பாவை. அது பாடப்பெற்ற தலம் திருவண்ணாமலை அங்கே தான் அவருக்கு ஆண்டவன் தரிசனம் மீண்டும் கிடைத்தது. எனவே திருவெம்பாவை பாடியபின்பே திருப்பள்ளியெழுச்சி பாடப்பட வேண்டும். இதுவே திருவாசக ஒழுங்குமாகும்.

தில்லை சிதம்பரமடைந்தார். அங்கேயே மடம் அமைத்து தங்கினார். மன்றாடியிடம் மன்றாடினார். "பாடவேண்டும் நான் போற்றி நின்னையே பாடிப்பறைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு ஆட வேண்டும், இப்புழுக்கூடாகிய உடலை விட்டு என்னை நீக்கு அதன் மூலம் பொய்யாகிய இவ்வுலக வாழ்வை அடியோடு அகலச் செய்வாய் என்று இறைவனிடம் இறைஞ்சிய வண்ணமிருந்தார்.

இறைவனே இவரது வாசகங்களைக் கேட்டு மணிவாசகரே என்று அழைத்தார். அக்காலத்தில் ஈழநாட்டில் பௌத்த மதத் துறவிகள் தம்மதமே சிறந்தது என்று வாதிக்க தில்லை சென்றனர். இறைவன் அந்தணர்கள் கனவில் தோன்றி மாணிக்க வாசகருடன் வாதம் புரிய விடுங்கள் என்றனர். அதன்படி அவர்களை வாதில் வென்றார். மார்க்கம் அறியா மதப்பித்துக் கொண்டவர்களை மனம் திருந்தச் செய்தார். அதன் போது ஈழநாட்டி லிருந்து வந்த ஊமையாகிய அரசிளங் குமரியை பேசச் செய்து அவள் மூலமே அவளுடன் வந்த பௌத்த துறவிகளுக்கு வேதாகம விளக்கங்களை விளக்கச் சொல்லி செய்தார். இதன் மூலம் பௌத்த அரசனும் மார்க்கம் தெளிந்தான். மனம் மாறினான்.

இப்படியாக அம்பலத்தாடுவானிடம் ஆனந்தத்தோடு இருந்த நாளில் ஒருநாள் இறைவன் வேதியார் வடிவத்துடன் கையில் ஏடும், எழுத்தாணியுடனும் வந்து, மணி வாசகரின் முன் வந்து நின்று இதுவரை நீங்கள் பாடிய திருவாசகத்தை முழுவதும் சொல்லுங்கள் யான் எழுதிக் கொள்கிறேன். நான் பாண்டி நாட்டைச் சேர்ந்தவன் என்று கேட்டார். மணிவாசகரும் மகிழ்வுடன் மன மொப்பினார். முதல் திருவாசக பாராயணம் மணிவாசகராலேயே ஆரம்பிக்கப்பட்டது போல இயற்றியவரே சொல்ல இறைவனே எழுதினார். எழுதி முடிந்ததும் வேதியர் பக்தனிடம் மீண்டும் ஓர் விண்ணப்பம் செய்தார். பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று.

ஜீவ பிரம்ம ஐக்கியத்தை நவவித பக்தியில் மதுரபாவமாக வைத்துப் பாடப்பட்டது. திருக்கோவையார் அதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தன் கையாலேயே எழுதினான். கடைசிப்பாடலின் இறுதியில் இது மன்று ளாடவன் கையெழுத்து என்று எழுதி திருக் காப்பிட்டு சிதம்பரத்தின் மூலஸ்தானத்தின் பஞ்சாட்சரப் படிகளின் மேல் வைத்து விட்டு மறைந்தார். அர்த்த சாமப் பூசையின் பின் திருக்கதவு சாத்த வந்த அந்தணர் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அனைவருக்கும் தெரியப்படுத்தினார்.

அதுவே மிகப்பெரிய அற்புதமென அனைவரும் உணர்ந்தனர். மறுநாள் அனைவரும் சந்நிதியில் ஒன்றுகூடி அதை எடுத்து அதிலிருப்பது என்ன என்று திருக்காப்பு நீக்கி பார்த்தனர். வட மொழியா லானதுவோ என்ற மயக்கத்துடன் திறந்த வருக்கு அது தமிழென்றதும் தயக்கம் வந்தது. எனினும் அதை முழுவதுமாக வாசித்தனர். இறுதியில் இது மன்றுளாடவனின் கையெழுத்து" குறிப்பைப் பார்த்து வியந்தனர்.

இரண்டாவது திருவாசக பாராயணம் இப்படி நடந்தது. மணிவாசகரிடம் சென்று மன்றுளாடவனின் அற்புதத்தைச் சொல்லி அதன் பொருள் யாதெனக் கேட்டனர். மணிவாசகர் மெய்மறந்தார். பரவசத்தின் வெளிப்பாடாக கண்ணீர் பெருகியது. வந்தது இறைவன் தான் என்று அறியாமல் போனேனே! என்று இறைவனை அங்கு பித்தர் போல் தேடினார். அப்போது அந்தணர்களிடம் நாளைக் காலை கனக சபைக்கு வாருங்கள் திருவாசகத்தின் பொருள் சொல்கிறேன் என்றார்.

மறுநாள் காலை ஆனி மகம் நட்சத்திரம் மணிவாசகர் ஆசாரங்கள் முடித்து ஆண்டவன் சந்நிதி சென்றார். அந்தணர் அங்கு கூடியிருக்க அந்தணர் கையில் இருந்த ஏட்டைச் சுட்டிக் காட்டி இதன் பொருள் இவரே என்று திருசிற்றம்பலமுடையானைக் காட்டி மூலஸ்தானத்தில் தோன்றிய ஜோதியில் கலந்தார்.



குருமணியாய், குதிரைச் சேவகனாய், கூலியாளாய், எழுத்தாணி கொண்டு எழுதிய எழுது வினைஞனாய் மணிவாசகரின் பக்தி வலையிலே அகப்பட்டவனாய் காட்சி தந்த இறைவன் எழுதிய முதல் தமிழ் நூல் எனும்மெ திருவாசகத்திற்கே உரியது.

மேற்படி சரித்திரம் மற்றும் சிவகுருநாதர் மணிவாசகருக்கு போதித்த உபதேசம் என்பன திருவாத வூரடிகள் புராணத்திலிருந்து எழுத்தாளப் பெற்றவை.

அருள் ஜோதி வள்ளலார் தன்னுடன் கொண்டு திரிந்து போற்றிப் பாராயணம் செய்தது. திருவாசகத்தையே "வான் கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என் ஊண் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று வள்ளலார் திருவாசகத்தின் சுவையை தான் அனுபவித்ததை சொல்கிறார்.

தமிழர்கள் பக்தியிலே சிறந்து விளங்குவதற்குக் காரணம் திருவாசகமே என்று பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறுவது, இங்கு எவ்வளவு பொருத்தமாய் அமைகிறது.

ஜெய் சாயிராம்


தொகுத்து எழுதியவர்:
சிவஞானம் சிவபாலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதகர்களுக்கு ஓர் அறிவுரை




யாராவது ஒருவர் பகவான் பாபா அவர்கள் தங்களது சக்திகளைத் தனக்குத் தந்தள்ளார் என்று சொன்னதும் நாம் அவரிடம் ஓடிச் செல்கிறோம். சாய் பாபாவின் சக்தி வேறு ஒருவருக்குக் கொடுக்கக் கூடியதல்ல. அச்சக்தியை ஒருவர் இன்னொருவருக்குக் கொடுக்க முடியாது. ஒருவரின் சக்தி அவருடையதேயாகும். ஆகவேநாம் மற்றவர்களின் சொல்லைக் கேட்டு அவர் பின்னே ஓடக் கூடாது. அப்படி ஓடிப்போவது மனிதனின் பலவீனத்தையே குறிக்கிறது. நான் ஒருஎண்ணத்தையே, ஒருபாதையே பின் பற்றவேண்டும். ஆன்மிகச் சக்தியைத் தேடி பணத்தைச் செலவழித்து உலகமெல்லாம் போகத்தேவையில்லை.

இருக்கும் இடத்திலேயே உங்களின் உள்ளே உறையும் சக்தியை உணர வேண்டும் அங்கும் இங்கும் ஓடத் தேவையில்லை. கடவுள் வெளியிலிருக்கும் ஒன்றல்ல. உள்ளுறைபவர் அல்லவா!

நீங்கள் மனிதனல்ல. நீங்கள் தெய்வம். நீங்கள் ஒருவரல்ல. மூவராக இருக்கிறீர்கள். நீ உடம்பை ஆதாரமாகக் கொண்டு அது தான் நீ என்று நினைப்பது ஒன்று. மனதை ஆதாரமாகக் கொண்டு மற்றவர்கள் உன்னைப் பற்றி நினைப்பது மற்றையது. ஆனால் உண்மையில் நீ ஆன்மா அதாவது தெய்வமே. மாயையில் அகப்பட்டு கடவுளை வெளியில் தேட வேண்டாம். அதிஉயர் உணர்வைக் கொண்டு உள்ளிருக்கும் தெய்வத்தை உணர்வாயாக. இதுவெ சத்தியமுமாகும் உடம்பின் மூலம் அங்கும் இங்கும் அலையாதே. முதலில் உன்மீது நம்பிக்கை(தன்னம்பிக்கை) கொள். அங்கு மிங்கும் உடம்பு அலைந்தால் மனமும் அலைந்தபடியே இருக்கும். ஆகவே ஒன்றின் மீதே நம்பிக்கை கொள். அலைய வேண்டாம். தன்னம்பிக்கையிலிருந்து சுய திருப்தியை அடைய வேண்டும். பின்பு தன்னைத் தியாகம் செய்ய வேண்டும். முதலில் ஞான நிலையை அடையலாம். ஞானநிலைக்கு அத்திபாரம் தன்னம்பிக்கையே ஆகம். மற்றவர்களின் பின்னால் ஓடாது உன்மீது நம்பிக்கை கொண்டு ஞான நிலையை அடைவாயாக.

சாந்தியும் பரவசமும் உள்ளேயே இருக்கின்றன. சிலர் இமயமலைக்குச் சாந்திகிடைக்கும் என்று போவார்கள். அவர்களின். உடல் மட்டுமேபோகும். மனம் பட்டணத்தில் நின்று விடும். எமது மனப்பாங்கு, வழக்கம் மாறவேண்டும். அநேகர் அங்கும் இங்கும் தேவையான தகவல்களைச் சேகரிப்பார்கள். ஆனால் அலையும் உள்ளத்தை மாற்றமடைய உபயோகிக்கமாட்டார்கள். பலவிதமான பழங்களைப் பற்றிய தகவலினால் பசிதீராது. ஒன்றையாகிலும் புசித்தால் பசிதீரும். ஆகவே பல தகவல்களைச் சோதித்துப் பிரசங்கம் செய்வதிலும் பார்க்க ஒன்றையாகிலும் பின்பற்றினால் பயன் கிடைக்கும்.

அருளுரைபிருந்தாவனம் 28.03.1975.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

### வட பிராந்தியம்

#### கிராம சேவை - ஆனைவிழுந்தான் குளம்

15.1.2017 திகதியன்று ஆனை விழுந்தான் குள கிராமத்தில் கிராம சேவை இடம்பெற்றது. இதன் போது மருத்துவ முகாம், பிரார்த்தனை ஊக்குவிப்பு, உலர் உணவு விநியோகம், பாடசாலை மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல், வீடியோ கடக்காட்சி மூலம் சாயியின் செய்தி வழங்கல் போன்ற சேவைச் செயற்பாடுகள் இடம்பெற்றது.



#### அன்புவார ஒன்றுகூடல்


அன்புவார ஒன்றுகூடல் நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வலயக்கல்வி பணிப்பாளர், சத்திய சாயி நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கிளிநொச்சியில் 85 பாடசாலைகளை சேர்ந்த 435 மாணவர்கள் பங்குபற்றினார்கள். நிகழ்வில் விருந்தினர்களாக பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், சத்திய சாயி நிறுவன மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



#### பாலவிகாஸ் கண்காட்சி

மனித மேம்பாட்டுக் கண்காட்சி 19.2.2017 திகதியன்று வடமராட்சியில் இரண்டாவது தடவையாக இடம்பெற்றது. இதன்போது விருந்தினராக சத்திய சாயி நிறுவன மத்தியசபைத் தலைவர், பிரதி மத்திய இணைப்பாளர், சாயி நிறுவன பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்வுகள்



வெளி மண்டபத்தில் நிகழ்வில் கலந்து கொண்டோர்





கலை நிகழ்வுகள்





அன்புவார ஒன்றுகூடல் பரிசில் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.
85 பாடசாலையை சேர்ந்த 435 மாணவர்கள் பங்கு பற்றினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் சாயி நிலையம் - வட பிராந்தியம்




முகப்புப் பகுதி




பிரார்த்தனை மண்டபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org